Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 146 • 24.06.2018






## "புதிய வடிவத்தில் நிச்சயம் முதலமைச்சர் களமிறங்குவார்"

பொ.ஐங்கரநேசன் நேர்காணல்

## மட்டக்களப்பு சமுர்த்தி ஊழல்கள்

## வாசனை திரவியங்கள் யாருக்கு எது பெஸ்ட்?

## கோத்தபாய தேர்தலில் போட்டியிடலாமா?






# புலிகள் தயாரித்த ஹெரெக் வெடிகுண்டு வெடித்ததா? வெடிக்கவில்லையா?

- என்ன நடந்தது?









coustomer is king



# கோத்தபாய தேர்தலில் போட்டியிட முடியுமா?

நிஷா

கோத்தபாய ராஜபக்ச எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா? அவரது அமெரிக்க குடியுரிமை விவகாரத்தின் முடிவு எப்படியிருக்கும்? அமெரிக்கா தூதர் மஹிந்த ராஜபக்சவிற்கு வழங்கிய செய்தி என்ன? இதுதான் அண்மைய நாட்களில் இலங்கை அரசியலில் அதிகம் பேசப்படும் விவகாரம்.

இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அதிருப்தியில் உள்ளவர்களும், மஹிந்த அணியினரும் அடுத்த ஜனாதிபதியாக கோத்தபாயவை முன்னிறுத்தி எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பிற்கு வேகத் தடை போட்டுள்ளார் இலங்கையிலிருந்து விடைபெற்று செல்லும் அமெரிக்க தூதர் அதுல் கெசாப்.

கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகுவதை அமெரிக்கா துளியும் விரும்பவில்லை, அவரை வேட்பாளராக முன்னிறுத்தும் வேலையை விட்டு விடுங்கள் என்பதுதான் கெசாப் சொன்ன செய்தி.

2015இல் இலங்கையின் ஆட்சி மாற்றத்தில் மேற்குலகத்தினதும், இந்தியாவினதும் பங்கு எந்தளவில் இருந்தது என்பது, எல்லோரையும் விட மஹிந்த ராஜபக்சவிற்கு நன்றாக தெரியும். வீட்டுக்கு போன பின்னர் அதைப்பற்றி பலமுறை பேசியும் விட்டார்.

'மஹிந்த ஆட்சியில் இருந்தபோதும் சரி, வீட்டிலிருக்கும் போதும் சரி மேற்குலகின் ஆளாக இருக்கவில்லை. அதிகமும் சீனாவின் செல்லப்பிள்ளையாகவே இருக்கிறார். அவர் வீட்டிலிருந்த போதும், சீனத்தூதர் அண்மையில் அவருடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நிலையில்தான், அமெரிக்க தூதர் அதுல் கெசாப் மஹிந்த சந்திப்பு நடந்தது. மஹிந்த தோற்கடிக்கப்பட்ட பின்னர் முதல்முறையாக அமெரிக்க தூதர் ஒருவர் அவருடன் பேச்சு நடத்தியிருக்கிறார். அதுவும் "செக்" வைக்கும் சந்திப்பாக அமைந்தது.

இது மரியாதை நிமித்தமான சந்திப்பென இரண்டு தரப்பும் கூறிக்கொண்டாலும், இந்த சந்திப்பு குறித்த முழுமையான தகவல்களை வெளியிட்ட லங்கா ஈ நியூஸ் செய்திகளின்படி, இது முற்றிலும் அரசியல்ரீதியிலான சந்திப்பாகவே அமைந்துள்ளது.

இந்த சந்திபின்போது, கோத்தபாயவின் அமெரிக்க குடியுரிமையை விரைவில் விலக்கி, அவர் இலங்கை அரசியலில் ஈடுபட வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டுமென மஹிந்த ராஜபக்சவே முதலில் கோரிக்கை முன்வைத்ததாக கூறப்பட்டுள்ளது.

எனினும், அது தனது எல்லைக்கு அப்பாற்பட்ட விடயம் என பதிலளித்த கெசாப், அமெரிக்காவின் நிலைப்பாட்டை . மஹிந்த ராஜபக்சவிற்கு கூறியிருக்கிறார்.

கோத்தபாய தொடர்பில் அமெரிக்கா சாதகமான நிலைப்பாட்டை எடுக்க எந்த சமயத்திலும் வாய்ப்பேயில்லையென்றுதான் தெரிகிறது. ஏனெனில், கோத்தபாய அவ்வளவிற்கு சீனாவின் ஆளாக மாறிவிட்டார். கோத்தபாய தொடர்பில் அமெரிக்கா எவ்வளவிற்கு அச்சப்படுகிறது என்பதை, அமெரிக்க தூதரக "சோஸ்"களின் மூலம் லங்கா ஈ நியூஸ் வெளிப்படுத்தியிருந்தது. அது கவனிக்கத்தக்க விசயம்.

அமெரிக்க குடியுரிமையை விலக்கிக் கொள்ள கோத்தபாய ஒரு விண்ணப்பம் செய்துள்ளார். அமெரிக்க குடியுரிமையை விலக்கிக்கொள்ள வெறும் இரண்டு வாரம் போதுமானது என முன்னர் ஒருமுறை கோத்தபாய குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் விண்ணப்பித்து சில மாதங்களாகியும் அதில் முன்னேற்றமிருக்கவில்லை. அதன் பின்னரே மஹிந்த நேரடியாக கெசாப்பிடம் இதை கேட்டிருக்கிறார்.

கோத்தபாயவின் சீன தொடர்புகள் பற்றி அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. கோத்தபாயவை அடுத்த ஜனாதிபதியாக, அரசியல் தலைவராக சீனா எப்படி தயார்படுத்தி வருகிறது என்பது குறித்த விலாவாரியான அறிக்கைகளை அமெரிக்க தயாரித்து வருகிறது.



கோத்தபாய அண்மைய வருடங்கள் வரை ஒரு இராணுவ அதிகாரியாகத்தான் நடந்து கொண்டிருந்தார். அவரது நடை, உடை, பேச்சு எல்லாவற்றிலும் ஒரு இராணுவத்தனம் இருந்தது. ஊடகங்களுடன் சுமுகமான உரையாடலை செய்வதில்லை. இதற்கு உதாரணம், அவரது பிபிசி நேர்காணல். ஆனால் கடந்த சில மாதங்களாக கோத்தபாயவின் இராணுவத்தனமான அணுகுமுறையில் சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டு, ஒரு அரசியல்வாதிக்குரிய பாசாங்கு அணுகுமுறையை கடைப்பிடிக்கிறார்.

கடந்த ஓராண்டாக சீன பல்கலைகழகங்கள், நிறுவனங்களில் கோத்தபாய கற்கைநெறிகள் சிலவற்றை மேற்கொண்டிருந்தார். சீனாவில் அரசியல் மற்றும் இராணுவத்தலைமைகளை பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட பல்கலைகழகங்களில், பயிற்சி நெறிகளில் கோத்தபாய கலந்து கொண்டிருந்தார். அந்த சமயங்களில் அவர் ஒரு அமெரிக்க பிரஜைதான். தனது பிரஜையின் நடவடிக்கைகளை அமெரிக்க நீளக்கயிற்றில் அனுமதித்தது, இறுதியில் இப்படியொரு "லொக்" போடுவதற்காகவா என்றுதான் இப்போது தோன்றுகிறது.

அண்மையில் இன்னொரு சிங்கள புலனாய்வு ஊடகத்தில் வெளியான தகவல்களையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். இலங்கை விவகாரத்தில் உன்னிப்பாக கவனம் செலுத்தி, உடனுக்குடன் தமது நாட்டுக்கு இரகசிய அறிக்கைகளை அனுப்பும் அந்த தூதரகத்தின் இரகசிய குறிப்பொன்றில், கோத்தபாயவின் நகர்வுகளிற்கு உதவ, வழிநடத்த, ஆலோசனை சொல்ல இரண்டு சீன உளவுத்துறை அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் என குறிப்பிடப்பட்டிருந்ததாக அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

கோத்தபாயவை ஜனாதிபதியாக்க சீனா பெருமளவு பண உதவியளித்து வருவதாக மேற்கு நாடுகள் பெருமளவு நிதியளித்து வருவதாக தூதரகங்களின் அறிக்கைகள் பல குறிப்பிடுகின்றன. கோத்தபாயவிற்கு ஆதரவான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும் இணையத்தளங்கள், அமைப்புக்கள், செயற்பாடுகள் அண்மையில் சடுதியாக அதிகரித்துள்ளன. கோத்தபாயவின் ஜனாதிபதி நகர்வின் அங்கமாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோத்தபாயவிற்கு அறிவார்ந்த, பொருளாதார அறிவுள்ள முகத்தை உருவாக்க ஞஞ்ஞ் என்ற அமைப்பு அண்மையில் உருவாக்கப்பட்டிருந்தது. சிங்கள புத்திஜீவிகள், படித்த உயர் வர்க்கத்தை குறிவைத்து உருவாக்கப்பட்ட இந்த அமைப்பின் முதலாவது கூட்டம், கொழும்பிலுள்ள சீனாவின் சங்கரில்லா ஹொட்டலில்தான் நடைபெற்றது.

மேற்குலகின் பின்னணியில் ஆட்சி பீடமேறிய மைத்திரி ரணில் நல்லாட்சி அரசை கவிழ்க்க, ராஜபக்ச குடும்பத்தை முன்னிறுத்தி சீனா செய்யும் நகர்வுகள் இப்போது இரகசியமான ஒன்றல்ல.


நல்லாட்சி அரசின் பலவீனங்கள் ராஜபக்சக்களிற்கு வாய்ப்பேற்படுத்தியுள்ளது. இப்போதைய நிலைமையில் அரசியல்ரீதியாக ராஜபக்சக்களை தடுத்து நிறுத்த முடியாதென்பது மேற்கிற்கு நன்றாக தெரியும். அவர்கள் களமிறங்கிய இரண்டு தலைவர்களையும் விட, ராஜபக்சக்களிற்கு சனங்களிடம் ஈர்ப்புள்ளதை கடந்த சில மாத உள்ளூர் நிலவரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. அதனால்தான், கோத்தபாயவை வேறுவிதத்தில் தடுத்து நிறுத்த அமெரிக்கா முயன்றிருக்கிறது.

கோத்தபாய நினைத்ததைபோல அமெரிக்க குடியுரிமையை விட்டு விலக முடியாது, அமெரிக்கா அதை அனுமதிக்காது என்பதை அமெரிக்கா சூசகமாக செயலிலும், மஹிந்தவிடம்

தொடர்ச்சி 8-ம் பக்கம்...

# முதலமைச்சரை ஆதரிக்கும் ரெலோ தலைமைக்குழு

ரெலோவின் தலைமைக்குழு கடந்தவாரம் 17ம் திகதி வவுனியாவில் கூடியது. மிக பரபரப்பான சந்திப்பாக இது அமைந்தது. அடுத்த வடக்கு மாகாணசபை தேர்தல் கூட்டணி எப்படி அமையுமென எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில், இந்த சந்திப்பு அதற்கான ஒரு உத்தேச வரைபடத்தை காண்பிப்பதாக அமைந்தது.



தலைமைக்குழுவின் பதினைந்து உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் பற்றிய காரசாரமான விவாதம் கூட்டத்தில் நடந்தது. ஓரிருவரை தவிர, மிகுதி அனைவருமே முதலமைச்சர் விக்னேஸ்வரனையே, அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக்க வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அதற்கு பலரும் பலவித காரணங்கள் சொன்னார்கள். அதில் முக்கியமானது மாவை சேனாதிராசா எதிர் விக்னேஸ்வரன் என்ற நிலைமை ஏற்பட்டால், அதில் விக்னேஸ்வரன் வெற்றி பெற்றுவிடுவார் என அவர்கள் கருதுகிறார்கள்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவு ஒரு எச்சரிக்கை மணியென அவர்கள்

**தீபம் X RAY**

கருதுகிறார்கள். முதலமைச்சரையும் வெளியில் விட்டுவிட்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பு தனித்து ஆட்சியமைப்பதென்பது முடியவே முடியாத காரியம் என அவர்கள் கருதுகிறார்கள். முதலமைச்சர் மற்றும் கஜேந்திரகுமார் அணியால் மட்டும் பிரச்சனையல்ல. ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவும் களமிறங்குவதை சூசகமாக குறிப்பிட்டுள்ளார். அது ஈ.பி.டி.பி வாக்கு வங்கியை கொஞ்சம் அதிகரிக்க செய்யும்.

தேசிய கட்சிகள் இரண்டும் வடக்கில் ஆபத்தனளவில் வீங்கிக் கொண்டு வருகின்றன. அதை சமாளிக்க கூட்டமைப்பிடம் எந்த வியூகமும் கிடையாது. இப்படி எல்லா பக்கத்திலும் உடைவு வரும்போது, கூட்டமைப்பிற்குள்ளும் பிளவுபட்டு தேர்தலை சந்தித்தால் அது பேரிடியாகவும் அமைய வாய்ப்பிருக்கிறது என்று அபிப்பிராயப் பட்டனர்.

விக்னேஸ்வரனை கூட்டமைப்பிற்குள் கொண்டு வருவதன் மூலம், பரந்துபட்டளவிலான கூட்டணியொன்றை அமைக்கலாமென்று பலரும் அபிப்பிராயப்பட்டனர். முதலமைச்சருடன் நெருக்கமாக சில கட்சிகள், அமைப்புக்கள் செயற்படுகின்றன. அவர்களையெல்லாம் உள்வாங்கலாம். தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற அமைப்புக்களையெல்லாம் உள்வாங்கலாம் என்றனர். அப்படியொரு பரந்துபட்டளவிலான கூட்டணி உருவாகினால்தான் இனிவரும் நாட்களில் தேர்தலை இலகுவாக வென்றெடுக்கவாய்ப்பாகஇருக்குமென அபிப்பிராயப்பட்டனர்.

மாவையருக்கு ஒரேயடியாக முதலமைச்சர் இல்லையென சொல்ல முடியாது. அதற்கு மாற்றாக வெறொரு ஐடியா முன்வைக்கப்பட்டது. மூத்த தலைவரான சம்பந்தர் மூப்பினால் முன்னரைப்போல ஓடியாடி திரிய முடியாமலிருக்கிறார். இதற்கடுத்த மூத்த தலைவரான மாவையர், கொழும்பை மையப்படுத்தி தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனை விவகாரத்தை கையாளும் பொறுப்பை தலைமையேற்று கவனித்துக் கொள்ளட்டும் என பரிந்துரைக்கலாமென்ற அபிப்பிராயம்வைக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இப்படியொரு கூட்டணிக்குள் வருமென எதிர்பார்க்க முடியாது. ஆனாலும், ரெலோ தரப்பில் இப்படியொரு யோசனை முன்வைக்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இறுதியாக நடந்தபோது, முதலமைச்சர் விக்னேஸ்வரனை கடுமையாக குற்றம் சுமத்தி பேசியவர் செல்வம் அடைக்கலநாதன். ஆனாலும், அவர் குறிப்பிட்டது விக்னேஸ்வரன் என்ற தனிமனிதனையல்ல, அவரது அரசியல்ரீதியான செயற்பாடுகளைத்தான்.

தலைமைக்குழு கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் வெளிப்படுத்திய முக்கியமான செய்தி அதற்கு முதல் வாரம் செல்வம் அடைக்கலநாதனுக்கும், முதலமைச்சர் விக்னேஸ்வரனிற்குமிடையில் நடந்த இரகசிய சந்திப்பு பற்றியது.

இதை சொல்வதற்கு முன்னர் ரெலோ தலைமைக்குழுவில் எடுக்கப்பட்ட இன்னொரு முடிவைப்பற்றியும் சொல்ல வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற தேசியப்பட்டியல் எம்.பிக்கள் உள்ளனர்.

அதில் ஒன்றை இரண்டரை வருடத்தில் தமக்கு விட்டுத்தருவதாக தமிழரசுக்கட்சி வாக்களித்ததாக ரெலோ கூறி வருகிறது. ஆனால் தமிழரசுக்கட்சி குறிப்பிட்ட இரண்டரை வருட அவகாசம் முடிந்துவிட்டது. ஆனால் தேசியப்பட்டியலில் மாற்றம் நிகழவில்லை. அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தின்போது, இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசாவை சந்தித்து தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பாக பேசுவதென முடிவெடுக்கப்பட்டது.

# தேசியப்பட்டியல் சர்ச்சை

இந்த பகுதியின் ஆரம்பத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்களை வைத்துக்கொண்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பு தலைமை படும்பாடு இருக்கிறதே... அது பெரும்பாடு!

கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனங்களில் ஒன்றை பங்காளி கட்சியான ரெலோவுடன் பகிர்வதாக ஆரம்பத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இரண்டு ஆசனங்களையும் முதல் இரண்டரை வருடமும் தமிழரசுக்கட்சி வைத்திருப்பதென்றும், அடுத்த இரண்டரை வருடங்கள் ரெலோவிற்குவழங்குவதாக வாக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்னும் நடக்கவில்லை.

தேசியப்பட்டியலுக்கு பங்காளிகளுடன்தான் தமிழரசுக்கட்சி மல்லுக்கட்டகிறது என்றல்ல.உள்ளுக்குள்ளேயே நிறைய பிடுங்குப்பாடுகள் உள்ளன.

தமிழரசுக்கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பாக கட்சி தலைவருக்கு ஆறு கடிதங்களை அனுப்பிவிட்டார் என்பதை கடந்த வாரம் இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். கடந்த 16ம் திகதி முல்லைத்தீவில் நடந்த தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில், இது பெரிய விவகாரமாக வெடித்துள்ளது.

வழக்கமாக கட்சி கூட்டத்தின் பிரமுகர் பகுதியில் முன்பகுதியில் உட்காரும் குலநாயகம் இம்முறை இப்படி உட்காரவில்லை. ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார். கூட்டம் முடியும் தறுவாயில் எழுந்த குலநாயகம், தான் ஓரமாக ஏன் உட்கார்ந்திருக்கிறேன் என்று யாரும் கேட்கவில்லையென குறைபட்டு, உணர்ச்சிவசப்பட்டவராக பேசியிருக்கிறார். கட்சிக்காக 56 வருடங்கள் உழைத்ததன்னை உதாசீனம் செய்வதாகவும், தேசியப்பட்டியல் விவகாரம் குறித்து தனக்கு பதிலளிக்கும்படியும் கேட்டிருக்கிறார்.

இப்படியொரு சிக்கலை எதிர்பார்த்தோ என்னவோ, அதற்கு முதல் நாளே அரசியல்சபை கூட்டத்தில் இந்த விவகாரத்தை ஆராய்ந்து முடிவெடுத்துள்ளனர். தற்போது தேசியப்பட்டியல் எம்.பிகளாக இருக்கும் இருவரையும் மாற்றத் தேவையில்லையென்று தலைவர்கள் அபிப்பிராயப்பட, அதுவே முடிவாக எடுக்கப்பட்டது. ஆனால் குலநாயகத்திடம் மறுநாள் இதை கூட்டத்தில் வைத்து சொல்லாமல், கட்சி செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஊடாக அறிவிப்பதென முடிவாகியது.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# மட்டக்களப்பில் பனிப்போர்!

இது கொஞ்சம் பூடகமான செய்தி. சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விபரங்கள், கட்சிகளை வெளிப்படையாக சொல்லப் போவதில்லை. ஆனால் புரியும் விதமாக சொல்வோம். செய்திகளை கவனித்து வருபவர்கள் சட்டென புரிந்து கொள்வார்கள்.

இது கிழக்கு சம்பந்தப்பட்ட விசயம். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ள இரண்டு கட்சிகள் சம்பந்தப்பட்டது.

கிழக்கு செய்திகளை கவனித்து வருபவர்கள், அங்கு இரண்டு முக்கியஸ்தர்களிற்கிடையில் ஒரு பனிப்போர் நடந்து கொண்டிருப்பதை புரிந்து கொண்டிருப்பார்கள். இரண்டு முக்கியஸ்தர்களும் ஏட்டிக்கு போட்டியாக கூட்டங்களில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் ஏதாவது சொன்னால், மற்றவர் மாறாக சொல்வார். கூட்டமைப்பில் இருப்பதென்றால் ஒழுங்காக இருக்க வேண்டும், இல்லையென்றால் போய்விட வேண்டுமென்றெல்லாம் அடிக்கடி சொல்லப்படுகிறதே... இந்த பிரச்சனைதான் அப்படியெல்லாம் பேசப்படுகிறது.

நாம் குறிப்பிடும் முக்கியஸ்தர்கள் கூட்டமைப்பின் இரண்டு கட்சிகளை சேர்ந்தவர்கள்.

அண்மையில், குறிப்பிட்ட ஒருவர் மற்றையவரை தொலைபேசியில் அழைத்து, கூட்டமைப்பின் கட்சிகளிற்கிடையிலான கூட்டம் மட்டக்களப்பில் நடக்கவுள்ளது, அதில் கலந்து கொள்ளுமாறு அழைத்துள்ளார்.

மற்றையவர் கட்சிக்கு கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும். கூட்டமைப்பு கட்சிகளிற்கிடையிலான கூட்டத்தை மாவட்ட மட்டத்தில் தீர்மானிக்க முடியாது, மாவட்ட மட்டங்களில் கூட்டமைப்பு குழுக்களும் அமைக்கப்படவில்லை, பிறகெப்படி கலந்துகொள்வது? கட்சி தலைமைகள் தீர்மானித்து அறிவித்தால், வரலாம் என சொல்லியிருக்கிறார். இது அழைப்பு விடுத்தவருக்கு பயங்கர கோபமாம்.

அடுத்தடுத்த நாட்களில் பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இரண்டாவது முக்கியஸ்தர் (அழைப்பை மறுத்தவர்) கொஞ்சம் காராரமான விசயங்களை பேசியிருக்கிறார். அன்றிரவு மற்ற முக்கியஸ்தர் அவருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினார். அதில் "கதைப்பதை அளந்து கதையுங்கள்" என்று இருந்ததாம்!

# காரணமான மௌனம்!



அண்மையில் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் இளைஞர்களுடனான சந்திப்பு நடந்தது. இதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார். அந்த உரையின் ஒரு பகுதி கடும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

"அன்ரன் பாலசிங்கத்தின் ஆலோசனையை கேட்காததாலேயே அழிவு" ஏற்பட்டது என்று அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார். இளைஞர்கள் மத்தியில் ஆற்றிய உரை... இளைஞர்களால் அதிகம் கையாளப்படும் சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பை சம்பாதித்தது.

இளைஞர் ஒருவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையொன்றை அடிப்படையாக வைத்தே முதலமைச்சர் அப்படியான கருத்தை சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது அதுவல்ல விசயம். இதில் இரண்டு பக்கமும் அடிவாங்கும் மத்தளமாக மாட்டியது தமிழ் தேசிய மக்கள் முன்னணி.

பொதுவாகவே விடுதலைப்புலிகளை, விடுதலை போராட்டத்தை பற்றி யாராவது சர்ச்சைக்குரிய கருத்துக்களை சொன்னால், முதலில் எதிர்ப்பு குரலை பதிவு செய்வது முன்னணிதான். தேவையென்றால், ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை கூட நடத்துவார்கள். ஆனால் இந்த விடயத்தில், அவர்களிடமிருந்து மூச்சும் வரவில்லை. அப்படியானால், முதலமைச்சரின் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுதானே அர்த்தப்படும். ஆனால், அதற்கு வாய்ப்பு குறைவே, ஏதோ "சம்திங்" இருக்க வேண்டுமேயென கட்சிக்குள் விசாரித்து பார்த்தால் அங்கு உண்மையில்கடும் அதிருப்தியிருக்கிறது. ஆனால் வெளியிடவில்லை!

முதலமைச்சரின் கருத்து பிழையானது, கண்டிக்க வேண்டியது என்பதில் கட்சி முக்கியஸ்தர்களிடம் மாற்று அபிப்பிராயம் இல்லையாம். ஆனால் ஏன் அதை பகிரங்கப்படுத்தவில்லை?

மாகாணசபை தேர்தலில் முதலமைச்சருடன் அரசியல் கூட்டணி வைக்க வேண்டிய நிலைமையேற்படலாமென்று கருதியே இந்த அமைதியும், பொறுமையும்!

# முதலமைச்சர்- செல்வம் அடைக்கலநாதன் இரகசிய பேச்சு

இரண்டு வாரங்களிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் முதலமைச்சருக்கும், செல்வம் அடைக்கலநாதனிற்குமிடையில் இரகசிய சந்திப்பொன்று நடந்தது. இரண்டு தரப்பும் சந்திப்பை பற்றி வெளியில் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால்சந்திப்பில்பேசப்பட்ட விடயங்கள் பற்றி தீபம் தகவல் திரட்டியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு வெளியேறக்கூடாதென செல்வம் அடைக்கலநாதன் தரப்பிலிருந்து முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அதற்கு உடனடியாக சாதகமாக பதிலளிக்கும் நிலைமையில் முதலமைச்சர் இல்லை. தன்னுடன் இணைந்து செயற்படுபவர்களையெல்லாம் அம்போவென நடுத்தெருவில் விட்டுவட்டு வரதான் தயாரில்லையென முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உங்கள் அணியிலுள்ள யாரையும் அழைத்தபடி நீங்கள் கூட்டமைப்பிற்குள் வரலாமென்று ரெலோ தரப்பில் கூறப்பட்டது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அதற்குள் அடங்கும்!

எனினும், அந்த சந்திப்பில் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

தீபம் அறிந்த வரையில் செல்வம் அடைக்கலநானின் பேச்சின் பின்னர், முதலமைச்சர் கூடுதல் எச்சரிக்கையெடுத்து விவகாரங்களை கவனித்துக் கொள்கிறார். "கூட்டமைப்பிற்குள் இணையுங்கள் என அழைப்பு விடுக்கிறார்கள். அதை நம்பி செல்வதிலும் ஆபத்துக்கள் உள்ளது. தனியான அணியொன்றை உருவாக்குவதை தடுப்பதற்கான உத்தியாகவும் இதை பாவிக்கலாம். கடைசிவரை இப்படியே இழுத்து விட்டு, கடைசி கட்டத்தில் அவர்கள் கவிழ்த்துவிட்டால் நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது" என்ற சாரப்பட முதலமைச்சருக்கு ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளது. முதலமைச்சரும் அதை ஆமோதிக்கும் விதமாக கேட்டிருக்கிறார்.

# வடமாகாணத்திற்கான சுயதொழில் முயற்சிகளுக்கான உதவித்திட்டம்

வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், வறுமையில் வாடும் குடும்பங்கள் மற்றும் முன்னாள் போராளிகள் போன்றவர்களிற்கான சுயதொழில் ஊக்குவிப்பு திட்டம் ஒன்றை யாழ் வணிகர் கழகம் ஊடாக முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் அறிவித்துள்ளார்.

நீண்டகாலத்தில் திருப்பி செலுத்தக்கூடிய கடனுதவித் திட்டமான இதற்கு, 4% என்ற குறைந்த வட்டியே அறவிடப்படவுள்ளது. புனர்வாழ்வு அதிகாரசபையுடன் இணைந்து இந்த திட்டம் ஒழுங்கமைக்கப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் சிறிய கைத்தொழில் முயற்சிகள், உணவு உற்பத்திகள், உள்ளூர் மூலப்பொருட்களை பாவித்து உற்பத்தி மேற்கொள்ளல் போன்ற முயற்சிகளில் ஈடுபடவிருப்பவர்களிற்கு இரண்டரை இலட்சம் ரூபா வரையிலான கடன் திட்டம் வழங்கப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்புபவர்கள், தங்கள் திட்டங்களுடன் 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது 0212228593 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தீபம் லென்ஸ்

# காப்பாற்றப்படுகிறார்களா பொறுப்பு தவறிய உத்தியோகத்தர்கள்?

## ஓட்டமாவடி மேற்கு பிரதேசசெயலக பகுதி ஊழல்கள்

### தலை சுற்ற வைக்கும் ஊழல் தொடர் 06



மட்டக்களப்பின் சமுர்த்தி மோசடிகள் தொடர்பாக தீபத்தில் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வந்திருந்தோம். அதை நிறுத்துவதற்கு அதிகாரிகள் மட்டத்திலிருந்து கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதையும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இந்தவகையான அழுத்தங்களிற்காக ஊழல், மோசடிகளுடன் தீபம் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளாது என்பதையும் அப்போதே குறிப்பிட்டிருந்தோம்.

தீபத்தின் இந்த வெளிப்படுத்தல்கள் எந்தவொரு தனிநபருக்கும் எதிரானதல்ல. மக்களிற்கான வளங்களும், நிர்வாக முறைமையும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை அம்பலப்படுத்தி சரிசெய்வதே இதன் ஒரே நோக்கம். ஆனால் துரதிஸ்டவசமாக, நமது அம்பலப்படுத்தல்களை தடுப்பதில் அதிகாரிகள் காட்டும் அக்கறையை,நாம் சுட்டிக்காட்டும் தவறுகளை கண்டறிவதிலோ, சம்பந்தப்பட்டவர்களை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்துவதிலோ காண்பிக்கவில்லை யென்பதே உண்மை.

மக்களின் அதிகாரம் ஊடகங்களின் செய்திதான். அந்த அடிப்படையில் மட்டக்களப்பின் மேலும் சில மோசடிகளை அம்பலப்படுத்துவதென தீபம் முடிவுசெய்துள்ளது. அந்தவகையில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில், சமுர்த்தி திவிநெகும வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தில் நடைபெற்ற முறைகேடுகளை அம்பலப்படுத்துகிறோம். 2011 இல் இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் கால்நடைகள் என்பன உரிய பெறுமதிக்கோ அல்லது முற்றாகவோ வழங்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர்களால் நடத்தப்பட்ட விசாரணையில் இந்த மோசடிகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பில் சில பகுதிகளில் நடந்த மோசடிகளை பட்டியல்படுத்தியிருந்தோம். அந்த மோசடிகளிற்கு சற்றும் குறைவில்லாதவை ஓட்டமாவடி மேற்குபிரதேசசபை பகுதியில் நடந்த சம்பவங்கள்.

இந்த பகுதியில் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட உபகரணங்களை அதிகாரிகளே ஆட்டையை போட்டுள்ளனர். அதற்காக பயனாளிகளின் கையொப்பத்தை தாமே போலியாக இட்டு, அந்த உதவிப்பொருட்களை சுருட்டியுள்ளனர்.

இங்கு கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொண்ட பின்னர், அது தொடர்பான அறிக்கையை 05.05.2014 இல் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு வழங்கியுள்ளனர். ஒவ்வொரு மோசடி சம்பவமாக குறிப்பிட்டு, மோசடி முறைகள் குறித்த குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. அந்த குறிப்புக்களின்படி, சில பயனாளிகளிற்கு பகுதியளவான உதவிகளே வழங்கப்பட்டுள்ளன. ஆனால், முழுமையாக உதவி வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராமத்தில் வசிக்காத பயனாளிகளின் பெயரிலும் மோசடியாக உத்தியோகத்தர்களே பொருட்களை பெற்றுள்ளனர். பொருள் விநியோக பட்டியல் முறையாக தயாரிக்கப்படவில்லை / மறைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ பணிப்பாளர், திட்ட உத்தியோகத்தர், வங்கி முகாமையாளர், கள உத்தியோகத்தர் ஆகியோர் தமது கடமைகளை சரிவர நிறைவேற்றவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உதவிகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகளை நேரடியாக சந்தித்தும் கணக்காய்வுகுழு விசாரணை நடத்தியிருக்கிறது. இதன்படி பாரதூரமான எட்டு சம்பவங்களை அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த சம்பவங்களில் தொடர்புபட்டிருந்த பயனாளிகளின் பெயர்களை வெளியிடுவதை தவிர்த்து விட்டுள்ளோம். பயனாளியொருவருக்கு 40,000 ரூபா பெறுமதியான கறவைப்பசு வழங்கப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், குறித்த பயனாளிக்கு அந்த உதவி வழங்கப்படவில்லையென அந்த பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் வாக்குமூலமளித்துள்ளார்.

இன்னொரு பயனாளிக்கு 10,030 ரூபா பெறுமதியான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த பயனாளியும் தனக்கு உதவி கிட்டவில்லையென வாக்குமூலமளித்துள்ளார்.

இன்னொரு பயனாளிக்கு 13,062 ரூபா பெறுமதியான தானியம் அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், தனக்கு வாழ்வாதார உதவிகள் கிட்டவில்லையென்றும், தனது பெயரை பயன்படுத்தி சமுர்த்தி அதிகாரிகள் பொருட்களை பெற்றுள்ளனர் என்றும் வாக்குமூலமளித்துள்ளார்.

30,000 ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணமும், 28,950 ரூபா பெறுமதியாக தையல் இயந்திரமும் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டதாக உள்ள ஆவணங்களும் மோசடியானவை என பயனாளிகள் வாக்குமூலமளித்துள்ளனர்.

ஒரு சமுர்த்தி உத்தியோகத்தரின் வாக்குமூலத்தின்படி, அவரது பிரிவில் இல்லாத இரண்டு நபர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டு, அவர்களின் பெயரில் முறையே 9,222 ரூபா, 28,950 ரூபா பெறுமதியான கைத்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கணக்காய்வுகள் 2014 இல் முடிவடைந்து, மே மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இதனுடன் தொடர்புபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், அதன் மூலமே எதிர்காலத்தில் இப்படியான நடவடிக்கைகளை தவிர்க்கலாமென அறிக்கையில் தெளிவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் கடந்தும், உரிய நடவடிக்கையெதுவும் எடுக்கப்படவேயில்லை.

# ‘புதிய பொறிமுறையில் முதலமைச்சர் தேர்தலில் நிச்சயம் களமிறங்குவார்’

## பொ.ஐங்கரநேசன் நேர்காணல்



முரளி

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், முன்னர் வடக்கு விவசாய அமைச்சராகவிருந்தவர். அப்பொழுது அவரைச் சுற்றி நிறைய சர்ச்சைகள் சுற்றிக்கொண்டிருந்தன. எனினும், அது எது பற்றியும் ஊடகங்களுடன் பேசாமல் இருந்தவர். அந்த சர்ச்சைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை தீபத்தில் முதன்முதலாக மனம் திறந்து பேசியிருக்கிறார். முதலமைச்சருக்கு நெருக்கமானவராக இருக்கும் ஐங்கரநேசன், முதலமைச்சர் அணியின் எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்தும் பேசியிருக்கிறார்.

**தீபம்: தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் என்ற அமைப்பை ஆரம்பித்துள்ளர்கள். இதன் நோக்கம் என்ன?**

**பொ.ஐங்கரநேசன்:** சூழலியல் என்பது முன்னர் வகுப்பறைகளில் ஒரு பாடம் என்ற நிலையில் மட்டுமே இருந்தது. ஆனால், இன்று சுற்றுச் சூழல் சார்ந்த விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபை கையாளுகின்ற அளவுக்கு நாடுகளின் அரசியலில் பிரிக்க முடியாத ஒரு அங்கம் ஆகியிருக்கிறது. உலகில் நடைபெறுகின்ற போராட்டங்களுக்கான காரணங்களாக இனம், மதம், மொழி போன்றவற்றைச் சொன்னாலும், ஆழ்ந்து நோக்கினால் அவை ஒருபுறம் வளங்களைக் கைப்பற்றுவதற்கும் இன்னொருபுறம் அந்த வளங்களைக் காப்பாற்றுவதற்குமான போராட்டங்களாகவே இருக்கும். ஈழவிடுதலைப் போராட்டம் வெளித்தோற்றத்துக்கு நில மீட்புப் போராட்டமாகத் தெரிந்தாலும் அது எமது வளங்களை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து காப்பாற்றுவதற்கான போராட்டம் தான்.

யுத்தம் முடிந்த பிறகு வளங்களின் ஆக்கிரமிப்பு முன்பைவிட வேகம் பெற்றிருக்கிறது. வடமாகாணசபை அமைச்சராக இவற்றைத் தட்டிக் கேட்கும்போது, தடுத்து நிறுத்த முயலும்போது மத்திய அரசின் விடயங்களில் தலையிடுவதற்கு எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று சொல்கிறார்கள். அவ்வாறு தலையிடுவதைக் குற்றம் என்கிறார்கள். என்னைப்பொறுத்தவரையில் தேசியமும் சூழலியமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் போன்றவை.

அரசியலில் இருந்து சூழலியலைத் தனியாகப் பிரிக்க முடியாது. சூழலியலை ஒரு பாடமாகவே படித்து வந்த எமது மக்களிடையே இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிச் சூழல் பாதுகாப்புப் பற்றியும் சூழல் அரசியல் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் செயற்படத் தூண்டுவதே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நோக்கம் ஆகும்.

**தீபம்: இந்த அமைப்பு எதிர்காலத்தில் தேர்தல் அரசியலில் ஈடுபடும் நோக்கங்களைக் கொண்டிருக்கின்றதா?**

**பொ.ஐங்கரநேசன்:** தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்துக்குத் தற்போது அப்படியொருதேவை இருப்பதாகநான் கருதவில்லை. தொடர்ந்தும் அரசியல், சமூக, சுற்றுச்சூழல் செயற்பாட்டு இயக்கமாகவே அதுதொழிற்படும்.எமது அமைப்பில் ஆயிரக்கணக்கானவர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். தேசியமும் சூழலியமும் , ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்க முடியாது என்று நான் முதலில் குறிப்பிட்டதன் அடிப்படையில், எமது பசுமை இயக்கத்தின் உறுப்பினர்களை அரசியலில் வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு. இவர்களை ஒருமுகப்படுத்தி வலுவான தமிழ்த் தேசியத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் அணிக்கு எமது ஆதரவைத் தெரிவிப்போம்.

**தீபம்: நீங்கள் முதலமைச்சருக்கு நெருக்கமானவர் என்ற கருத்து உள்ளது. அடுத்த மாகாணசபைத் தேர்தலில் எப்படியான அரசியல் அணிகள் களமிறங்குமென எதிர்பார்க்கிறீர்கள்?**

**பொ.ஐங்கரநேசன்:** சில மாதங்களுக்குப் பிறகு வரவிருக்கின்ற மாகாணசபைத்தேர்தல்தொடர்பாகஇப்போதே எதிர்வு கூறுவது கடினம். அரசியலில் கடைசி நேரத்திற்கூட எதிர்பாராத விதமாக எதுவும் நடக்கலாம.; ஆனால் போருக்குப் பிந்திய தமிழ் அரசியலில் ஒரு வினைமாற்றம் நிகழ ஆரம்பித்திருக்கிறது என்பதை மட்டும் இப்போது உறுத்ஜீயாகக் கூறலாம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஏகபிரதிநிதிகளாகக் கருதப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வாக்குச் சரிவைச் சந்தித்திருக்கிறது. அதேசமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏறுமுகமாக வியக்கத்தக்க அளவில் ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. உதிரிகளாக ஆங்காங்கே சுயேச்சைகள் கூட வெற்றிபெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் தற்செயல் விடயங்களாகக் கருத முடியாது.

போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு தாங்கள் நம்பியிருந்த தமிழ்த் தலைமைகள் தவறிவிட்டதாகக் கருதுகிறார்கள். அவர்கள் போருக்குப் பிந்திய நிலைமாறுகால அரசியலில் போராட்டத்தின் தொடர்ச்சியைப் பேணவல்ல புதிய தலைமையொன்றைத் தேட ஆரம்பித்துள்ளார்கள் என்பதைத்தான் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அத்தகைய தலைமையாக முதலமைச்சர் விக்னேஸ்வரனையே மாற்றத்தை விரும்புகின்ற தமிழ்மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த முதலமைச்சராகவும் அவரே நீடிக்க வேண்டும் என்றும் விரும்புகிறார்கள்.

மக்கள் விருப்பத்தைத் தான் புறக்கணிக்க முடியாது என்று முதலமைச்சரும் தெரிவித்திருக்கிறார். இந்நிலையில் தேர்தலில் களம் இறங்குவதற்கு முதலமைச்சர் புதிய பொறிமுறையொன்றைக் உருவாக்கத்தானே வேண்டும். அது என்னவென்பதை அவர் கூறுவதுதான் பொருத்தமானது.

**தீபம் : விக்னேஸ்வரன் ஆளுமையுள்ள முதலமைச்சராக இதுவரையில் தன்னை நிரூபிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டு உள்ளதே?**

**பொ.ஐங்கரநேசன்:** இந்தக் குற்றச்சாட்டுகள் அரசியல் லீறிதியானவை. போருக்குப்பிந்திய ஜனநாயகவெளியில் எல்லோரும் தங்களைத் தலைவர்களாக முன்னிறுத்திக்கொள்ள முட்டிமோதிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் முதலமைச்சர் கனவில் மிதப்பவர்கள் இருக்கின்ற முதலமைச்சரை ஏதோ ஒரு வகையில் குறைசொல்லித்தானே ஆகவேண்டும்.

மாகாணசபை முறைமையை நிர்வகிக்கும் 13 ஆவது திருத்தச்சட்டம் மாகாணசபையை ஒரு சவலைப் பிள்ளையாகவே பிரசவித்து வைத்திருக்கிறது. அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிடம் குவிந்திருக்கும்போது மத்திய அரசின் கைதூக்கல் இல்லாமல் மாகாணசபையால் எழுந்து நிற்க முடியாது. ஆனால் மத்திய அரசு தமிழ் மக்கள் பலம் பெற்று விடக் கூடாது என்பதில் கருத்தாக இருக்கிறது.

தொடர்ச்சி 10-ம் பக்கம்...



# பொறுப்பற்ற தனம்!

கிளிநொச்சியில் மக்கள் குடியிருப்பிற்குள் புகுந்த சிறுத்தையொன்று கடந்த 21ம் திகதி பொறுப்பற்ற விதத்தில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளது. அந்த சிறுத்தையை அடித்து கொன்ற பொதுமக்களிற்கு காட்டுயிர்கள் பற்றியோ, காட்டுயிர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்புணர்வு பற்றியே போதிய விழிப்புணர்ச்சிகள் இல்லாமல் இருக்கலாம்.

எனினும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் பொறுப்புணர்வற்ற தன்மை இதில் வெளிப்பட்டுள்ளது.

சிறுத்தை காலை 6.30 மணியளவில் மக்கள் குடியிருப்பிற்குள் காணப்பட்டது. அது கொல்லப்படும் போது மதியம் 12.30. இடைப்பட்ட ஆறு மணித்தியாலத்திற்குள் சிறுத்தையை கிராமத்தை விட்டு அப்புறப்படுத்த முடியாத செயலற்ற நிலையிலா வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளது?

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது பிரதேசங்களை எல்லையிடுவதில் காட்டும் அக்கறையையும், செயல்திறனையும் மிருகங்களை பாதுகாப்பதில் செலுத்துவதில்லையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.


ஆறு மணித்தியாலம் மக்கள் குடியிருப்பிற்குள் நின்ற சிறுத்தையை மயக்க ஊசி மூலமோ, வலை போட்டோ பிடித்து பாதுகாப்பாக அகற்ற முடியவில்லையென்றால், உண்மையிலேயே வனஜீவராசிகள் திணைக்களத்தின் தொழில் நேர்த்தி குறித்த கேள்வியை எழுப்புகிறது. வனஜீவராசிகள் திணைக்களம்தான் இப்படி யென்றால், கிராமத்தவர்களிற்கு காட்டுயிர்கள் தொடர்பான பொறுப்புணர்வு ஏன் இல்லாமல் போனது?.

வழிதவறி வந்த சிறுத்தையை சுற்றிவளைத்து கலவரமூட்டினால், அச்சத்தில் அது தாக்கவே செய்யும். காடுகள் சுருங்கி, காட்டுயிர்களின் வாழிடங்கள் இல்லாமல் போய்விட்டது. கடுமையான நீர்ப்பஞ்சம் வேறு வாட்டுகிறது. காட்டின் எல்லை கிராமங்களிற்குள் காட்டுயிர்கள் படையெடுப்பதை தவிர்க்க முடியாது. ஏனெனில், அந்த உயிரினங்களின் வாழிடங்களையே நாம் ஆக்கிரமித்துள்ளோம்.

மிகப்பெரிய இந்த வகையான சிறுத்தைகள் வன்னி காடுகளில் மிக அரிதானவையாகவே இருக்கும். விரல் விட்டு எண்ணத்தக்களவானவைதான் இருக்கும். காட்டுயிர்களின் வாழ்க்கையில் மனிதர்கள் குறுக்கறுத்து, அவற்றின் வாழிடங்களை அழித்து, அவற்றிற்கு வாழ்க்கை நெருக்கடியை கொடுத்ததுமல்லாமல், வழிதவறி வரும் காட்டு யிர்களை எப்படி அணுகுவதென்பதை தெரியாமல் இருக்கிறோம் என்பது எவ்வளவு பெரிய அதிர்ச்சியான செய்தி!

சிறுத்தையை அடித்து கொன்று விட்டு, அத்துடன் செல்பி எடுத்த இளைஞர்கள் அனேகர். உயிரிழந்த நிலையிலோ, குற்றுயிரான நிலையிலோ, அந்த சிறுத்தையை கொடுமைப்படுத்தும் இளைஞர்களின் வீடியோ வெளியாகியிருக்கிறது. காட்டுயிர்கள் தொடர்பாக ஒரு துளியும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் இல்லாத ஒரு இளைஞர் சமூகத்தை உருவாக்கி வைத்திருக்கிறோம் என்பது... நமது சமூக உருவாக்கத்தையே கேள்விக்குட்படுத்துவது.





இந்த பூமியில் பொறுப்புணர்வுடன் வாழும் இனமாக தமிழர்கள் இன்னும் பரிணமிக்கவில்லை யென்பது மட்டும் கிளிநொச்சி சம்பவத்தின் மூலம் வெளிப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கு சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இரண்டு பதிவுகளை இணைத்துள்ளோம்.

காட்டிலிருந்து ஒரு சிறுத்தை
நாட்டுக்கு வருகிறது என்றால்
ஓராயிரம் பாலை மரங்களும்
ஓராயிரம் தேக்கு மரங்களும்
ஓராயிரம் முதிரை மரங்களும்
கொள்ளை போய்விட்டன என்று அர்த்தம்
ஒரு பேராற்றின் குடும்பமே
இறந்துவிட்டது என்று அர்த்தம்
பத்தாயிரம் பறவைகள்
கடல்கடந்து பறந்துவிட்டன என்று அர்த்தம்
நூறாயிரம் வண்ணத்துப்பூச்சிகளும்
ஆயிரமாயிரம் தேனீக்களும்
செத்துப்போய்விட்டன என்று அர்த்தம்
ஒரு போகமல்ல
பல போகங்கள்
பொய்க்கப்போகின்றன என்று அர்த்தம்
மோப்பம் பிழைத்து
வழிதவறி
வந்த அச்சிறுத்தையை கொன்ற நாங்கள்
எங்களுடைய குடும்ப
குழந்தைகளையும் பெண்களையும்
உயிரோடு
கொளுத்திக் களித்தோமென்று அர்த்தம்

- நட்சத்திரன் செவ்விந்தியன்

இலங்கையில் புலிகளுக்கும் இந்தியப்படை களுக்கும் யுத்தம் தொடங்கியவேளை புலிகளின். 3 ம் இலக்க முகாமில் ஒரு சிறுத்தை குட்டியும் இருந்தது. புலிகள் பின்வாங்கி சென்று கொண்டிருந்தபோது அதனையும் காவிக்கொண்டே சென்றனர். சங்கானைக்கும் சண்டிலிப்பாய் பகுதிக்குமிடையில் திடீரென இந்திய இராணுவத்தோடு மோதல் தொடங்கிவிட. சிறுத்தை மிரண்டு ஓடி விடாமலிருக்க ஒரு சாக்கு பையில் போட்டு கட்டி வைத்து விட்டு சண்டை நடந்தது. பல மணிநேரம் நீண்ட சண்டையில் ஒரு போராளி இறந்தும் செல்வராசா வாத்தி காயமடைந்து போக. இறந்த போராளியின் உடலையும். காயமடைந்தவர் சிறுத்தை குட்டி எல்லாவற்றையும் தூக்கி கொண்டு முற்றுகையை உடைத்து புலிகள் அளவெட்டி பக்கம் போனதும் போராளியின் உடலை புதைத்து விட்டு சிறுத்தைக்கு உணவு கொடுக்க சாக்கு பையை அவிழ்த்தபோது மிரண்டு போயிருந்த சிறுத்தை பலரை விறாண்டி கடித்தும் விட்டது.அதை சுட்டு கொன்றுவிட. ஒரு செக்கன் போதுமானது. ஆனால் அதனை பிடித்து மீண்டும் சாக்கு பையில் போட்டுவிட்டு தொடர்ந்தும் அதனை காவிக்கொண்டு பயணிக்க முடியாது என்பதால் பற்றை காடும் பனை மரங்களும் அதிகமாக இருந்த விளான் பகுதியில் அதனை கொண்டு போய் விட்டு விட்டார்கள். சில காலத்தின் பின்னர். "பிரபாகரன் வளர்த்த செல்லப் பிராணி தெல்லிப்பழையில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டது விரைவில் பிரபாகரனையும் பிடித்து விடுவோம் என்று இராணுவ அதிகாரி தெரிவித்தார்." என்று அந்த சிறுத்தை குட்டியின் படத்தோடு செய்தி வெளியாகியிருந்தது. அன்றிரவே தெல்லிப்பழையில் இந்திய இராணுவம் மீது தாக்குதலும் நடந்தது ...இன்று கிளி நொச்சியில் அடித்துக் கொல்லப்பட்ட சிறுத்தைக்குட்டியின் படத்தை பார்த்தபோது அந்த சம்பவம் நினைவுக்கு வந்து தொலைத்தது.

*Gowripal Sathiri Sri*

---


3-ம் பக்க தொடர்ச்சி...

வெளிப்படையாக நேரிலும் சொல்லி விட்டது.

19வது திருத்தத்தின்படி, இரட்டை குடியுரிமையுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது. இரட்டை குடியுரிமையை கொண்ட கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இதனால்தான் இழந்தார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் இதை உறுதிசெய்கிறது.

மஹிந்த அணியில் பல சட்டத் தரணிகள் இருக்கிறார்கள்தான். ஆனால், அவர்களின் சட்ட அறிவை இந்நாட்களில் பலரும் கேலி செய்கி றார்கள். அமெரிக்க குடியுரிமையை விரும்பிய நேரத்தில், துரிதமாக கைவிடலாமென்றுதான் அவர்கள் இதுவரை கூறி வந்தனர். ஆனால் யதார்த்தம் அதுவல்ல என்கிறார்கள் சட்டவல்லுனர்கள்.

அமெரிக்கா ஒரேயொரு நாட்டின் இரட்டை குடியுரிமையை மட்டுமே ஏற்றுக்கொள்கிறது. அந்த நாடு இஸ்ரேல். ஆக, கோத்தபாய தன்னை இரட்டை பிரஜாவுரிமை கொண்டவராகவோ, அல்லது இலங்கையராகவோ அடை யாளப்படுத்தினால், அது தன்னளவில்



மட்டுமானதாகவே இருக்கும். அதற்கு சட்டவலு கிடையாது.

அமெரிக்க குடியுரிமையை ஒருவர் கைவிடுவதெனில், அவர் அந்த நாட்டி லிருந்து முழுமையாக வெளியேற வேண்டும். அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டு, அமெரிக்க குடியுரிமையை கைவிட முடியாது. அமெரிக்காவி லிருந்து வெளியேறி, குடியுரிமையை கைவிடப்போவதாக அவர் அறிவிக்கும் பட்சத்தில், அமெரிக்கா ஒரு விசாரணையை நடத்தும். அதற் கான காரணம் தனது நாட்டின் குடியுரிமையை கொண்டிருந்தவர், குடியுரிமையை இழந்த பின்னர் வேறெங்காவது சென்று பாதுகாப்பற்ற தன்மைக்கு தள்ளப்படமாட்டார் என்பதை பரிசீலனை செய்வதற்காகும்.

குற்றச்செயல் அல்லது வேறு காரணங்களிற்காக குடியுரிமையை கைவிட முயல்கிறாரா என்பதையும் அமெரிக்கா விசேடமாக பரிசீலிக்கும். அமெரிக்காவில் குற்றச்செயலில் சம்பந்தப்பட்டு, அல்லது வழக்கு விசாரணைக்கு முகம் கொடுக்கா மலிருக்க குடியுரிமையை கைவிட எத்தனிக்கிறாரா என்பதும் இந்த பரிசீலனைக்குள் அடங்கும். சாதாரண விவாகரத்து வழக்கொன்று ஒருவர் மீது இருந்தால்கூட, அவர் குடியுரிமையை விட்டு விலகிச்செல்ல முடியாது.


யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டார் என கோத்தபாய ராஜபக்ச மீது, அமெரிக்க நீதிமன்றங்களில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வழக்குகள் தொடர்ந்துள்ளார்கள்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களிற்கு கோத்தபாய பொறுப் பேற்க வேண்டிய ஒருவர் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை சபைக்கு சேவை வழங்குனரான ரயன் கோட்மன், அமெரிக்க காங்கிரஸ் வாரியத்துக்கு அறிக்கையொன்ற கையளித்துள்ளார். அது மிக பாரதூரமான அறிக்கை.

இந்த நிலைமையில் கோத்தபாய அமெரிக்க குடியுரிமையை கைவிட வாய்ப்பில்லை. இப்போதைய நிலையில் கோத்தபாயவிற்கு உள்ள வாய்ப்பு இலங்கை சட்டங்களிற்குள்ளால் ஏதாவது பரிகாரம் தேடல்லாமா என்பதே.

இரட்டை குடியுரிமையை உடையவர்கள் தேர்தலில் போட்டியிடுவது குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்ய ராஜபக்ச தரப்பு சட்டத்தரணிகள் முயல்வதாகவும் தகவலுள்ளது. அரசியலமைப்பு விதிகளை சவாலுக்கு உள்ளாக்கும் அவரது முயற்சி பலனளிப்பதற்கான வாய்ப்பு மிகக்குறைவாகத்தான் இருக்கும். ஏதும் அதிகாரதரப்பின் பின்னணியில் அதற்கான முயற்சியை ஆரம்பிக்கிறாரோ தெரியவில்லை.

எனினும், இப்போதைக்கு கோத்தபாயவிடமுள்ள இறுதி துரும்பு இதுதான்.





# ராஜிவ் காந்தி கொலை 36

## புலிகள் சிக்கிய கதை

# கிட்டுவின் சவால்... கொலை முடிச்சை அவிழ்த்த நளினி!

கே.ராகோத்தமன்

கண்டிப்பாகத் தாங்கள்தான் செய்தோம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது என்று அவர்கள் நம்பினார்கள். அது வெறும் நம்பிக்கையல்ல. கொலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டதே அத்தனை சாமர்த்தியமாகத்தான்.

மிகுந்த புத்திசாலித்தனத்துடன், சற்றும் பிசகாத கவனத்துடன், எங்கும் பிழைகளோ, பிசிறுகளோ இல்லாமல்தான் திட்டம் வரையறுக்கப்பட்டிருந்தது.

ஒரு விஷயம் சொன்னால் வியந்து போவீர்கள். விடுதலைப் புலிகளின் திட்டப்படி, மனித வெடிகுண்டாக ஸ்ரீபெரும்புதூர் சென்ற தணு என்கிற அந்த ஒரு பெண்ணைத் தவிர, அவர்கள் குழுவில் வேறு யாருமே இறந்திருக்கும் வாய்ப்பு கிடையாது.

குறிப்பாக, ஹரி பாபு. ஹரி பாபு அடிபட்டுச் செத்துப் போனது மிகவும் தற்செயலான ஒரு நிகழ்வு.

மேடையில் மாலை அணிவித்து, அதை அவர் கீழே இருந்து புகைப்படம் எடுத்திருப்பாரேயானால் ஒரு பிரச்னையும் இல்லை. ராஜிவ் காந்தியும் தணுவும் மட்டுமே இறந்திருப்பார்கள்.

புலிகளின் திட்டப்படி மற்ற அனைவரும் தப்பித்து, அந்தப் புகைப்பட ஆதாரம் கூடக் கிடைக்காமல் இன்று வரை சி.பி.ஐ. அலைந்து கொண்டிருக்கும்.

மாறாக, ராஜிவ் வருகை தாமதமாகி, சிவப்புக் கம்பளப் பகுதியிலேயே மாலை அணிவிக்கும் வைபவம் அரங்கேற, அதிலும் எங்கே பிசகிவிடப் போகிறதோ என்று கடைசி நிமிடத்தில் பயந்த தணு, ராஜிவை நெருங்கியதுமே குனிந்து, தன் இடுப்பில் இருந்த விசையை இயக்க, சரியாகப் படம் பிடிக்க வேண்டுமே என்கிற பதற்றத்தில் ஹரி பாபு நெருங்கி வந்து கமராவை உயர்த்திப் படமெடுக்க, திட்டமிட்ட சமயத்துக்கு முன்னாலேயே குண்டு வெடித்து ஹரி பாபுவும் இறந்து போனார். திரும்பவும் சொல்கிறேன், ஹரி பாபு இறக்க நேரிடும் என்று புலிகள் எதிர்பார்க்கவில்லை.

சி.பி.ஐயிடம் வாக்குமூலம் அளித்த நளினி கூட இதனைக் குறிப்பிட்டிருக்கிறார். ராஜிவ் படுகொலை அளித்த அதிர்ச்சியைக் காட்டிலும் ஹரி பாபு இறந்த துக்கம் அவர்களுக்குப் பெரிதாக இருந்திருக்கிறது.

எந்த வகையிலும் அடையாளம் காண முடியாதபடி திட்டத்தை வகுத்திருக்கிறோம் என்கிற பெருமிதம்தான் கிட்டுவின் அறிக்கையில் வெளிப்பட்டிருந்தது. சி.பி.ஐ அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டது. 'இந்திய காவல் துறை முடிந்தால் கண்டுபிடிக்கட்டும்' என்று சொன்னாரல்லவா? அதைத்தான் செய்தோம்.

சதித்திட்டத்தின் தொடக்கப் புள்ளியில் இருந்து இறுதிவரை அவர்கள் சென்ற பாதை, சிந்தித்த விதம், செய்த காரியங்கள், சந்தித்த இடர்ப்பாடுகள், அனைத்தையும் மீறி திட்டத்தை எப்படிச் செய்து முடித்தார்கள், யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று ஓர் இண்டு இடுக்கு விடாமல் துருவித் துருவிக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தினோம்.



ஹரி பாபு

ஹரி பாபுவின் கமரா, எங்களுக்கு விடுதலைப் புலிகளைச் சுட்டிக் காட்டியது என்றால், நளினி பிடிபட்டு, அவரளித்த வாக்குமூலங்களின் மூலம் வழக்கின் அனைத்து முடிச்சுகளும் அவற்றை அவிழ்க்கும் சூத்திரங்களும் பிடிபட்டன. என்னைப் பொருத்தவரை ராஜிவ் காந்தி கொலை வழக்கு விசாரணை என்பதை வெற்றிகரமாக முடித்து வைத்தவர் நளினிதான்.

பிறகு முருகன் மற்றும் சின்ன சாந்தன். அவர்கள் அளித்த விவரங்கள்தாம் இந்த வழக்கின் வேர்களைக் கண்டடைய எங்களுக்கு மிகவும் உதவி செய்தன. இனி, சதித்திட்டம் எவ்வாறு உருவானது என்பதைப் பார்க்கத் தொடங்கலாம்.

நளினிக்கு அப்போது வயது 27. அவரது தந்தை ஒரு ரிடையர்ட் சப் இன்ஸ்பெக்டர். ஏதோ பிரச்சனை, மனைவியிடமிருந்து பிரிந்து தனியே வாழ்ந்து வந்தார்.

நளினியின் தாய் பத்மாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவள் நளினி தவிர, பாக்கியநாதன் என்ற மகனும் கல்யாணி என்ற இன்னொரு மகளும் உண்டு. அவர் மயிலாப்பூர் கல்யாணி நர்சிங் ஹோமில் நர்ஸாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ராயப்பேட்டை முத்தையா கார்டன் வீதியில் அவர்கள் வசித்து வந்தார்கள். நளினியின் சகோதரர் பாக்கியநாதன் 198788 ஆண்டுக் காலக்கட்டத்தில் சுபா சுந்தரம் ஸ்டுடியோவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவருக்கு விடுதலைப் புலிகளுடனான தொடர்புகளும் நட்பும் ஏற்பட்டது.

பிறகு ஸ்டுடியோ பணியில் இருந்து விலகி, கொஞ்சநாள் ஸ்டேஷனரி பொருள்களை வாங்கி விற்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அதன்பின் பேபி சுப்பிரமணியத்தின் அச்சுக்கூடத்தை 'பிபிஎல் ஆல்ரவுண்டர்ஸ்' என்கிற புதிய பெயரில் எடுத்து நடத்த ஆரம்பித்தார்.

இந்தக் காலக்கட்டத்தில் நளினி தன் குடும்பத்தாரிடமிருந்து பிரிந்து, தனியே வில்லிவாக்கத்தில் வீடு எடுத்து வசிக்க ஆரம்பித்திருந்தார். குடும்பப் பிரச்னைகள் என்று பொதுவாகக் காரணம் சொல்லப்பட்டாலும், நளினியின் தந்தை அடிக்கடி அவரைப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்ததுதான் முக்கியமான காரணமாயிருந்ததாக நளினி எங்களிடம் சொல்லியிருக்கிறார்.

அவர் அப்போது அடையாறில் இருந்த அனபாண்ட் சிலிக்கான்ஸ் என்னும் நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். மாதச் சம்பளம் 1700 ரூபாய். ஏப்ரல் 1990ல் நளினி தனியே போய்விட்டார். ஆனால் அதற்கு முன்னமே அவருக்கு பாக்கியநாதனின் நண்பராக முத்துராஜா அறிமுகமாகியிருந்தார்.

முத்துராஜா மூலம் அறிமுகமான சங்கரி என்கிற பெண்ணுடன் நுங்கம்பாக்கத்தில் அவர் தங்கியிருந்த பெண்கள் ஹாஸ்டல் ஒன்றில் பத்து நாள்கள் சேர்ந்து தங்கிவிட்டு, பிறகு குடும்ப நண்பரான சகுந்தலா என்பவர் (இவர் வில்லிவாக்கத்தில் வசித்துக்கொண்டிருந்தார்) வீட்டில் சில காலம் இருந்துவிட்டு, அதன் பிறகுதான் வில்லிவாக்கம் ஹைகோர்ட் காலனியில் வாடகைக்கு வீடெடுத்து வசிக்கத் தொடங்கினார்.



முருகன் - நளினி

கிட்டத்தட்ட ஆறேழு மாதங்கள் தம் வீட்டாருடன் பெரிதாகத் தொடர்புகள் இல்லாமல் தனியாக இருந்த நளினியைப் பார்க்க ஜனவரி 91 முதல் அவரது இளைய சகோதரி கல்யாணி அடிக்கடி வில்லிவாக்கத்துக்கு வரத் தொடங்கினார்.

பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் அப்படி ஒரு நாள் நளினியைச் சந்திக்க அவரது அலுவலகம் வரும்போது, தனது தோழி பாரதி என்னும் பெண்ணையும் முருகன் என்று இன்னொரு நபரையும் கல்யாணி, நளினியின் வீட்டுக்கு அழைத்து வந்தார். முருகனை தாஸ் என்கிற பெயரில் அறிமுகம் செய்துவைத்தார்.

பாரதி, ஒரு பேயிங் கெஸ்டாக நளினியின் அம்மா வீட்டில் தங்கியிருக்கும் விஷயம் நளினிக்குத் தெரியும். கூடுதல் வருமானத்துக்காக அப்படியொரு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கல்யாணி, இம்முறை முருகனும் தங்கள் வீட்டில்தான் தங்கியிருப்பதாகச் சொன்னாள். முத்துராஜா மூலம் அறிமுகமானார் என்றும் சொன்னாள்.

முருகன் எளிமையாக இருந்தார். அடக்கமாக, கனிவாகப் பேசினார். 'நீங்கள் ஏன் உங்கள் வீட்டுக்கே திரும்பச் சென்று வசிக்கக் கூடாது? எந்த வீட்டில் பிரச்னையில்லை? அதற்காகப் பெற்றோரை, சகோதரர்களை விட்டுவிட முடியுமா? எல்லா பிரச்னைகளும் தீரும். சந்தோஷமாக இருங்கள்.'

முதல் சந்திப்பிலேயே நளினிக்கு அவரது பேச்சும் பழகும் விதமும் பிடித்துப் போனது. அன்றைக்கு அவர்கள் நான்கு பேரும் பாரிஸ் கார்னருக்குச் சென்று ஷாப்பிங் செய்தார்கள்.

சாப்பிட்ட பிறகு வில்லிவாக்கத்தில் உள்ள நளினியின் வீட்டுக்கே வந்து தங்கினார்கள். புதிய அறிமுகம். புதிய நட்பு. நன்றாகத்தான் இருந்தது நளினிக்கு. அதன்பின் நளினியின் அடையாறு அலுவலகத்துக்கு முருகன் அடிக்கடி வந்து போகத் தொடங்கினார். (தொடரும்)

7-ம் பக்க தொடர்ச்சி...

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டும் இவர்கள் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தில் உள்ள குறைபாடுகளையெல்லாம் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தனிப்பட்ட குறைபாடுகளாகக் காட்ட முயற்சிக்கிறார்கள்.

வடக்கின் முதலமைச்சர் நாற்காலியில் தங்களின் கைப்பாவையாக, தங்களால் இலகுவில் கையாளத்தக்க ஒருவர் இருக்க வேண்டும் என்றே இலங்கை அரசாங்கம் விரும்புகிறது. நடைபெற்ற இனஅழிப்பை யுத்தக் குற்றங்களையெல்லாம் மூடிமறைப்பதற்கும். மேலும் மேலும் தங்களது ஆக்கிரமிப்பைத் தொடருவதற்கும் பேரினவாதிகளுக்கு அது அவசியமாகின்றது. ஆனால் விக்னேஸ்வரன் எவராலுமே கையாளத்தக்க ஒருவராக இல்லாமல் தமிழ்த் தேசியத்தின் குரலாக ஓங்கிஒலிப்பவராக இருப்பதால் அவர் முதலமைச்சராக நீடிப்பதைத் தென்இலங்கைப் பேரினவாதிகளும் கண்ட பின்னர், என்னைப் பதவி விலகக் கோரியிருந்தால் அது நியாயமானது. ஆனால் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளின் கீழும் குற்றமற்றவர், ஆதாரமில்லையென கூறிவிட்டு, இறுதியில் பதவி விலக வேண்டுமென கூறியது விசாரணைக்குழுவைச் சந்தேகப்பட வைக்கிறது. மாகாண சபைக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியவர்கள், இந்த விசாரணைக்குழுவைக் கையாண்டிருக்க வாய்ப்புள்ளதாகவே நான் கருதுகிறேன்.

**தீபம்: விசாரணைக்குழு பக்கச் சார்பாகச் செயற்பட்டதாகக் கூறுகிறீர்களா?**

**பொ.ஐங்கரநேசன்:** விசாரணைக் குழுவில் இருந்த இரண்டொருவர் யாரோ சிலரின் கைப்பாவையாக, என்னை அகற்ற வேண்டுமென்பதில் குறியாக இருந்தார்கள் என்பதை உறுதியாகச் சொல்வேன். இந்த இடத்தில் விசாரணை அறிக்கை தொடர்பாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.. சுகாதார அமைச்சராக இருந்த சத்தியலிங்கம் தொடர்பாகவும் ஒரு விசாரணை நடந்தது. குற்றச்சாட்டுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் படாமையினால் அவரை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிப்பதாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரம் அல்லாமல், அவரினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் சகல திட்டங்களுக்கும் சகலரும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என விசாரணைக் குழு விரும்புகின்றது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சத்தியலிங்கத்தை குற்றவாளியென்று நான் இங்கே சொல்ல வரவில்லை. ஆனால் விசாரணைக் குழு பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்காகவே இதைக் குறிப்பிடுகின்றேன். ஒரு சைக்கிளை திருடியதாக ஒரு வழக்கு வருகிறது. அவர் சைக்கிளை திருடவில்லையென நீதிபதி தீர்ப்பை சொல்லிவிட்டு, வேறு விசயங்களிலும் அவர் நல்லவரென ஒரு பரிந்துரையை கொடுக்க முடியாதல்லவா. ஆனால் விசாரணைக்குழு எங்கள் விசாரணையில் அப்படித்தான் நடந்து கொண்டது. விசாரணை அறிக்கையின் மூலம் தாங்கள் பக்கச்சார்பானவர்கள்தான் என்பதைத் தாங்களே காட்டிக் கொடுத்துள்ளார்கள்.

**தீபம்: ஆனால் அந்த விசாரணைக் குழுவை முதலமைச்சர் தானே நியமித்தார்?**

**பொ.ஐங்கரநேசன்:** விசாரணைக் குழுவில் ஓய்வுபெற்ற இரண்டு நீதிபதிகளும் நிர்வாக சேவையில் உயர்அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற ஒருவரும் இருந்தார்கள். இவர்களை முதலமைச்சரே நியமித்திருந்தாலும், நான் அறிந்தவரையில் இவர்களை தெரிவுசெய்யும் பொறுப்பை வேறு ஒருவரிடமே விட்டிருந்தார். தான் தெரிவுசெய்தால் தனக்கு ஏற்ற மாதிரி ஒரு குழுவை நியமித்துள்ளார் என்ற விமர்சனத்துக்கு ஆளாக வேண்டிவரும் என்று அவர் நினைத்திருக்ககூடும். முதலமைச்சரே இவர்களை தெரிவு செய்திருந்தாலும்கூட, இவர்களின் பின்னணி பற்றி அறியாமல் இருந்திருக்கலாம்.

விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில்தான், இவர்களின் பின்னணி பற்றி எனக்கு தெரியவந்தது. விசாரணை குழுவிலிருந்த ஓய்வுபெற்ற நீதிபதிகளில் ஒருவர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் ஒருவரை நீக்கியமை தொடர்பான வழக்கொன்றில் நீதிமன்றத்தில் சமாச தலைவருக்கு சார்பாக, மாகாண கூட்டுறவு திணைக்களத்திற்கு எதிராக வழக்காடியவர். அதேசமயம், அதே பிணக்கு முன்வைக்கப்பட்டுள்ள விசாரணைகுழுவில் என்னை விசாரிக்கும் நீதிவானாகவும் இடம் பெற்றிருந்தார். இவர் பக்கச்சார்பற்ற தீர்ப்பை வழங்குவார் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரி விவசாய அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியவர். சேயலாளராக வேறொருவர் நியமிக்கப்பட்ட பிறகு, அதே விவசாய அமைச்சில் உதவி திட்டமிடல் பணிப்பாளராகவும் வேலை பார்த்தவர். அமைச்சின் உயர்பதவிகளில் பணியாற்றிய ஒருவர்; அதே அமைச்சுடன் தொடர்புபட்ட விசாரணைகளில் பங்குபற்றுவது நிர்வாக நடைமுறைகளிற்கும், இயற்கை நீதிக்கும் முரணானது. உண்மையில், இவர்கள் இருவரும் அறம் சார்ந்து ஒழுகுபவர்களாக இருந்தால், விசாரணைக்குழுவில் இடம்பெற மறுத்திருப்பார்கள்.

**தீபம்: அப்படியென்றால், தான் நியமித்த விசாரணைக்குழு நியாயமாக நடக்கவில்லையென்ற அபிப்பிராயம் முதலமைச்சரிடம் உள்ளதா? அதை அமைச்சர்களிடம் கூறியிருக்கிறாரா?**

**பொ.ஐங்கரநேசன்:** விசாரணைக் குழு சரியான தீர்ப்பைத்தான் எழுதியிருக்கிறதென அவர் நினைத்திருந்தால், பதவிவிலகுங்கள் என்று ஒற்றைச் சொல்லிலேயே அமைச்சர்களை அவர் பதவியிலிருந்து அகற்றியிருப்பார். அழுத்தம் திருத்தமாக "பதவிகளை தியாகம் செய்யுங்கள்" என்றுதான் எங்களைக் கோரியிருந்தாரே தவிர, இந்த தீர்ப்பின் அடிப்படையில் எங்களை அவர் பதவி நீக்கம் செய்யவில்லை.

**தீபம்: உங்கள் மீதான குற்றச் சாட்டுக்கள் உள்நோக்கமுடையவை என்கிறீர்கள். மாகாணாசபைக்குள் நீங்கள் குறிவைக்கப்படக் காரணம் என்ன?**

**பொ.ஐங்கரநேசன்:** முதலமைச்சர் தமிழ் மக்கள் பேரவையைத் தொடங்கியதும், அவர் தனியான அரசியல் அணியை உருவாக்கப் போகிறார் எனச் சிலர் பயந்தார்கள்.. நான் முதலமைச்சருக்கு ஆதரவானவன் என்ற பொதுக் கருத்தின் அடிப்படையில் அவரது அரசியல் பயணத்தில் அவருக்கு நான் பலமாக இருந்துவிடுவேன் என்றும் நினைத்த அவர்கள் என்னை அகற்றினால் அவர் மீண்டும் கொழும்புக்குத் திரும்பிப் போய்விடுவார் என்று நம்பினார்கள். இதனாலேயே நான் முதலில் குறிவைக்கப்பட்டேன். இதற்குக் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் சாட்சியாகவுள்ளார்;.




விரும்பவில்லை. இதனாலேயே வடக்கின் அபிவிருத்திக்கு முதலமைச்சர் தடையாக இருப்பதாக அவர்களும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

**தீபம்: உங்கள் மீதும் மாகாண சபைக்குள் நிறைய குற்றச்சாட்டு;கள் வைக்கப்பட்டுள்ளனவே?**

**பொ.ஐங்கரநேசன்:** குற்றச்சாட்டுகளை விசாரிக்க முதலமைச்சர் ஒரு விசாரணைக்குழுவை நியமித்து, விசாரணைக்குழுவின் தீர்ப்பை முன்வைத்து, நானும் பதவியிலிருந்து விலகிவிட்டேன். ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகள் அபாண்டமானவை, என்னைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற திட்டத்துடன் புனையப்பட்டவை. நான் அமைச்சராக மேற்கொண்ட எல்லாத் திட்டங்களிலுமே எழுந்தமானமாகக் குற்றங்களைச் சுமத்தினார்கள்; ஆனால் விசாரணைக்குழுவின் அறிக்கையில் எந்தக்குற்றச்சாட்டிலும்குற்றவாளியாக நான் குறிப்பிடப்பவில்லை. தனித்தனியாகக் குற்றச்சாட்டுகளை விசாரித்து, குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கிறோம், ஆதாரங்கள் அற்ற குற்றச்சாட்டுகள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் அறிக்கையின், தொகுப்புரையில் குற்றச்சாட்டுகள் நிஷரூபிக்கப்பட்டதால் நான் பதவிவிலக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏதாவதொரு குற்றச்சாட்டில் என்னைக் குற்றவாளியாக இனம்

எனக்கு எதிரான பிரேரணையை மாகாணசபையில்கொண்டுவருவதற்கு மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் முதலில் விந்தன் கனகரட்ணத்தையே அணுகியிருந்தார்கள். அவர் உடன்பட மறுத்ததன் பின்னரே வேறு ஒரு உறுப்பினரின் மூலம் பிரேரணை கொண்டு வரப்பட்டது. ஷ்ஷ

விந்தன் கனகரட்ணத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றிற்கு அழைத்துச் சென்று எனக்கெதிரான பிரேரணையைக் கொண்டுவரக் கோரியபோது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். கதிரையில் இருந்து கதைத்த ஒரு உறுப்பினர் கதிரையில் ஊன்றியிருந்த தனது வலதுகையைத் தட்டிக்காட்டி, இந்தக் கைதான் .ஐங்கரநேசன் இதனை முதலில் உடைத்தால் கதிரையைவிட்டு முதலமைச்சர் குப்புற விழுந்து விடுவார் என்று அபிநயம் செய்து காட்டியுள்ளார். இதனை விந்தன் கனகரட்ணமே பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே பேசியுள்ளார்.

**(நேர்காணல் அடுத்த வாரம் தொடரும்)**

# வாசனைத் திரவியங்கள் யாருக்கு எது பெஸ்ட்?



சோப், ஷாம்போ, டூத்பேஸ்ட் போல ஸ்பிரே, பெர்ஃபியூம் போன்றவையும் அத்தியாவசியப் பொருள்களாகி விட்டன. பொடி ஸ்பிரே (Body Spray), டியோடரன்ட் (Deodorant), அன்ரிபெர்ஸ்பிரன்ட் (Antiperspirant), சென்ட் (Scent), பெர்ஃபியூம் (Perfume) என ஏகப்பட்ட வாசனைப்பொருள்கள் வந்து விட்டன. சொக்லேட், லாவண்டெர், ஜாஸ்மின், ரோஸ் என எல்லா வாசனைகளிலும் கிடைக்கின்றன. சிலர், காலையில் ஒன்று மாலையில் ஒன்று என நேரத்துக்கு ஒருவாசனைப் பொருளைப் பயன்படுத்துகிறார்கள். வாசனைத் திரவியங்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்பானவை? அவற்றில் சேர்க்கப்படும் இரசாயனங்களால் ஏற்படும் ஆபத்துகள் என்னென்ன? அவற்றைப் பாதுகாப்பான முறையில் எப்படிப் பயன்படுத்துவது?

சரும மருத்துவர் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் ஏ.சிவகுமார் விளக்குகிறார்.

"நம் உடலில் உள்ள தேவையற்ற உப்பு மற்றும் கழிவுகளை அகற்றவும், உடல் வெப்பநிலையைச் சமநிலையில் வைக்கவும் உடலில் தாமாகச் சுரக்கும் ஒரு திரவமே வியர்வை. நம் உடலில் எக்ரைன் (Eccrine), அபோக்ரைன் (Apocrine) என இரண்டு வகையான வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. எக்ரைன் சுரப்பியானது உடல் முழுவதும் பரவலாக இருக்கும். அக்குள் மற்றும் மடிப்புள்ள இடங்களில் அப்போக்ரைன் சுரப்பி காணப்படும். இவற்றை, ஹார்மோன்கள் கட்டுப்படுத்துகின்றன. எக்ரைன், ஒரு வயதிலேயே செயல்பட ஆரம்பித்துவிடும். அப்போக்ரைன், பருவ வயதிலிருந்துச் செயல்படத் தொடங்கும். இதனால்தான் பருவ வயதில், வியர்வை அதிகமாக வெளியேறுகிறது.

### வியர்வை நாற்றம் ஏன்?

வியர்வைக்கு வாசனை கிடையாது. வியர்வைச் சுரப்பிகளுடன் 'சீபம்' எனப்படும் எண்ணெய் சுரப்பிகளும் அமைந்திருக்கின்றன. எண்ணெய் சுரப்பிகளிலிருந்து வரும் எண்ணெயுடன் வியர்வையும் கலந்து வெளியேறும்போது, அவற்றுடன் பக்டீரியாவும் சேர்வதால் துர்நாற்றம் வீசுகிறது. பருவ வயதுக்குப் பிறகு உடல்வாகுக்கேற்ப அதிகமாகவோ, குறைவாகவோ வியர்வை சுரக்கும். ஆனால், கோடை காலத்தில் எல்லோருக்குமே வியர்வை அதிகம் வெளியேறுவதால், வியர்வை நாற்றம் பொதுவான பிரச்னையாக மாறிவிடுகிறது. அதனாலேயே வாசனைத் திரவியங்கள் பயன்படுத்துவதை நம்மால் தவிர்க்கமுடிவதில்லை. வாசனைத் திரவியங்களைப் பொறுத்த மட்டில் பெர்ஃபியூம், டியோடரன்ட், அன்ரிபெர்ஸ்பிரன்ட் ஆகியவையே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. எந்த வகையாக இருந்தாலும் அல்கஹோல், புரொபலின் கிளைக்கோல் (Propylene Glycol), பாராபன் (Paraben), பால்சம் பெரு (Balsam Peru) ஆகிய இரசாயனங்கள் கலக்கப்பட்டிருக்கும். அவை, எவ்வளவு சேர்க்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே டியோடரன்ட், பெர்ஃபியூம் எனப் பெயர்கள் வேறுபடுகின்றன.

### பெர்ஃபியூம் (Perfume)

வாசனை மட்டுமே வீசும். கிருமிகளை அழிக்கவோ, வியர்வையின் அளவைக் குறைக்கவோ செய்யாது. பெர்ஃபியூமில் 15 முதல் 20 சதவிகிதம் வரை வாசனைக்கான இரசாயனங்களும், அல்கஹோலும் சேர்க்கப்படுகின்றன. இதில் உள்ள ஃபிக்ஸேடிவ்ஸ் (Fixatives) மற்றும் சால்வென்ட்ஸ் (Solvents) போன்றவை திரவ வடிவிலான வாசனைத்திரவியங்கள் ஆவியாகாமல் பாதுகாக்கின்றன. இவற்றை உடைகளில்தான் ஸ்பிரே செய்ய வேண்டும். சருமத்தில் நேரடியாக ஸ்பிரே செய்யக்கூடாது.

### டியோடரன்ட் (Deodorant)

கிருமிகளின் வளர்ச்சியைத் தடுப்பதுடன், நறுமணத்தின்மூலம் துர்நாற்றத்தைக் குறைக்கும். ஆனால், வியர்வை வெளியேறுவதைக் குறைக்காது. இதில், 10 முதல் 15 சதவிகிதம் அல்கஹோல் கலக்கப்படுகிறது. இதைச் சருமத்தில் நேரடியாக உபயோகிக்கலாம்.

### அன்ரிபெர்ஸ்பிரன்ட் (Antiperspirant)

வியர்வைச் சுரப்பிகளின் துவாரங்களில் படிந்து, வியர்வையின் அளவைக் குறைக்கும். அத்துடன், கிருமிகளின் வளர்ச்சியைக் குறைத்து துர்நாற்றத்தை மறைக்கும். இதில், சேர்க்கப்படும் அலுமினியம், தற்காலிகமாக வியர்வைச் சுரப்பிகளைத் தடை செய்யும். இதில், 10 முதல் 15 சதவிகிதம் அல்கஹோல் சேர்க்கப்படுகிறது. ஸ்பிரே, ரோல் ஆன், பம்ப், ஏரோசால் போன்ற வடிவங்களில் கிடைக்கிறது.

### இரசாயன விளைவுகள்

நறுமணத்துக்காகச் சேர்க்கப்படும் புரொபலின் கிளைக்கோல், சரும அலர்ஜி ஏற்படுத்தக்கூடியது. பாராபன் (Parabens) இரசாயனம், சிலருக்கு அதிகப்படியான எரிச்சல், நமைச்சலை ஏற்படுத்தலாம். பால்சம் பெரு என்ற இரசாயனம் ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி, சைனஸ் பிரச்னை, சரும எரிச்சல் போன்றவற்றை ஏற்படுத்தும். பெரும்பாலான அன்ரிபெர்ஸ்பிரன்ட் வாசனைத் திரவியத்தில் அலுமினியம் சேர்க்கப்படுகிறது. இதனால், பிற்காலத்தில் மறதி நோய், சிறுநீரகக் கோளாறுகள் வருவதற்கான வாய்ப்பிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, அலுமினியம் உள்ள வாசனைத் திரவியங்களைத் தவிர்க்க வேண்டும்.

### யாரெல்லாம் தவிர்க்க வேண்டும்?

முடிந்தவரை எல்லோருமே வாசனைத்திரவியங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. தவிர்க்க முடியாத சூழலில் ஒருநாளைக்கு ஒருமுறை பயன்படுத்தலாம். சிலருக்கு சருமப் பிரச்னைகள், அரிப்பு, காளான் தொற்று காரணமாக வியர்வை வாடை இருக்கலாம். இவர்கள் பெர்ஃபியூம், பொடி ஸ்பிரே பயன்படுத்துவதை அறவே தவிர்க்க வேண்டும். குறிப்பாக, பாதிப்பு உள்ள பகுதிகளில் இவற்றைப் பயன்படுத்தக்கூடாது. மேலும் பிரச்னை உள்ளவர்கள் சரும மருத்துவரின் ஆலோசனையுடன் முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### வாசனைத் திரவியங்களைத் தவிர்ப்பது எப்படி?

தினமும் இரண்டு தடவை குளித்து, சுத்தமான ஆடைகளை உடுத்தினால் வியர்வை நாற்றத்தைத் தவிர்க்கலாம். அக்குள் போன்ற மறைவிடங்களில் உள்ள முடிகளை நீக்கி, முறையாகச் சுத்தம் செய்துப் பராமரித்தாலே வியர்வை நாற்றம் கட்டுப்படும்.

அக்குள் பகுதிகளில் பக்டீரியாக்கள் வளர்வதைத் தடுக்க முடியாது. ஆனால், ஆன்டிபாக்டீரியல் சோப்புகளைப் பயன்படுத்திக் குளிப்பதன்மூலம் பாக்டீரியாக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். பல வருடங்களாக உடல் நாற்றத்தால் அவதிப்படுபவர்கள் சரும மருத்துவரின் ஆலோசனையின் பேரில் போட்டொக்ஸ் (Botox) என்ற ஊசியை அதிகமாக வியர்க்கும் இடங்களில் போட்டுக்கொள்ளலாம். இதனால், அந்த இடத்தில் வியர்க்காது. நாற்றம் ஏற்படுத்தும் பக்டீரியாவின் வளர்ச்சியும் தடுக்கப்படும். ஆனால் இது குறிப்பிட்ட மாதங்கள்தான் பல னளிக்கும். பின்னர் மீண்டும் இந்த ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

அக்குள், பிறப்புறுப்புப் பகுதியில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் அளவைச் சுருக்கும் பிரத்யேகச் சிகிச்சைகளும் இருக்கின்றன. இதனால் வியர்வையின் அளவு குறையும். அதிலும் கட்டுக்குள் வரவில்லையென்றால் அக்குளில் உள்ள சில வியர்வைச் சுரப்பிகள் நிரந்தரமாக நீக்கப்படும். இதனால், வியர்வை குறைந்து நிரந்தரமாக நாற்றம் குறையும்.

## எப்படிப் பயன்படுத்துவது?

- ஒருநாளைக்கு ஒருமுறைக்குமேல் எந்த வாசனைத் திரவியத்தையும் பயன்படுத்தக் கூடாது.
- ஸ்பிரே வகைகளை 15 செ.மீ தூரத்தில் வைத்தே ஸ்பிரே செய்ய வேண்டும்.
- குளித்துமுடித்ததும் உடலை ஈரப்பதம் இல்லாமல் துடைத்து, வியர்வை வருவதற்கு முன் அந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும்.
- எந்தவொரு புதிய வாசனைத் திரவியத்தையும் முதலில் பயன்படுத்தும்போது அதை மணிக்கட்டுப் பகுதியில் சிறிதளவு பயன்படுத்திப் பாருங்கள். எரிச்சல், அலர்ஜி எதுவும் இல்லை என்றால் அதைப் பயன்படுத்தலாம்.
- அடிக்கடி குளித்தாலும்கூடச் சிலருக்கு வியர்வை நாற்றம் அதிகமாகவே இருக்கும். அவர்களுக்கு அன்ரிபெர்ஸ்பிரன்ட், டியோடரன்ட் வகை வாசனைத் திரவியங்கள்தான் ஏற்றவை. பெர்ஃபியூம் பயன் தராது.

## உதவிக்கு வரும் உயிரியல் - 6

# வறட்சிக்கு ஏற்ற மூடாக்கு... கைகொடுக்கும் உயிர் உரங்கள்!

முனைவர் அ.உதயகுமார்



இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உள்பட கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாம்தான், உலகை ஆட்டி வைத்துக் கொண்டி ருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சி களும், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தாம்.

நுண்ணுயிர்கள் என்றாலே மனித னுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்து படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது, இயற்கை.

ஒரு வாசல் அடைத்தால், இன்னொருவாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த, சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலே இந்தத் தொடர்.

ஒரு சிறு நிலத்தில் ஆண்டுக்கு 80 தொன் தொழுவுரம் தயாரிக்கும் முறை பற்றிக் கடந்த இதழில் பார்த்தோம். அதன்படி தயாரித்த இயற்கை உரத்தை நிலக்கடலை, சூரியகாந்தி, எள் போன்ற பயிர்களுக்கும், காய்கறி பயிர்களுக்கும் ஏக்கருக்கு 5 தொன் அளவு பயன்படுத்தலாம். வாழை, கரும்பு போன்ற ஆண்டுப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 10 தொன் அளவு இட வேண்டும்.

இயற்கை உரத்தை நிலத்தில் தூவி, உழவு செய்த பிறகே விதைக்க வேண்டும். இந்த உரத்தை இடுவதால், மண்ணில் அங்ககப் பொருள்களின் அளவு அதிகரிக்கிறது. நுண்ணுயிர்களும் அதிகளவில் பெருகி, கரிமப்பொருள்கள் அதிகரிக்கின்றன. மண்ணின் நீர் பிடிப்புத்தன்மை மேம்படும். தற்போதைய வறட்சிக்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், மண்ணில் அங்ககப்பொருள்களின் அளவு குறைந்ததும் ஒரு முக்கியமான காரணமாகும். அங்ககப் பொருள்கள் அதிகளவில் இருக்கும் மண்ணில், நீர் ஆவியாகும் வேகம் குறைவாக இருக்கும். இரசாயனம் பயன்படுத்தும் நிலங்கள் அதிவிரைவாக வறண்டு விடும். ஆனால், இயற்கை இடு பொருள்கள் பயன்படுத்தும் நிலங்கள் விரைவில் வறண்டு போவதில்லை. இதற்கு, மண்ணில் உள்ள இந்த அங்ககப் பொருள்கள்தான் காரணம்.

மண் வறண்டு போகாமல் ஈரத் தன்மையுடன் இருப்பதால் பல்வேறு வகையான நுண்ணுயிர்கள் உருவாகி நிலத்தை வளமாக்குகின்றன. ஆக, இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது, நாம் மண்ணில் இடும் இயற்கை உரங்கள்தாம்.

தற்போது கடுமையான வறட்சி நிலவுகிறது. இந்தக் காலகட்டத்தில் பயிரையும், மண்ணிலுள்ள உயிர்களையும் காப்பாற்ற வேண்டியது, அவசியமானது. அதற்குப் பெரிதும் உதவியாக இருப்பவை, மூடாக்குகள். காய்ந்த இலைதழைகள், விவசாயக் கழிவுகள் ஆகியவற்றைப் பயிர்களைச் சுற்றி மூடாக்காக அமைக்கலாம். சில பகுதிகளில் இயந்திரத்தில் அறு வடை செய்யும்போது கிடைக்கும் வைக்கோலை மாட்டுக்குப் பயன் படுத்தாமல் வயலில் தீ வைத்து எரிக்கி றார்கள். அது முற்றிலும் தவறான செயல். இதுபோன்ற வைக்கோலை நிலத்தில் மூடாக்காகப் பயன்படுத்த லாம்.

பயிர் வளர்ச்சிக்காக நாம் மண்ணில் இடும் இடுபொருள்கள் மற்றும் மண்ணில் இயற்கையாகவே உள்ள சத்துகள் ஆகியவற்றைச் செடிகள் நேரடியாக எடுப்பதில்லை. செடிகள் சுலபமாக எடுக்கும் வகையில் சத்து களை இளக்கிக் கொடுக்கும் பணியை நுண்ணுயிர்கள்தாம் செய்கின்றன. மண்ணுக்குள் நுண்ணுயிர்கள் இல்லாவிட்டால் நீங்கள் மூட்டை மூட்டையாக உரங்களைக் கொட்டி னாலும், அதனால் பயிர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டால் தான் நுண்ணுயிர்களின் அவசியத்தை உணரமுடியும்.

பூச்சிகளில், நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் இருப்பதுபோலவே, நுண்ணுயிர் களிலும் நன்மை செய்யும் நுண்ணு யிர்கள், தீமை செய்யும் நுண்ணுயிர்கள் இருக்கின்றன.

உதாரணமாக அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்றவை காற்றில் இருக்கும் தழைச்சத்தை உறிஞ்சி, மண்ணில் நிலைநிறுத்தும் பணியைச் செய்து வருகின்றன. இந்த நுண்ணுயிர்கள், ஒரு ஏக்கர் நிலத்தில் 10 கிலோ முதல் 30 கிலோ அளவிலான தழைச்சத்தை நிலைநிறுத்துகின்றன. பாஸ்போ பக்டீரியாவானது குப்பை உரங்கள், மண் ஆகியவற்றில் உள்ள பொஸ்பரஸ் சத்துகளைச் பயிர்கள் சுலபமாக எடுக்கும் வடிவத்துக்கு மாற்றும்பணியைச் செய்து வருகின்றன.

இதேபோலத்தான் சாம்பல் சத்து, சல்பர் என ஒவ்வொரு சத்தையும் செடிகள் எடுப்பதற்குப் பல்வேறு வகையான நுண்ணுயிர்கள், சம்பளமே இல்லாமல் வேலை செய்துகொண்டு இருக்கின்றன. நல்லவர்கள் அதிகமாக அதிகமாக, தீமை செய்பவர்களின் எண்ணிக்கை குறையும் அல்லவா? அதுபோலத்தான் பக்டீரியாக்களும். நன்மை செய்யும் பக்டீரியாக்களின் அளவு மண்ணில் அதிகரிக்கும்போது, தீமை செய்யும் பக்டீரியாக்களின் எண்ணிக்கை குறையும்.

ஒரு காலத்தில் குறிப்பிட்ட சில பயிர்களை மட்டுமே வேர் அழுகல் நோய்தாக்கும். சமீபகாலமாக அனைத்து வகையான பயிர்களும் வேர் அழுகல் நோயால் பாதிக்கப்படுகின்றன. நன்மை செய்யும் பக்டீரியாக்கள் மண்ணில் குறைந்துபோனதுதான் இதற்குமுக்கியக் காரணம். தொடர்ச்சியான இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண்ணில் அங்ககப் பொருள்களின் அளவு குறைந்துவிட்டது. அதனால், நன்மை செய்யும் பக்டீரியாக்கள் எண்ணிக்கை குறைந்து, தீமை செய்யும் பக்டீரியாக்கள் அதிகளவில் பெருகிவிட்டன என்பதை நமக்கு அடையாளம் காட்டுகிறது, வேர் அழுகல் நோய். தற்போது, நன்மை செய்யும் பக்டீரியாக்களை மண்ணில் அதிகப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இவற்றை மண்ணில் பெருக்கும் பணியை அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பக்டீரியா, சிலிக்கான் மொபிலைசர் போன்ற உயிர் உரங்கள் செய்கின்றன.

இந்த உயிர் உரங்கள் தற்போது உரக்கடைகளில் தாராளமாகக் கிடைக் கின்றன. ஒவ்வொரு உயிர் உரம் பற்றியும், அதன் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக அடுத்த இதழில் பார்க்கலாம்.

பரவும்



### செறிவூட்டப்பட்ட இ.எம் திரவத்தைத் தாய்த் திரவமாக பயன்படுத்தலாமா?

செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கும் முறை குறித்து, முன்பே விளக்கமாகக் கூறியிருக்கிறேன். ஒரு லிட்டர் தாய்த் திரவத்திலிருந்து 100 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கலாம் எனத் தெரிவித்து இருக்கிறேன். அதுகுறித்து என்னிடம் பேசிய விவசாயி ஒருவர், 'ஒரு லிட்டர் தாய்த் திரவத்திலிருந்து 20 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரித்து, அந்த 20 லிட்டர் இ.எம்மை தாய்த் திரவமாகப் பயன்படுத்தி, மீண்டும் செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கலாம் என்கிறார்களே அது சரியா?' எனக் கேட்டார். இந்தச் சந்தேகம் பெரும்பாலானோருக்கு இருக்கிறது.

இ.எம் தாய்த் திரவம் என்பது உறக்க நிலையில் இருக்கும் பக்டீரியா. அதை ஒரு முறை திறந்து, செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கும்போது அதன் உறக்க நிலை கலைந்து விடுகிறது. இப்படித் தயாரிக்கப்பட்ட செறிவூட்டப்பட்ட இ.எம்மை தாய்த் திரவமாகப் பயன்படுத்தினால், அதன் செயல்பாடு முழுமையாக இருக்காது. அதனால்தான், ஒருமுறை வாங்கும் தாய்த் திரவத்திலிருந்து 20 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிப்பதைவிட, 100 லிட்டர் தயாரித்துக்கொண்டால், செலவு குறையும். செறிவூட்டப்பட்ட இ.எம்மை தாய்த் திரவமாகப் பயன்படுத்தினால், கண்டிப்பாக முழுமையான பலன் கிடைக்காது.

# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

சாள்ஸ் ஜெ.போர்மன்

**03.பொஸ்னியாவில் கால்களை நனைத்துக் கொண்டு**


நான் பயணத் திட்டமிடும்போது படத்தில் [நெவும்] அப் பகுதியைக்கவனித்திருந்தாலும் பயணத்தில் நாம் பொஸ்னியாவின் ஊடாகவும் பயணிப்போம் என்று நினைத்திருக்கவில்லை. "நாங்கள் இப்போது இன்னும் ஒரு நாட்டுக்குள் நிற்கிறோம்" என்று மகன் கதிருக்குச் சொன்னபோது அவனுக்குப் பெருமையாக இருந்தது, தான் பயணித்த நாடுகளின் பட்டியலில் புதியதாக ஒன்றை எதிர்பாராமல் சேர்த்துக்கொள்ள முடிந்ததுக்காக.


முதல் தடவையாக 1100 ம் ஆண்டுகளில் பொஸ்னியா ஹெர்ஸகோவினா தனி நாட்டை ஸ்தாபித்து 1463 இல் ஒத்தமான் சாம்ராஜ்யத்தால் விழுங்கப்பட்டது. 1878 இல் ஆஸ்திரிய ஹங்கேரி ராஜ்யத்துக்குள்ளாக்கப்பட்டது. அதன் பின்பு முதலாம் உலகப்போரின் பின்பு யூகோஸ்லாவியாவின் பகுதி ஒன்றாகியது. 1992 இல் மீண்டும் தனிநாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

அதை ஏற்றுக் கொள்ளாத செர்பியாவும் மொண்டி நீக்ரோவும் பொஸ்னியா ஹெர்ஸகோவினாவின் சுமார் 75 விகிதப் பிரதேசத்தைத் தங்கள் இராணுவத்தின் கீழ் கொண்டுவந்தன. உக்கிரமான போர் உண்டாகியது. சுமார் 110 000 பேர் உயிரிழந்தார்கள். ஐ.நா, அமெரிக்கா, ஐரோப்பா, நாட்டோ அமைப்பு ஆகியோர் இப்போருக்குள் நுழைந்து 1995 ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

இன்று பொஸ்னியாக்கர், கிரவேஷியர்கள், செர்பர்கள் ஆகியோர்களைக் கொண்ட 4 மில்லியன் பேர் பொஸ்னியாவில் வாழ்கிறார்கள்.

கிரவேஷியாவின் நடுவில் இந்த ஒரு துண்டு [நெவும்] மாத்திரம் எப்படி பொஸ்னியாவின் கையில் போனது என்பதை அறிய 17 ம் நூற்றாண்டுக் காலச் சரித்திரத்தைப் புரட்ட வேண்டியிருக்கும்.









அச் சமயத்தில் தனி நாடாக இருந்த டுப்ரோவ்னிக்கின் ஒரு பாகமாக இருந்தது இந்த நகரம். அப்போது ஒத்தமானியர்களுக்கும் ஐரோப்பாவின் வெவ்வேறு சாம்ராஜ்யங்களுக்கும் ஏற்பட்ட போரில் ஒத்தமானியர்களின் பக்கம் சார்ந்திருந்தது டுப்ரோவ்னிக். அச் சமயத்தில் 1699 இல் கார்லோவிட்ஷ் ஒப்பந்தத்தின்படி ஒத்தமானியர்களின் கைகளில் இருந்த பால்கன் பிராந்தியத்தின் பல பகுதிகள் ஹப்ஸ்பர்க் சாம்ராஜ்யம், வெனிஸ் ஆகியவைகளின் கைகளில் வீழ்ந்தன. பலமான வெனிஸ் ராஜ்யத்தின் தாக்குதலுக்குப் பயந்த டுப்ரோவ்னிக் ராஜ்யம் நெவும் பகுதியை ஒத்தமானியர்களிடம் கொடுத்தது, தங்கள் பாதுகாப்பை நிரந்தரப்படுத்திக் கொள்வதற்காக. அதனால் ஒத்தமானியர்களின் கைகளில் இருந்த பிராந்தியங்களில் ஒன்றான பொஸ்னியாவுடன் நெவும் இணைந்தது.

எங்கள் பேருந்துப் பயணத்தின்போது நாம் நெவும் எல்லையில் அதிக நிமிடங்கள் செலவிடவில்லை என்றாலும்கூட சில சந்தர்ப்பங்களில் சுற்றுலாப் பேருந்துகளும், தனியார் வாகனங்களும் அந்தப் பாதுகாப்பு எல்லையில் அதிக நேரத்தைச் செலவிடுவது உண்டு என்று பின்னர் அறிந்து கொண்டேன். அதனால் நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்ற காரணத்துடன் அப் பிராந்தியத்தைக் கிரவேஷியாவுக்கு ஊடாகப் பயணிப்பவர்கள் தவிர்க்கக்கூடியதாக ஒரு பாலத்தை 2000 ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே கிரவேஷியா திட்டமிட ஆரம்பித்தது.

நெவும் நகருக்கு வெளியே இருக்கும் பெலியஸாச் தீபகற்பகத்தில் இருந்து நெவுமுக்கு வெளியே இருக்கும் நிலப்பகுதியை இணைத்து சுமார் 2,400 மீற்றர் பாலத்தைப் போடுவதற்குக் கிரவேஷியா 2007 இல் ஆரம்பித்தது. ஆனால், அதன் முதலீடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அரைகுறையாக அப்பாலம் கிடக்கிறது. சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அதற்கான நிதி உதவி கிடைக்கக்கூடிய நிலைமை உண்டாகியிருப்பதாக கிரவேஷியா அறிவிக்கிறது. ஒருவேளை அந்த நிதியுதவி கடைசி நேரத்தில் கிடைக்காமல் விட்டாலும் கூட மேலும் 3 5 வருடங்களில் சொந்த நிதியிலிருந்து எடுத்து அப் பாலம் கட்டப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொஸ்னியாவின் ஒரேயொரு கடற்கரை நகரமாக இருக்கும் நெவும் அப் பாலம் கட்டுவதன் மூலம் பாதிக்கப்படலாம் என்று பெர்ஸ்னியா எதிர்ப்புத் தெரிவிக்கிறது. அப் பாலம் கட்டப்படும் பட்சத்தில் நெவும் நகரம் எதிர்காலத்தில் ஒரு பொஸ்னியாவின் முக்கிய துறைமுக நகராகும் சாத்தியங்கள் முடக்கப்படும் என்பது அவர்களது அச்சம். அத்துடன் கிரவேஷியாவின் வடக்கு தெற்காகப் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகள் நெவும் நகரில் தங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானமும் குறைந்துவிடும் என்பதும் இன்னொரு காரணம்.

இனி மீண்டும் கிரவேஷியாவைக் கவனிப்போம். நாங்கள் வந்து இறங்கிய நகரான ஸ்பிளிட் மட்டுமன்றி அடையவிருக்கும் டுப்ரோவ்னிக் நகரையும் சேர்த்த பகுதி டால்மாசியன் என்ற புவியியல் பெயரால் அழைக்கப்படுகிறது. சுமார் 900 000 மக்கள் இப் பிராந்தியத்தில் வாழ்கிறார்கள். மற்ற கிரவேஷியப் பகுதிகளைப் போலவே இங்கும் நகரங்களையும் அதைச் சுற்றியுமுள்ள பகுதிகளிலேயே மக்கள் செறிவாக வாழ்கிறார்கள். கிராமங்கள் மெதுவாக தமது குடிமக்களை இழந்து வருகின்றன. முதலில் குறிப்பிட்டவை தவிர ஸடார், ஸிபர்னிக் ஆகியவையும் இப் பிராந்தியத்தின் மேலும் இரண்டு முக்கிய நகரங்கள்.

இனி மீண்டும் கிரவேஷியாவைக் கவனிப்போம். நாங்கள் வந்து இறங்கிய நகரான ஸ்பிளிட் மட்டுமன்றி அடையவிருக்கும் டுப்ரோவ்னிக் நகரையும் சேர்த்த பகுதி டால்மாசியா என்ற புவியியல் பெயரால் அழைக்கப்படுகிறது. சுமார் 900 000 மக்கள் இப் பிராந்தியத்தில்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...




## சின்னத்திரை




நடிப்பு : அஜய் ராஜ், பிரபுஜித், ஆஹ்ருதி சிங், ரியாமிகா, ஷான், கபாலி விஷ்வா, பிரதீப்
ஒளிப்பதிவு : வின்சென்ட் அமல்ராஜ்
இசை : ஜோஹன்
தயாரிப்பு : கலர் ஷேடோஸ் என்டர்டெயின்மெண்ட்
இயக்கம் : சஜோ சுந்தர்

அபாயகரமான சைபர் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவரது செல்போனில் இருந்து, அவருக்கே தெரியாமல் போட்டோக்களையும், வீடியோக்களையும், சுய விவரங்களையும் திருடி, குறிப்பாக நிர்வாண வீடியோக்களை வெளியிட்டு எக்ஸ் வீடியோஸ் என்ற இணைய தளம் சமூகத்தைச் சீரழித்து வருகிறது. அது எப்படி? அதனால் பாதிக்கப்படுபவர்களின் நிலைமை என்ன என்பதை, விழிப்புணர்வு படமாகக் கொடுக்க முயன்றிருக்கிறார்கள். மனைவியின் அழகைப் பார்த்து ரசிக்க, அவரது அனுமதியுடன் வீடியோ எடுத்து லப்டாப்பில் சேமித்து வைக்கிறார் கணவர்.

அது எப்படியோ வெளியில் கசிந்து விடுகிறது. பல இணையதளங்களில் மனைவியின் நிர்வாணக் காட்சி வெளியானதைக் கண்டு அதிர்ச்சி அடைகிறார், கணவர். இந்த நிலையில், ஆபாச இணையதளங்கள் குறித்து விசாரிக்கும் மீடியா நிருபர், பணத்துக்காக பல பெண்களின் அந்தரங்க வீடியோக்களை பல இணையதளங்களில் வெளியிடும் முக்கியப் புள்ளி ஒவருரை கண்டுபிடித்து போலீசாரிடம் புகார் செய்து விடுகிறார். போலீசும் அவரைக் கைது செய்கிறது. ஆனால், சட்டத்திலுள்ள குறுக்குவழியின் மூலம் தப்பித்து விடும் அந்த நபர், பிறகு அதே மீடியா நிருபரின் வலையில் சிக்குகிறார்.

அதற்குப் பிறகு நடந்தது என்ன? பாதிக்கப்பட்ட அப்பாவிப் பெண்களுடைய நிலை என்ன என்பது மீதி கதை. அஜய் ராஜ், பிரபுஜித், ஆஹ்ருதி சிங், ரியாமிகா, ஷான் உள்பட பலர் புதுமுகங்கள் என்றாலும், தங்கள் கரக்டரை உணர்ந்து நடித்திருக்கிறார்கள். பார்க்கில் அமர்ந்துள்ள ஒருவரிடம் செல்போனை லபக்கிக்கொண்டு ஓடும்போது சிரிக்க வைத்திருக்கிறார், கபாலி விஷ்வா. தன் மகள் ரியாமிகாவின் வீடியோ வெளியானதை அறிந்து பிரதீப் எடுக்கும் முடிவு விபரீதமானது. வின்சென்ட் அமல்ராஜின் ஒளிப்பதிவு, எந்த இடத்திலும் கதையை மீறிச் செல்லவில்லை. ஜோஹன் பின்னணி இசை ஓ.கே ரகம். பாடல்கள், சண்டைக் காட்சி இல்லாதது பெரிய ஆறுதல்.

செல்போனில் மக்களுடைய அந்தரங்கங்களை, குறிப்பாக இளம் பெண்களின் பெர்சனல் போட்டோ மற்றும் வீடியோக்களை அவர்களுக்கே தெரியாமல் திருடி பிழைப்பு நடத்தி வருகிறது ஒரு கூட்டம். கொடிய நோய் போல் இந்த சமுதாயத்தினரைக் கெடுப்பவர்கள் குறித்து எச்சரிக்கை மணி அடித்திருக்கும் இந்தப் படத்தில், 'அந்தமாதிரி'சில காட்சிகளை வைத்திருக்க வேண்டுமா என்று இயக்குனர் கொஞ்சம் யோசித்திருக்கலாம்.



### ரேஷ்மா ஸ்பெஷல்

முதல் சீரியலிலேயே ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கிக் கொண்டவர் பூவே பூச்சூடவா ரேஷ்மா. சக்தி பாத்திரத்தில் கலக்கியிருந்தார். நடிப்பிற்காக மட்டுமல்ல, அவரது ஆடைத் தேர்விற்காகவும் பலரால் ரசிக்கப்படுபவர். மொடலிங் செய்து கொண்டிருந்தவர், டான்ஸ் ஜோடி டான்ஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அப்படியே சீரியலுக்கு வந்து விட்டார். நல்ல நிறமாக இருந்தால்தான் வாய்ப்பு வருமென்றில்லை, அதெல்லாம் பழைய காலமென்கிறார். ஆடை நிறத்தேர்வில் அதிக கவனம் செலுத்துவாராம். இப்போ, சீரியலில் டபுள் கலர் புடவைகளையே தேர்வுசெய்து பயன்படுத்துகிறார். புடவை முழுக்க ஒரு நிறமாகவும், போர்டர் ஒரு நிறமாகவும் டிசைன் செய்த புடவை. அதனுடன் போட் நெக், பேக் ஓப்பன், முக்கால் கை பிளவுஸ்கள் இப்போ டிரண்ட். அம்மா எனக்காக நிறைய டிசைன்களில் போர்டர்கள் ரெடி செய்து, புடவையில் மிக்ஸ் மட்ச் பண்றாங்க. அதுதான் அவரை சீரியலில் ஸ்பெஷலாக காட்டுது.



### சீரியல் தாக்குதல்கள்!

தமிழ் சீரியல் படப்பிடிப்பில் அண்மையில் இரண்டு தகராறு நடந்திருக்கிறது. ஒன்று, ராஜாராணி சீரியலில் ஹீரோ சஞ்சீவ் உதவி இயக்குனர் ஒருவரை தாக்கியிருக்கிறார். மற்றையது, வாணி ராணி சீரியலில் நடிக்கும் பல்லு உதவி இயக்குனர் ஒருவரை தாக்கியிருக்கிறார். பப்லு படப்பிடிப்பிற்கு தாமதமாக வருவது வழக்கம். படப்பிடிப்பிற்கு அவர் தாமதமாக வருவதால் நிறையப்பேர் பாதிக்கப்படுவதை உதவி இயக்குனர் ஒருவர் எடுத்துச்சொல்ல, அது பிரச்சனையாகி, உதவி இயக்குனரை தாக்கியுள்ளார் பப்லு. அதேபோல, ராஜாராணி சீரியலின் நாயகி ஆல்யா மானாஸாவிற்கும் உதவி இயக்குனர் ஒருவருக்கும் தகராறாக, நடுவில் புகுந்த ஹீரோ சஞ்சீவ் அந்த உதவி இயக்குனரை தாக்கியுள்ளார்.



### 'ராக்ஸ்டார்' ரமணியம்மாள் கடந்து வந்த பாதை

கேள்வி ஞானத்தில் பாட்டுப் பாடிக்கொண்டு அக்கம்பக்க வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தவர் ரமணியம்மாள். வேலை பார்த்து வந்த ஒரு வீட்டின் உரிமையாளரால் ஜீ தமிழ் சனலின் 'சரிகமப' நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வைக்கப்பட்டார். சனலே'ராக் ஸ்டார்' என்கிற பட்டத்தைத் தந்து ஊக்கப்படுத்துகிறது. பேரன் பேத்தி வயதுப் போட்டியாளர்களுடன் பங்கெடுத்து ஃபைனல்வரை வந்து இரண்டாமிடம் பிடித்தார். நிலம் பரிசாகக் கிடைத்தது. பரிசுத் தொகையாகக் கிடைத்த சில லட்சங்கள் மூலம் கடன் அடைக்கப்பட்டு விட்டது. சென்னையைத் தாண்டி வெளியில் செல்லாதவர் ஷோ நடந்துகொண்டிருந்தபோதே சிங்கப்பூர் சென்று வந்தார். ஷோ முடிவடைந்து விட்டாலும் அதன் பயனாகத் தற்போது பல மேடைகளில் ரமணியம்மாளுக்குத் தனி மரியாதை. பல வெளிநாட்டு கலைநிகழ்ச்சிகளில் பாட பறந்துகொண்டிருக்கிறார். இப்பொழுது ரமணியம்மாள் இலங்கை போய் வந்திருக்கிறார். அடுத்த மாதம் (ஜூலை) அவுஸ்திரேலியப் பயணம் காத்திருக்கிறது.



### நண்பியால் முதல் சினிமா வாய்ப்பு

மேடை நாடகங்களின் மூலம் சின்னத்திரைக்கு நுழைந்தவர் சுஜாதா. 16 வயதிலேயே நாடகங்களில் நடித்தவர். தற்போது கங்கா, யாரடி நீ மோகினி ஆகிய சீரியல்களில் நடித்து வருகிறார். இதுவரை 50 இற்கும் மேற்பட்ட சீரியல்களில் நடித்து விட்டார். அழகி சீரியலில் இவர் நடித்த பாஞ்சாலி பாத்திரம்தான் நடித்ததிலேயே மிகப்பிடித்த பாத்திரமாம். இன்றுவரை பாஞ்சாலி என்றுதான் பலரும் கூப்பிடுகிறார்களாம். அந்த சீரியலில் நடித்தவர் விஜி. அவர் சுஜாதாவின் தோழியாம். அவருக்கு சந்தானம் நடித்த வல்லவனிற்கு புல்லும் ஆயுதம் படத்தில் வாய்ப்பு கிடைக்க, அந்த வேடத்திற்கு தன்னைவிட சுஜாதாதான் பொருத்தமானவர் என கூறி, இவருக்கு வாய்ப்பைக் கொடுத்தாராம். சினிமாவில் முதல் சீன், முதல் ரேக்கிலேயே ஓகே ஆனதாம். அங்கிருந்தபடியே விஜிக்கு போன் பண்ணி நன்றி கூறினேன் என்கிறார்.

# வண்ணத் திரை

## நாளொரு வித்தை கற்கும் இனியா!

வாகை சூட வா படத்தில் அறிமுகமாகி கவர்ந்த இனியா அடுத்தடுத்து பல படங்களில் நடித்துள்ளார். ஆனால் தற்போது பட வாய்ப்புக்கள் இல்லாமல் வீட்டில் இருக்கிறார். இதையடுத்து, இனியாவின் தங்கையும் நடிக்க வந்து விட்டார். ஓய்வு நேரத்தில் மியா என்ற இசை வீடியோ ஆல்பம் ஒன்றை தயாரித்துள்ளார். 8 நிமிட ஆல்பமான இதில் மியா என்ற நடனப் பெண் ஒருவரின் வாழ்க்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விருதுகளை வாங்கி குவிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் டான்ஸராக இருக்கும் ஒரு பெண் அந்த விருதை அடைய எப்படி போராடுகிறாள் என்பதுதான் இதன் கரு. "எனக்கு ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை வீணடிக்க மாட்டேன். ஏதாவது ஒரு கலையை கற்பேன். இப்படித்தான் களரி சண்டை பயிற்சி கற்றேன். அடுத்து சமகால நடனம் கற்றேன். அப்போதுதான் இசை ஆல்ப எண்ணம் உதித்தது" என்கிறார் இனியா.

## சல்மானின் கனவு திட்டம்!

பாலிவுட் நடிகர் சல்மான் கான் ஷில்லர் பார்ட்டி மிஸ்டர் கப்பி ஆகிய படங்களின் மூலம் தயாரிப்பாளராக மாறிய கதை நமக்கு ஏற்கனவே தெரியும். தற்போது இன்னும் ஒரு படி மேலேபோய் ரேஸ்3 படத்திற்காக முதன்முதலாக விநியோகஸ்தராகவும் மாறியுள்ளார் சல்மான் கான். ஆனாலும் தனது படத்தின் டிக்கெட் விலை ரசிகர்களை பாதிக்காதவாறு குறைந்த கட்டணத்தையே நிர்ணயிப்பேன் என்றும் வாக்கு கொடுத்துள்ளார். மேலும் மனிதர் இத்துடன் நிற்க போவதில்லையாம். மும்பைக்கு வெளியே சல்மான் டாக்கீஸ் என்கிற பெயரில் சங்கிலி தொடர் போல தியேட்டர்களை துவங்கும் கனவுத்திட்டமும் அவரிடம் இருக்கிறதாம்.

## காலா நாய் 2 கோடி ரூபா!

ரஜினி நடித்த காலா படத்தில் ஒரு காட்சியில் ரஜினி லுங்கி, பனியன் அணிந்தபடி தோளில் டவல் போட்டு ஒரு கதிரையில் அமர்ந்திருப்பார். அப்போது அவர் அருகில் ஒரு நாயும் அமர்ந்திருக்கும். அதையடுத்து ரஜினி குடும்பத்துடன் எடுத்துக்கொள்ளும் போட்டோவிலும் அந்த நாய் இடம்பெற்றிருக்கும். அந்த நாய்க்கு இப்போது மவுசு கூடி விட்டதாம். ரஜினியுடன் நடித்த நாய் என்பதால் அதை ரூ. 2 கோடிக்கு விலை கொடுத்து வாங்க முன்வந்துள்ளார்களாம். ஆனால் அதன் உரிமையாளர் ரஜினியுடன் நடித்த நாய் என்பதால் அதை விற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். காலா வருமானமீட்டுகிறதோ இல்லையோ, நாய் வருமானமீட்டும் போலுள்ளதே!

## எமியின் பார்ட்னர் இவர்தான்!

சமீபத்தில் இன்ஸ்டகிராமில் புகைப்படம் ஒன்றை வெளியிட்ட நடிகை எமி ஜாக்சன், தான் லெஸ்பியன் வாழ்க்கை வாழ்வதாக பதிவிட்டிருந்தார். அவரது பதிவும், அவர் வெளியிட்ட புகைப்படமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எமி ஜாக்சன் லெஸ்பியன் வாழ்க்கை வாழ்வது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எமியின் "பார்ட்னர்" யாரென்றுதான் ரசிகர்கள் ஆவலாக தேடிக் கொண்டிருந்தனர். தற்போது அந்த பெண் பற்றிய விபரங்கள் வெளியாகியுள்ளன. இந்தி வம்சாவழியான நீலம் கில் என்ற அந்த பெண் பிரபலமான மாடல் அழகி ஆவார். 23 வயதாகும் அவர் பிரித்தானியாவில் வசிக்கிறார். ஏகப்பட்ட பேஷன் ஷோக்களில் பங்கேற்றிருக்கிறார். தற்போது, எமி ஜாக்சனுடன் பழகி வரும் அவர், எமி ஜாக்சனுடன் சேர்ந்து பல மாடலிங் பணிகளிலும் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

## விஜய் அதிரடி முடிவு!

நடிகர் விஜயின் பிறந்தநாள் வரும் ஜூன் 22 ஆம் திகதி வருகிறது. தனது பிறந்தநாள் தினத்தில் சென்னை எழும்பூர் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மோதிரத்தை பரிசாக வழங்கி வருகிறார். அதுமட்டும் இன்றி, ரசிகர்கள் அவரது பிறந்தநாளை ஒவ்வொரு ஆண்டும் கோலாகலமாக கொண்டாடி வருவதோடு, ஏழை எளிய மக்களுக்கு பல நலத்திட்ட உதவிகளையும் வருகின்றனர். அதன்படி இந்த ஆண்டு விஜய் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக பல பெரிய திட்டங்களை ரசிகர்கள் போட்டுள்ளனர்.ஆனால், இந்த ஆண்டு தனது பிறந்தநாளை கொண்டாடப்போவதில்லை என்று விஜய் முடிவு எடுத்திருக்கிறாராம். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தால் இந்த வருட பிறந்தநாள் கொண்டாட்டங்களை ரத்து செய்யும்மாறு தனது ரசிகர் மன்றங்களுக்கும் விஜய் உத்தரவிட்டுள்ளாராம். இது அவரது ரசிகர்களுக்கு ஒருபக்கம் சோகத்தை ஏற்படுத்தினாலும், தூத்துக்குடி மக்களுக்காக என்பதில் விஜயின் முடிவை ரசிகர்கள் வரவேற்றுள்ளார்கள்.

## சூர்யாவை கவர சாயிஷா குத்தாட்டம்!

வனமகன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர் சாயிஷா. பிரபல இந்தி நடிகர் திலீப் குமாரின் பேத்தி. இந்தி, தெலுங்கு படங்களில் நடித்து விட்டு தமிழுக்கு வந்தார். தற்போது ஜுங்கா, கடைக்குட்டி சிங்கம், கஜினிகாந்த் படங்களில் நடித்து வருகிறார். ஷாயிஷா தற்போது இணைய தளத்தில் வைரலாகியிருக்கிறார். அடிப்படையில் நடன கலைஞரான சாயிஷா, தானா சேர்ந்த கூட்டம் படத்தில் சூர்யா பாடிய "சொடக்கு மேல சொடக்கு போடுது..." பாடலுக்கு சாயிஷா தனது வீட்டுக்குள் சரியான குத்தாட்டம் ஒன்றை போட்டு, அதனை வீடியோ எடுத்து தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். அந்த குத்தாட்டம்தான் இப்போது ஆன்லைன் டிரண்டிங். தற்போது தம்பி கார்த்தி ஜோடியாக கடைக்குட்டி சிங்கம் படத்தில் நடித்து வரும் சாயிஷாவுக்கு அடுத்து அண்ணன் சூர்யாவுடன் நடிக்கும் ஆசை இருக்கிறது. அதற்கான கவன ஈர்ப்புக்குத்தான் இந்த குத்தாட்டம் என்கிறார்கள்.



மாள்விகா

## சூர்யாவுடன் இளமையாக நடிக்கும் மோகன்லால்

நடிகர் சூர்யா கே.வி.ஆனந்த் இயக்கத்தில் நடிக்க உள்ளார். இதில் நடிகர் மோகன்லால், தெலுங்கு நடிகர் அல்லு சிரிஷ் ஆகியோர் நடிக்கின்றனர். இந்த படத்தில் மோகன்லால் இளமையாக தோற்றமளிக்கிறார். ஜில்லா படத்தில் நடிகர் விஜய்க்கு வளர்ப்பு தந்தையாக நரை முடியுடன் வந்த மோகன்லால், சூர்யா படத்தில் அதைவிட இளமையான தோற்றத்தில் நடிக்க உள்ளாராம்.

## டூப் இல்லாமல் அஜித் சண்டைக்காட்சியில்

சிவா இயக்கத்தில் அஜித் நான்காவது முறையாக நடிக்கும் விஸ்வாசம் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடைபெற்று முடிந்தநிலையில், அடுத்தகட்ட படப்பிடிப்பு மும்பையில் நடைபெறுகிறது. அங்கே சண்டைக்காட்சிகள் படமாக்கப்பட இருப்பதாக சொல்லப்படுகிறது. விஸ்வாசம் படத்தின் சண்டை பயிற்சியாளராக திலீப் சுப்பராயன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கடந்த சில படங்களாகவே அஜித்தின் ஆஸ்தான சண்டைப்பயிற்சியாளராக இருந்தவர் சில்வா மாஸ்டர். என்ன காரணத்தினாலோ விவேகம் படப்பிடிப்பின்போது சில்வா மீது அஜித்துக்கு அதிருப்தி ஏற்பட்டது. எனவே விஸ்வாசம் படத்தில் அவருக்கு வாய்ப்பு கொடுக்காமல் திலீப் சுப்பராயனை கமிட் பண்ணினார்கள். மங்காத்தா படத்திற்கு பிறகு அஜித் நடிக்கும் படத்திற்கு திலீப் சுப்பராயன் சண்டை காட்சிகளை அமைப்பது இந்த படத்திற்குத்தான். டூப் இல்லாமல் பெரும்பாலும் அஜித்தை ரியலாக நடிக்க வைத்து சண்டைக்காட்சிகளை படமாக்க திட்டமிட்டுள்ளாராம் திலீப் சுப்பராயன்.

## த்ரிஷா எதிர்பார்க்கும் படம்!

நயன்தாரா மாயா படத்தில் நடித்த மாதிரி த்ரிஷா சோலோ ஹீரோயினாக நடித்துள்ள படம் மோகினி. விஜய் நடித்த மதுர படத்தை இயக்கிய ஆர்.மாதேஷ் இயக்கி உள்ளார். த்ரிஷாவுடன் பூர்ணிமா பாக்யராஜ், யோகி பாபு, சுரேஷ் உள்பட பலர் நடித்துள்ளனர். படத்தில் ஹீரோ இல்லை என்றாலும் பிரபல மொடல் ஜாக்கி பெஷ்ணானி த்ரிஷா ஜோடியாக நடித்துள்ளார். 75 சதவிகித படப்பிடிப்பு வெளிநாட்டில் நடந்தது. படப்பிடிப்புகள் முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்டது. கடந்த பெப்ரவரி மாதமே வெளிவந்திருக்க வேண்டிய படம் இதுவரை வெளிவரவில்லை. படத்தில் 40 நிமிடங்கள் கிராபிக்ஸ் காட்சிகள் உள்ளது. அதன் பணிகள் முடியவில்லை என்று கூறப்படுகிறது. படத்தின் பட்ஜெட் எதிர்பார்த்ததை விட அதிகமாகிவிட்டது. அந்த அளவிற்கு படம் வியாபாரமாகாததால் முடங்கி கிடக்கிறது என்றும் கூறப்படுகிறது. படத்தை சிங்கம் 2 படத்தை தயாரித்த பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. த்ரிஷா இந்தப் படத்தை மிகவும் எதிர்பார்த்து காத்திருக்கிறார்.




✎ டி.ஏ.நரசிம்மன்

# சி(ரி)த்ராலயா
## ராஜசுலோச்சனா எடுத்த இன்சூரன்ஸ்!

கொல்லன் பட்டறையில் ஈறும்புக்கு என்ன வேலை? கோபுவின் எதிர்பாராத தேர்தல் பிரச்சாரம் அப்படித்தான் ஆகிவிட்டது. நடிகர் சோவின் தந்தை ஆத்தூர் ஸ்ரீனிவாச அய்யர் அப்போது மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்தார். அவர் கோபுவின் நகைச்சுவை நிகழ்ச்சிக்குப் பரம விசிறி.

அப்போது தேர்தல் வர, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்துக்கு கோபுவின் நகைச்சுவை நிகழ்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தார். காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார் அண்ணா. அவரை எதிர்த்துத் தேர்தல் பிரச்சாரம் செய்துவிட்டு வரும்படி ஆத்தூர் ஸ்ரீனிவாச ஐயர் ஒரு லாரியைக் கொடுத்து அனுப்பினார். பிரச்சாரத்துக்குக் கிளம்பிய கோபுவின் மனக்கண்ணில் திண்ணையில் அமர்ந்து எளிமையான தோற்றத்தில் கதை, வசனம் எழுதிக்கொண்டிருந்த அண்ணாவின் உருவம் வந்து நிழலாடியது.

அவரை எதிர்த்து பிரச்சாரமா என்று ஒரு கணம் தயங்கினார். ஆனால் தனது நலவிரும்பியான ஆத்தூராரிடம் முடியாது என்று சொல்ல முடியாதே. வேறு வழியில்லாமல் பேசும்படம் சம்பத்குமார், ரெங்குடு, வெங்கு என்று கிடைத்த நண்பர்களை லாரியில் அள்ளிப்போட்டுக்கொண்டு காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார் கோபு.

அப்போது திராவிட நாடு அலுவலகத்தில் கணக்காளராகப் பணி புரிந்துகொண்டிருந்தவர் அரங்கண்ணல். அண்ணாவின் தேர்தல் மேனேஜரும் அவர்தான். கோபுவுடன் அவர் நன்றாகப் பழகியிருந்ததால் பிரச்சாரம் செய்யவந்த கோபுவைக் கண்டதும் அவருக்கு வியப்பு. " என்னடா தம்பி? அண்ணாவுக்கு எதிரா மைக் பிடிக்கிற தைரியம் உனக்கு இருக்கா?" என்றதும் கோபுவின் அடிவயிறு கலங்கியது. அரங்கண்ணல் அப்படிக் கேட்டதும் லாரியைவிட்டு இறங்கி ஒருமுறை அத்தையின் வீட்டுக்குப்போய் கலங்கிய வயிற்றைக் காலி செய்துவிட்டுவந்து திரும்பவும் பிரச்சார லாரியில் ஏறினார்.

தேர்தலுக்குச் சில தினங்களே இருந்த நிலையில் அண்ணாவும் அப்போது காஞ்சிபுரத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். உஷாராக கோபு ஒரு உத்தியைக் கையாண்டார். அண்ணா பிரச்சாரம் செய்துவிட்டு சென்ற தெருக்களில் அவர் வாக்குச் சேகரித்து சென்றபின் லாரியை அந்தப் பகுதிக்குவிடச்சொல்வார்.

யார் இந்தப் பொடியன்?

அண்ணா முதல்நாள் பொதுக் கூட்டம் பேசிய ஆடிசன்பேட்டை தெருவில்போய் கோபுவின் பிரச்சார லாரி நின்றது. முதலில் மைக் பிடித்த கோபுவுடைய நண்பன் வெங்கு,

“எல்லாரும் பொழுதோடு எழுந்து தீர்த்தமாடிட்டு வாக்குச்சாவடிக்குப் போய், நம்ம ராட்டை சின்னத்துக்கு ஓட்டு போடுங்கோ” என்று பேச பட்டென்று மைக்கைப் பிடுங்கினார் கோபு. “ஏன்டா... ஏற்கெனவே காங்கிரஸை அக்ரஹாரக் கட்சினு முத்திரை குத்திட்டா. நீ வேற தீர்த்தமாடி... அப்படி இப்படினு விழுற ஓட்டுக்கும் வேட்டு வச்சிடுவபோல இருக்கே!” என்று சொல்லிவிட்டு திராவிடக் கட்சிகளின் பாணியில் ஆரம்பித்தார் கோபு.

“காங்கிரஸ் சிங்கங்களே. வீர அடலேறுகளே. தமிழ் மண்ணின் தாய்க் குலமே! பல்லவ நாட்டின் பல்கலைக் கழகமாம் காஞ்சியின் பகுத்தறிவு மிக்க சான்றோரே” என்று கவர்ச்சிகரமான வார்த்தைகளில் மாலை கோத்த கோபு காங்கிரஸுக்கு ஆதரவுகேட்டு, “அடுக்குமொழியால் தமிழைத் திடுக்கிட வைக்கும் அண்ணாதுரை அவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், அரசியல் அரங்கம் என்பது கதை, வசனம் எழுதும் கற்பனைக் கோட்டை என்று நினைத்துவிட்டாரா? வாய்ஜாலம் இங்கே எடுபடாது...


காஞ்சிபுரம் காங்கிரஸைக் கைவிடாது” என்று இடக்கு மடக்காகப்பேசிக்கொண்டே செல்ல, கொஞ்ச நேரத்தில் லாரியைச் சுற்றிக் கறுப்பு சிவப்புக் கொடிகள் ஏந்திய தொண்டர்கள் மொய்க்க, கோபு பேசி முடித்து சகஜ நிலைக்குத் திரும்பியதுபோது, ‘அடடா! நமது பேச்சுக்கு இத்தனை கூட்டம் கூடிவிட்டதே!’ என ஆச்சரியமாகத் தொண்டர்களைப் பார்த்தார்.

அத்தனை தொண்டர்களின் முகத்திலும் எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண்டிருக்க கண்டு ‘அய்யோ! இவர்கள் அத்தனைபேரும் திமுக தொண்டர்கள் அல்லவா!’ கள நிலவரம் அறிவதற்குள் கோபுவுக்கு மறுபடியும் வயிற்றைக் கலக்க, ‘சீக்கிரம் அத்தைவீட்டுக்குலாரியைவிடச்சொல்’ என்றார் வெங்குவிடம். ஆனால், தொண்டர்கள் விட்டால்தானே! ஆடிசன் பேட்டையில் சந்துபொந்தெல்லாம் வீடு வீடாக வாக்கு சேகரித்துக்கொண்டு கோபு கூட்டணியின் லாரியின் அருகே வந்த அண்ணா, அரங்கண்ணலைப் பார்த்து “யார் இந்தத் துடுக்கான பொடியன், எங்கோ பார்த்திருக்கிறேனே?” என்று கேட்டார்.

அரங்கண்ணல் அண்ணாவிடம், “நம்ம தெரு பையன்தான்.’ சம்ஸ்கிருத பண்டிட் மருமகன்” என்று சொல்ல, தொண்டர்களைப் போகச் சொல்லுங்கள் என்று கெஞ்சும் தொனியில் அண்ணாவைப்பணிவுடன் பார்த்தார் கோபு.

ஆனால், அண்ணா லாரி அருகில் வந்து “என்ன தம்பி! ஏதோ கேட்கணும்னு சொன்னியே” என்பது போன்ற ஒரு பார்வையை கோபுவின் பக்கமாக உதிர்த்துவிட்டு, கையைக் கூப்பி, “உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள்” என்று சொல்ல, கோபு உள்ளிட்ட மொத்தக் கூட்டணியும் அவரைத் திரும்பிக் கும்பிட்டு “சரி அண்ணா” என்று சொல்ல, அங்கே கோபத்துடன் நின்றிருந்த மொத்த திமுக தொண்டர்களும் கொல்லென்று சிரித்துவிட்டு லாரிக்கு வழிவிட்டார்கள்.

தேர்தல் பிரச்சாரம் இப்படி அட்டர் பிளாப் ஆகும் என்று கோபு நினைக்கவே இல்லை. ஆத்தூரார் “பிரச்சாரம் எப்படி கோபு, பேஷா போச்சுதா, அண்ணா காதுக்கு உங்க டீம் பத்தி தாக்கல் போச்சா?” என்று



கேட்டதும் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாத கோபு சடரென்று, “அண்ணாவே லாரிகிட்ட வந்து நின்னு என் பேச்சைக் கேட்டார் என்றால் பாருங்கோ மாமா” என்று கூற ஆத்தூரார் ஆடிப்போனார்.

நிகழ்ச்சியிலிருந்து நாடகம்

இனி, கொட்டிக்கொடுத்தாலும் தேர்தல் பிரச்சாரத்துக்கு மட்டும் போவதில்லை என்று முடிவுசெய்த கோபு ‘நீயும் நானும்’ என்ற நகைச்சுவை நிகழ்ச்சியை நண்பர் ரெங்குடுவோடு நடத்திக்கொண்டிருந்தார். அதிலிருந்து ஒருபடி முன்னேறி ‘மிஸ் மைதிலி’ என்ற நாடகத்தை எழுதி நண்பர்களுடன் திறந்த வெளியரங்கில் நாடகத் தொடங்க அதற்கு வரவேற்பு பெருகத் தொடங்கியது. பல அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்து நாடகத்துக்கு அழைப்பு வந்தது.

ஒரு நாள், காட்டாங்குளத்தூரில் நடந்த அந்த நாடகத்துக்கு, எதிர்பாராதவிதமாக வருகை தந்த டி. ஏ. மதுரம், நாடகத்தை முழுவதுமாக பார்த்து மீண்டும் கோபுவை அருகே அழைத்து “நீ மெட்ராஸுக்கு வராமல் இந்தப் பட்டிக்காட்டுப் புழுதியில ஏன் ராசா கிடக்கிற?” என்று வாழ்த்திவிட்டுசெல்ல கோபு எனும் கலைஞனுக்குக் கண்கள் கலங்கிப்போயின.

நாடகமும் நகைச்சுவை நிகழ்ச்சிகளும் திருமண வயதை நெருங்கிவிட்ட ஒரு இளைஞனின் அன்றாடக் கச்சேரியை நடத்திவிடுமா? கையில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...






# ஏற்றுமதிக்கான நாடுகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

ஏற்றுமதி செய்யப் போகும் பொருளை எப்படி சிரத்தையுடன் தேர்ந்தெடுப்பீர்களோ, அதே சிரத்தையுடன் ஏற்றுமதி செய்யும் பொருளுக்குச் சாதகமான நாட்டையும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

ஏற்றுமதிக்கான நாடுகளைத் தேர்ந்தெடுக்கும்போது மிகுந்த கவனம் அவசியம். முதலில் உங்களுடைய பொருளை ஏற்றுமதி செய்வதற்கான நாடுகளின் விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அங்குள்ள நடைமுறைகளும், தடைகள் ஏதேனும் இருக்கிறதா என்பது போன்ற தகவல்களும் மிக முக்கியமானவை. மேலும், ஒரு நாட்டுக்கு ஒரு பொருள் போவதற்கும், தொழில்ரீதியாக நீங்கள் போவதற்கும் உள்ள நடைமுறைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள நாடு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, அங்குச் செல்வதற்கான போக்குவரத்து வழிகள் என்னென்ன, ஒரு நாட்டுக்கு உங்களுடைய பொருள் போக எவ்வளவு நேரம் ஆகும், நீங்கள் போக எவ்வளவு நேரம் ஆகும் என்பது போன்ற விவரங்களையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாடுகளின் விவரங்களை வைத்து உங்களுடைய ஏற்றுமதிக்கான நாடுகளைப் பட்டியலிட்டுக்கொள்ளுங்கள். அவற்றிலிருந்து தகுந்த நாடுகளைத் தேர்வு செய்துகொள்ளலாம்.

பொருள்களை அனுப்ப,முடிந்தவரை ட்ரான்சிட் விமானங்களைத் தவிர்ப்பது நல்லது. ட்ரான்சிட் விமானங்கள் நேரடியாக நாம் அனுப்ப வேண்டிய நாட்டுக்குச் செல்லாமல், வேறு ஓர் இடத்துக்குச் செல்லும். அங்கிருந்து வேறு ஒரு விமானம் மூலம் பொருள்கள் நீங்கள் அனுப்பத் திட்டமிட்ட நாட்டுக்குச் செல்லும். இதனால் நாம் திட்டமிட்ட ஏற்றுமதி தாமதமாகலாம். தாமதமானால் நாம் அனுப்பும் பொருள்கள் அதே தரத்தில், அதே நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இதனால் நமக்கு நஷ்டம் ஏற்படலாம்.

உதாரணமாக, கொழும்பிலிருந்து புரூனே என்ற நாட்டுக்குக் கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்கிறீர்கள் என்றால், குறைந்தபட்சம் அந்தப் பொருள் சென்று சேர எட்டு நாள்கள் ஆகும். முதலில் மதர் வெசல் (mother vessel) அல்லது ஃபீடர் வெசல் (Feeder vessel) மூலமாகப் பொருள்கள் சிங்கப்பூருக்குப் போகும். இதற்கு 5 நாள்கள் ஆகலாம். பின்னர் சிங்கப்பூர் அல்லது மலேசியாவிலிருந்து பார்ஜ் (Barge) என்ற கப்பல் மூலம் புரூனேவுக்குச் செல்லும். ஆனால், இந்த பார்ஜ் கப்பல், உடனே பொருள்களை எடுத்துக்கொண்டு கிளம்பிவிடாது. அது கிளம்புவதற்கு 15 நாள்கள்கூட ஆகலாம்.

இதுவே விமானத்தின் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்றால் சென்னையிலிருந்து புரூனேவுக்குச் சென்று சேர 15 மணி நேரம் ஆகலாம். ட்ரான்சிட் விமானம் வழியாகவே புரூனே சென்று சேரும். முதலில் மலேசியா அல்லது சிங்கப்பூருக்கு விமானம் செல்லும். பின்னர் மலேசியா அல்லது சிங்கப்பூரிலிருந்து ட்ரான்சிட் விமானமானது புரூனேவுக்குச் செல்லும். மலேசியாவிலிருந்து புரூனேவுக்குச் செல்ல 3 மணி நேரம்தான் ஆகும். ஆனால் அதே சமயம் மலேசியாவில் இருந்து விமானம் புறப்பட மூன்று நாள்களுக்கும் மேல்கூட ஆகலாம்.

எனவே, நாம் அனுப்பக்கூடிய பொருள்கள் குறிப்பிட்ட நாட்டுக்குச் சென்று சேர்வதற்கான காலம் எவ்வளவு என்பதைப் பொறுத்து இறக்குமதியாளரிடம் இத்தனை நாள்களில் வந்து சேரும் என்று தெரிவிக்க வேண்டும். மேலும், விசா குறித்த விவரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். விசா கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1,500லிருந்து ரூ.50,000 வரையிலும் இருக்கலாம். முதன்முதலில் அயல்நாடு செல்பவர்கள் குறைந்தபட்ச கட்டணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது. விசா விரைவாகக் கிடைக்கும்படியான நாடுகளைத் தேர்வு செய்யலாம். புதிதாக ஏற்றுமதி செய்யப்போகிறவர்கள் ரூ.25 ஆயிரத்துக்குக்கீழ் செலவாகும்படி தங்களின் பயணத்தைத்திட்டமிடலாம்.

அதேபோல் எந்த நாட்டுக்கு நாம் சென்றாலும் அந்த நாட்டு இமிக்ரேஷனில் நம்மை, பல கேள்விகள் கேட்பார்கள். எதற்காக வந்திருக்கிறோம், எத்தனை நாள்கள் தங்குவோம் என்றெல்லாம் கேட்பார்கள். அதைவிட முக்கியமாக 'சோ மணி (show money)' எவ்வளவு இருக்கிறது என்று கேட்பார்கள். அதாவது, நீங்கள் அந்த நாட்டில் தங்கப் போகும் நாள்களுக்குத் தேவையான செல்வுகளுக்குப் போதுமான பணம் நம்மிடம் இருக்கிறதா என்பதை அறியத்தான் இந்தக் கேள்வி. கையில் எதுவுமே இல்லாமல் அங்கு தங்கி என்ன செய்யப் போகிறோம் என்று அவர்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டால் நமக்குச் சிக்கல்தான். எனவே, நாம் எத்தனை நாள்கள் அங்கு தங்கப் போகிறோமோ அத்தனை நாள்களுக்கான பணம் நம்மிடம் இருக்க வேண்டும்.

பிற நாடுகளுக்குப் போவதற்குமுன் நாம் சந்திக்கப் போகிறவரின் சந்திப்பை உறுதி செய்து கொண்டு, அதற்கு ஏற்பப் பயணத்தைத் திட்டமிட வேண்டும். அதேபோல் எங்கே தங்கப் போகிறோம் என்கிற முழு விவரங்களை அறிந்து வைத்திருப்பது அவசியம். இதுகூட தெரியாமலா கிளம்பி வந்துவிட்டீர்கள் என்று அவர்கள் சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டால் சிக்கல் நமக்குத்தான். நாடுகளைத் தேர்ந்தெடுப்பதில் மேலும் பல்வேறு அம்சங்கள் உள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள விதிமுறைகள், கட்டுப்பாடுகள் உள்ளிட்ட விவரங்களை அடுத்த இதழில் சொல்கிறேன். **(ஜெயிப்போம்)**



---

பணம் நடமாட சொல்லிக்கொள்ளும்படியான ஒரு நல்ல வேலை வேண்டுமே? மீண்டும் பெரியப்பா மகனே சரணம் என்று அவரைச் சந்திக்க சென்றார் கோபு.

ஆயுள் குறைந்த இன்சூரன்ஸ் வேலை

அவர் ஏஷியன் இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை வாங்கிக் கொடுத்தார். ஜார்ஜ் டவுனில் இருந்த அலுவலகத்துக்குச் செங்கல்பட்டிலிருந்து சீசன் டிக்கெட் எடுத்துக்கொண்டு சென்று வருவார். நண்பர்களுடன் ரயிலில் சீட்டு கச்சேரி, நகைச்சுவை நிகழ்ச்சிகள் சூடு பறக்கும். 'தெரிந்தவர்களிடம் பாலிசி எடுத்து வாருங்கள்' என்று இன்சூரன்ஸ் மேனேஜர் உத்தரவிட, நெருங்கி நண்பனாக இருந்த 'பேசும் படம்' சம்பத்குமாரை அணுகினார் கோபு.

"யாராவது சினிமாக்காரங்க பாலிசி எடுப்பார்களா?" கோபு கேட்டார். "அவ்வளவுதானே! என்னோடு வா" என்ற சம்பத்குமார் நேராக ராஜசுலோச்சனாவிடம் அழைத்துச் சென்றார். "என் சினேகிதனுக்காக ஒரு இன்சூரன்ஸ் பாலிசி எடுத்துக்க முடியுமா மேடம்?" என்று சம்பத்குமார் கேட்ட உடனே பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு பாலிசி எடுத்தார் ராஜசுலோச்சனா.

அதுவரை வில்லன் பி.எஸ்.வீரப்பா போல முறைத்து வந்த மேனேஜர் நட்சத்திர பாலிசிகளுடன் கோபு வரத் தொடங்கியதும் குணச்சித்திரத் திலகம் நாகையா போன்று உணர்ச்சிவசப்பட்டார். "நீங்க இனிமே டை கட்டிட்டு பாலிசி பிடிக்கப்போங்க" என்று அறிவுரை வேறு கொடுக்க, மறுநாள் ஜானவாசத்துக்கு வாங்கிய அண்ணனின் டையை ஏடாகூடமாகக் கழுத்தில் கட்டி, அது இறுகி தொண்டை கம்மி எம்.ஆர்.ராதாவின் கீச்சுக்குரலில் பேசியபடி பலநாட்கள் நடமாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது கோபுவுக்கு.

அதுவுமில்லாமல் கோபு டை கட்டிக்கொண்டது பிரதமர் நேருவுக்குப் பிடிக்கவில்லை போல் இருக்கிறது. ஒரே இரவில் இன்சூரன்ஸ் கம்பெனிகள் அனைத்தையும் அரசாங்கம் நாட்டுடைமை ஆக்கிவிட, ட்ரெயினியாக இருந்த கோபுவுக்குக் காலியானது இன்சூரன்ஸ் ஜோலி. ஆனால், கோபு மனம் தளரவில்லை. அவருக்குக் கோயிலாக அடைக்கலம் கொடுத்தது செங்கல்பட்டு திருமலை டாக்கீஸ் திரையரங்கம்.

**சிரிப்பு தொடரும்**

# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்




உங்களுக்குத் தெரியுமா...? ஆண்களுக்கு விந்து சுரப்பதில் விடுமுறை என்பதே கிடையாது. ஒரு தந்தை, தன் 20 வயது மகனை அழைத்து வந்தார். "இவனுக்குத் தூக்கத்தில் விந்து வெளியேறுகிறது. ஏதாவது பிரச்னையாக இருக்குமா டாக்டர்?" என்று கேட்டார். அவர்களுக்கு இது குறித்து விளக்கி, 'பயப்பட வேண்டாம்' என்று சொல்லி அனுப்பிவைத்தேன்.

ஆண்கள் 13, 14 வயதில் பருவமடைவார்கள் (Puberty). அப்போது சுரக்கத்தொடங்கும்விந்து மரணம்வரை சுரக்கும். விந்து சுரக்காமல் போக மூன்று காரணங்கள் இருக்கின்றன. அவை பிறவிக் கோளாறு, நோயால் சுரக்காமல் போவது, பிறப்புறுப்பில் அடிபட்டு பாதிக்கப்படுவது. புட்டாளம்மை நோயால் தாக்கப்பட்டவர்களுக்கும் சுரக்காமல் போக வாய்ப்பிருக்கிறது. விந்து சுரக்க், நம் உடலில் மூன்று உறுப்புகள் செயல்படுகின்றன, 'விதைப்பை (Testis), 'புராஸ்டேட் சுரப்பி' (Prostate Gland), 'செமினல் வெசிகிள்' (Seminal Vesicle). இவை மூன்றும் சரியாகச் செயல்பட்டால் விந்து சுரந்து கொண்டேயிருக்கும். ஆனால், உடலால் குறிப்பிட்ட அளவு விந்தணுக்களை மட்டுமே சேமிக்க முடியும். அந்த அளவைத் தாண்டினால், அது தானாகவே வெளியேறத்தான் செய்யும். பெரும்பாலானவர்கள் செக்ஸில் ஈடுபட்டோ, சுயஇன்பம் செய்தோ விந்தை வெளியேற்றிவிடுகிறார்கள். இல்லையென்றால் தூக்கத்தில் விந்து தானாக வெளியேறிவிடும். இது பிரச்னையோ, நோயோ அல்ல. இயல்பான ஒன்று.

இப்போது ஆண்கள் பருவமடைந்தவுடன் திருமணம் செய்துகொள்வதில்லை. பள்ளி, கல்லூரிப் படிப்பு முடிந்து, வேலைக்குப் போய், வருமானம் ஈட்டத் தொடங்கிய பின்னரே திருமணம் செய்துகொள்கிறார்கள். இப்போதிருக்கும் சமூகச் சூழலில் 25 வயதிலிருந்து 30 வயதுக்குள்தான் ஆண்கள் திருமணம் செய்துகொள்கிறார்கள். அதற்காக விந்து சுரக்காமல் இருக்குமா? அது, அதன் கடமையைச் செய்துகொண்டுதான் இருக்கும். பாக்கெட்டில் பணம் இல்லையென்று, நமக்குப் பசி எடுக்காமல் இருக்குமா?


விந்து சுரப்பது இனப்பெருக்கத்துக்கு மட்டும்தான். உடல் ஆரோக்கியமாக இருந்து, விந்து சரியாகச் சுரந்து கொண்டே இருந்தால், குழந்தை பெற்றுக்கொள்வதில் எந்தப் பிரச்னையும் ஏற்படாது. விந்து வெளியேறினால் உடல் ஆரோக்கியம் இழக்கும்; உடலில் சத்து குறைந்துவிடும்; உடல் எடை குறைந்துவிடும் என்று சொல்வதெல்லாம் பொய்யான தகவல்கள். இவற்றுக்கும் விந்து வெளியேறுவதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. மூடநம்பிக்கை, அறியாமையால், போலி மருத்துவர்களின் விளம்பரங்கள், அவர்கள் சொல்லும் தவறான தகவல்களால் இளைஞர்கள் பயந்துவிடுகிறார்கள். தூக்கத்தில் விந்து வெளியேறுவதை ஆங்கிலத்தில் 'வெட்ட்ரீம் நைட் ஃபால்' (Wet Dream Night Fall) என்று சொல்வார்கள். இது எல்லா ஆண்களுக்கும் நிகழும் ஒன்றுதான். யாரும் பயப்பட வேண்டாம்!

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)

---

13-ம் பக்க தொடர்ச்சி...

வாழ்கிறார்கள். மற்ற கிரவேஷியப் பகுதிகளைப் போலவே இங்கும் நகரங்களையும் அதைச் சுற்றியுமுள்ள பகுதிகளிலேயே மக்கள் செறிவாக வாழ்கிறார்கள். கிராமங்கள் மெதுவாக தமது குடிமக்களை இழந்து வருகின்றன. முதலில் குறிப்பிட்டவை தவிர ஸடார், ஸிபர்னிக் ஆகியவையும் இப் பிராந்தியத்தின் மேலும் இரண்டு முக்கிய நகரங்கள்.



கி.மு 1000 ஆண்டளவில் பால்கன் பிரதேசத்தில் குடியேறிய இந்தோ ஐரோப்பியர்களான இல்லீரியன் இனத்தவரே இப் பிராந்தியத்தின் ஆரம்பத்தில் குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறது. கி.பி நான்காம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் இப் பிரதேசத்தில் குடியேற ஆரம்பித்தார்கள். இல்லீரியர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ரோமர்களின் உதவியை கிரேக்கர்கள் நாடினார்கள்.

விளைவாக ரோமர்களுக்கும் இல்லீரியர்களுக்கும் இடையே போர்கள் ஆரம்பமாகின. அப் போர்களில் ரோமர்கள் வென்று தங்கள் ஆட்சியை ஸ்தாபித்தார்கள். தொடர்ந்த காலத்தில் இப் பிராந்தியம் பைசாந்தியர், கிரேக்கர், மக்யார்கள், கிரவேஷியர்கள், தத்தார்கள், செர்பர், நோர்மன், வெனிசியர்கள், ஆஸ்திரியர்கள் என்று பல இனத்தவர்களின் கைகளில் மாறியது. ஆஸ்திரியர்களின் கையிலிருந்து ஒரு தடவை நெப்போலியனும் டால்மாசியாவை ஆண்டிருக்கிறான்.

முதலாம் உலகப் போரின்போது டால்மாசியாவை இத்தாலிக்குக் கொடுப்பதாக மேற்கு நாடுகளின் அணி ஒப்பந்தம் செய்து இத்தாலியின் உதவியைப் போரில் பெற்றது. ஆனால், போரின் முடிவில் இத்தாலியும் யூகோஸ்லாவியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி டால்மாசியாவின் பெரும் பகுதி யூகோஸ்லாவியாவைச் சேரஸடார் பிரதேசம் இத்தாலியின் உரிமையாகியது. இரண்டாம் உலகப்போரின் போது மீண்டும் இப்பிராந்தியம் பிரச்சினைகளுக்குள் இழுக்கப்பட்டுப் போர் முடிந்தபோது முழுவதுமாகவே யூகோஸ்லாவின் பகுதியாக மாறியது.

இப் பிராந்தியத்தில் சுற்றுலாத் தொழில் தவிர விவசாயம் மிக முக்கியமாக விளங்குகிறது. தானியங்கள் விளைவிக்க இப் பிரதேச மண் ஒத்து வராததால் மரக்கறிகளும், திராட்சையும் முக்கியமாக விளைவிக்கப்படுகின்றன. சர்வதேசரீதியில் மிகவும் பிரபலமடையா விட்டாலும் இப்பிராந்தியத்தின் திராட்சை ரசம் உண்டாக்குவது ஒரு முக்கிய தொழிலாக இருக்கிறது. அதைத்தவிர கடற்கரைப் பிராந்தியங்களிலுள்ள கற்களில் இருக்கும் கனிவளங்களில் இருந்து இரசாயனத் தயாரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

டுப்ரோவ்னிக் நகரை பேருந்து அடையும்போது மாலை சுமார் நாலரை மணி ஆகிவிட்டிருந்தது. அதிகாலையிலிருந்து பிரயாணம் செய்தும் பிரயாணக் களைப்பை நாங்கள் உணரவில்லை. அதன் காரணம் பயணமாகி வந்த வழியெங்கும் ரசிக்க முடிந்த இயற்கை அழகுதான் என்றால் அது மிகையில்லை.

பேருந்திலிருந்து இறங்கி எங்களது பிரயாணப் பெட்டிகளைப் பெற்றுக் கொண்ட பின் எங்கள் அடுத்த தேடுதல் எங்கே இருக்கிறது நாங்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்திருந்த விடுதி என்பதாகும். [தொடரும்]





எஸ்.நிதர்ஷன்

மல்லாகம் சகாதய மாதா தேவாலயத்திற்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தைச் சேர்ந்த பாக்கியராசா சுதர்ஷன் என்ற இளைஞர் உயிரிழந்தமை குடுநாட்டில் மட்டுமல்ல நாடு முழுவதும் பதற்றத்தையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியிருந்தது. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஒரு புறம் முன்னெடுக்கப்பட்டு வருகயையால் சம்பவம் குறித்தான பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்திருக்கின்றமையும் தவிர்க்க முடியாததாக அமைகின்றது.

மல்லாகம் தேவாலயத்தில் அன்றைய தினம் மாலை 5. மணிமுதல் பூசை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன்போது அங்கு நின்றிருந்த இளைஞர்களை தாக்குவதற்கு ஏழாலையைச் சேர்ந்த குழுவொன்று அவ்விடத்திற்கு வந்துள்ளது. இதனையடுத்து இரு தரப்பினர்களுக்கிடையேயும் மோதல் ஏற்பட்டது. இதன்போது அந்த வீதி வழியாக வந்து கொண்டிருந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்ற பொலிஸார் மோதலைக் கட்டுப்படுத்த முயன்றனர்.

அப்போது பொலிஸாரைத் தாக்க முற்பட்டதால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதிலேயே சுதர்சன் என்பவர் கொலை செய்யப் பட்டிருப்பதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயினும் அந்த பகுதி இளைஞர்களும் மக்களும் அடியோடு நிராகரிப்பதுடன் பொலிஸார் சம்பவத்தைத் திசை திருப்புவதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.


உயிரிழந்த இளைஞன்

இவ்வாறானதொரு குழப்பகரமான நிலைமையிலேயே சம்பவம் குறித்து ஆராய வேண்டிய தேவையும் எழுந்து நிற்கின்றது. ஏனெனில் சம்பவத்துடன் தொடர்புபட்ட மல்லாகம் இளைஞர்களும் அங்கு நின்றிருந்த மக்களும் ஒரு கருத்தைக் கூற் பொலிஸார் இதற்கு நேர்எதிரான கருத்துக்களை முன்வைக்கின்றனர். அதேபோன்றே சம்வத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏழலையிலிருந்து வந்த குழுவின் உறுப்பினரொருவர் இவற்றுக்கு மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

## சம்பவத்தின் பின்னணி

மல்லாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஏழாலைக்குச் சென்ற பொது ஏழாலைசை சேர்ந்த குழுவினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அத் தாக்குதலுக்குப் பதில்த் தாக்குதலை நடத்தும் வகையில் ஏழாலையைச் சேர்ந்த இளைஞரொருவரை மல்லாகம் இளைஞர்களும் தாக்கியுள்ளனர். இந்தப் பின்புலத்திலேயே கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற திருவிழாவின் போது மோதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த அன்றையதினம் மல்லாகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆலயத்திற்குள்ளும் ஆலயத்தின் முன் பக்கத்திலும் நின்றுள்ளனர். இதன் போது அங்கு வந்த ஏழாலையைச் சேர்ந்த குழுவினர் அங்கு ஆலயத்திற்கு வெளியில் நின்றிருந்த இளைஞர்களைத் தாக்க முற்பட்டுள்ளனர். இதனால் இரு தரப்பினர்களுக்கிடையேயும் மோதல் ஏற்பட்டது.

## துப்பாக்கி சூட்டு சம்பவம்

இதன்போது அந்த வீதியால் வந்த பொலிஸார் மோதலைக் கட்டுப்படுத்த முயன்றுள்ளார். இதன் போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுதர்சன் என்ற இளைஞர் காயமடைந்தார். இதனையடுத்து அங்கு ஒன்று திரண்ட இளைஞர்களும் பொது மக்களுமாக இணைந்து காயமடைந்தவரை தெல்லிப்பழை ஆதார வைத்திசாலைக்கு கொண்டு சென்றனர். இதன் பின்னர் சம்பவ இடத்தில் மேலும் ஒருவர் அடி காயங்களுடன் காணப்பட்ட போது அவரையும் அங்கு நின்றிருந்த இளைஞர்களும் பொதுமக்களுமாக இணைந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆயினும் அங்கு அடி காயங்களுடன் காணப்பட்ட இளைஞர் என்பவர் ஏழாலையிலிருந்து தங்களைத் தாக்குதல் நடத்த வந்தவர் என்றும் அவரையும் தாங்களே காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்த்ததாக அங்கு நின்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மக்கள் கொந்தளிப்பு

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் உயிரிழந்ததனையடுத்து அப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு பெரும் பதற்றமும் ஏற்பட்டிருந்தது. அங்கு வீதியில் ஒன்று திரண்ட மக்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனையடுத்து விசேட அதிரடிப்படையினர் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு அங்கு பதற்றமானதொரு சூழல் ஏற்பட்டிருந்தது. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்தும் சில மணி நேரம் தடைப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன் வந்திருந்தார். அங்கு நின்றிருந்தவர்களுடன் கலந்துரையாடிய நீதிபதி, வீதியில் இருந்தவர்களை வீதியை விட்டு எழும்புமாறும் அந்த வீதித் தடைகளை அகற்றுமாறு கூறியதையடுத்து, வீதித் தடைகளையும் மக்கள் அகற்றியிருந்தனர். இதன் பின்னர் தெல்லிப் பழை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட நீதிபதி அதன் பின்னர் மீளவும் வந்து மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது சம்பவ இடத்தில் இரண்டு தரப்பினர்களுக்கிடையே மோதல் இடம்பெற்றதாகவும் அதனைத் தடுக்க முற்பட்ட பொலிஸாரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் நீதிபதி மக்களிடத்தில் சம்பவத்தை விபரித்தார். அவ்வாறு இரு தரப்பு மோதல் இடம்பெறவில்லை என்றும், அங்கு வந்த குழுவினரே தாக்குதல் நடத்தியதாகவும், அவ்வாறான மோதலைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்துவதா என்றும் அங்கு நின்றிருந்தவர்கள் "கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதேவேளை, நீதிபதி பல்வேறு தரப்பினருடனும் அந்த இடத்தில் பேசி தகவல்களை திரட்டியிருந்தார். மக்கள் குறிப்பிட்ட சம்பவங்களில் சில தகவல்கள் தவறாக பொலிசார் மீது தவறான குற்றம்சுமத்தப்படுவதாக அமைந்ததை அந்த இடத்திலேயே நீதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்போது சட்டம் தன் கடமையைச் செய்யுமென்றும் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதாகவும் நீதிபதி குறிப்பிட்டிருந்தார். இதேவேளை மல்லாகம் நீதிபதியாக இருந்த நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த இட மாற்றத்திற்கமைய அன்றைய தினத்துடன் ஊர்காவற்துறை நீதிமன்றுக்கு மாற்றலாகிச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரின் விளக்கம்

ஏழாலையில் நீரில் மூழ்கி உயிரிழந்த சடலம் ஒன்றின் பிரதேச பரிசோதனை விசாரணைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு முச்சக்கர வண்டியில் திரும்பிக்கொண்டிருந்தோம். இதன் போது மேற்குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் ஒன்றில் பயணித்த ஒருவரை சிலர் கூரிய ஆயுதங்களுடன் தாக்கிக்கொண்டிருந்தனர்.

இதனை நாம் தடுக்க முற்பட்ட போது அக் குழுவினர் எம்மீது தாக்க வந்திருந்தனர். அவர்கள் தமது கைகளில் இரும்பு கம்பிகள் பைகளை வைத்திருந்தனர். இந்நிலையில் எம்மை தாக்க வந்திருந்த நிலையிலேயே அவர்கள் மீது எமது தற்பாதுகாப்பிற்காக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்தோம் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸாரது விளக்கத்தை நிராகரிக்கும் மக்கள்

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் -பொய்யான தகவலொன்றை பரப்பி வருவதாக கொல்லப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக நேரடியாக சம்மந்தப்பட்டிருந்த கொல்லப்படவரது மருமகன் முறையான நபர் தெரிவிக்கையில்,

நான் தேவாலயத்தின் வெளியில் இருந்து ஆராதனைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். இதன் போது சில மோட்டார் சைக்கிளில் ஓர் குழுவினர் வந்திருந்தனர். அச் சமயம் நான் என்ன நடக்கின்றது என பார்த்த போது அவர்கள் என்மீது தாக்குதல் நடாத்த ஆரம்பித்தனர். இதன் போது நான், ஏன் என் மீது தாக்குதல் நடத்துகின்றீர்கள் என கேட்ட போதும்

தொடர்ச்சி 26-ம் பக்கம்...


# உலக யன்னல்

தேசமித்ரன்

சில மாதங்களாகவே செய்திகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த டிரம்ப் கிம் உன் யொங் சந்திப்பு ஒரு வழியாக நடந்து முடிந்து விட்டது. ஆனாலும் அரசியல் திரைக்குப் பின்னால் அமெரிக்க அதிபர் பல நாடுகள் மீது ஆரம்பித்திருக்கும் வர்த்தகப் போரின் நடவடிக்கைகள் பல தலைவர்களையும் கலங்க வைத்திருக்கிறது. அதைப் பற்றிக் குறிப்பிட முன்பு...

உலகத்தின் கவனம் மட்டுமன்றி, மில்லியன் கணக்கான சிறு ஜந்துக்களின் கவனமும் ரஷ்யாவில் நடக்கும் கால்பந்து உலகக்கோப்பைக்கான போட்டிகளின் மீது நிலைத்திருக்கிறது.

முதல் தடவையாக ஐரோப்பிய கால்பந்தாட்டப் பந்தயங்களில் 2016 இல் கலந்து கொண்டு பிரபல கால்பந்தாட்ட நாடுகளின் ஒன்றான போர்த்துக்கலுடன் சரிக்குச்சமனாக நின்று இங்கிலாந்தைத் தோற்கடித்து, கால் இறுதிப்போட்டிகள் வரை வந்த ஐஸ்லாந்துஇம்முறைமுதல்தடவையாக உலகக்கோப்பை போட்டியில் கலந்து கொள்கிறது. சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ஐஸ்லாந்து தனது




முதலாவது போட்டியில் கால்பந்து விற்பன்னர்களான ஆர்ஜென்ரீனாவை கலங்கடிக்கவைத்து எல்லோர் கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. முதல் தடவையாக உலகக்கோப்பைப் போட்டிகளில்பங்குபற்றும்இன்னொரு நாடான பனாமா, பலமான பெல்ஜிய அணியிடம் தோற்றுப் போனாலும் பலரின் பாராட்டுக்களைப் பெற்றது.

ரஷ்யாவின் வொல்கோகிராட் அரங்கத்தில் இங்கிலாந்து துனீசிய கால்பந்தாட்டத்தில் மோதிய போது பெரும்பாலானோரின் கவனத்தைக் கவர்ந்தது அணிகளின் வீரர்களை ஒரு இடத்தில் நிற்கவிடாமல் விரட்டிய கொசுக்கள் என்றால் அது மிகையல்ல. பல தடவைகளும் கமராவில் அணிதிரண்டு விளையாடும் வீரர்களை அக் கொசுக்கள் தாக்குவதைக் காண முடிந்தது. ரஷ்யாவின் பலபகுதிகளிலும் நிலவும் மோசமான வரட்சியால் chironomidae என்ற குடும்பத்தைச் சேர்ந்த இக் கொசுக்கள் மில்லியன் கணக்கில் ஈரலிப்பான அந்த விளையாட்டு மைதானங்களை நோக்கிப் படையெடுத்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. குறிப்பிட்ட இவ்வகைக் கொசுக்களில் சுமார் 20 000 வகையானவை உலகம் முழுவதிலும் இருக்கின்றன என்கிறார்கள் உயிரியல் விற்பன்னர்கள். இவ்வகையான கொசுக்கள் நுளம்புகள் போன்றிருந்தாலும் உயிரினங்களை மொய்ப்பனவே அன்றிக்கடித்துஇரத்தம்குடிப்பதில்லை என்கிறார்கள் அவர்கள்.

---

இத்தாலியில் ஒரு புதிய, ஆனால் மிக வித்தியாசமான அரசாங்கம் பதவிக்கு வந்திருக்கிறது என்பதை நாட்டின் வலதுசாரி இனவாதக் கட்சியின் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர். பதவியேற்ற உடனேயே நிரூபித்துக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்.

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த சுமார் 630 அகதிகளுடன் இத்தாலியை நோக்கி வந்த "அக்குவாரியஸ்" என்ற கப்பலை இத்தாலியத் துறைமுகத்துக்குள் வர அனுமதி கொடுக்க மறுத்திருக்கிறார் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் மத்தியோ சல்வீனி.

மத்தியதரைக் கடல் பிராந்தியத்துக்குள் நுழைந்த அக் கப்பல் முதலில் மால்டாவின் எல்லைக்குள் வந்திருந்ததால் ஐரோப்பிய ஒன்றியச் சட்டப்படி அவர்கள் மால்டாவுக்குத்தான் போக வேண்டும் என்கிறார் உப பிரதமருமான சல்வீனி. "சட்டபூர்வமில்லாமல் இத்தாலிக்குள் நுழைபவர்களின் பொற்காலம் கடந்து விட்டது" என்று சொல்லும் அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறார்கள், ஏழு கர்ப்பிணிப் பெண்கள் உட்பட்ட "அக்குவாரியஸ்" கப்பலை இத்தாலிக்குள் நுழையவிட மறுத்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சவால் விட்டிருக்கிறார்.

சுமார் ஒரு வாரங்களாக அரசியல் இழுபறிகள் நடந்தபின் கப்பலைத் தங்களது துறைமுகத்துக்குள் நுழைய அனுமதித்து அகதிகளுக்கு ஆரம்ப உதவிகளைச் செய்ய ஸ்பெயின் முன்வந்திருக்கிறது.



---



2016 இல் தனது தந்தைஇறந்த பின்பு தாய்லாந்தின் அரச பீடத்துக்கு வந்த மஹாவஜிர லோங்கூன் அரச குடும்பத்தினரின் சொத்துக்களையெல்லாம் தனது பெயருக்கு மாற்றிக்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் அரச குடும்பத்தினர் உலகின் மிகப் பெறுமதியான சொத்துக்களுக்குச் சொந்தக்காரர்களில் முக்கியமானவர்கள். தாய்லாந்தின் சட்டங்களின்படி அரச குடும்பத்தினர் பற்றி விமர்சிப்பது சுமார் 15 வருடங்கள் வரை சிறைக்கு அனுப்பக் கூடிய குற்றம். அரச குடும்பச் சொத்துக்களின் பெறுமதியைப் பகிரங்கப்படுத்துவதும் சட்டவிரோதமானதே. சர்வதேசப் பொருளாதார நிறுவனங்களின் கணிப்பீட்டின்படி 30 60 பில்லியன் டொலர்கள் வரை இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

தனது தந்தை காலத்தில் குறிப்பிட்ட நிறுவனமொன்றால் கையாளப்பட்ட சொத்துக்களையெல்லாம் தனது பெயருக்கு மாற்றிக் கொண்டிருக்கும் அரசன் வித்தியாசமாக இனிமேல் அதன் வருமானங்களுக்கு நாட்டின் மற்றைய நிறுவனங்களைப் போலவேவரி கட்டப் போகிறார்.

---

யேமனில் ஈரானிய ஆதரவுடன் போரிட்டு வரும் ஹூத்தி இயக்கத்தினரை வீழ்த்தப் போரிடும் சவூதிஅரேபியாஎமிரேட்ஸ் படைகள் யேமனின் முக்கிய துறைமுக நகரான ஹுடைதாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

செங்கடலையும் ஏடன் குடாவையும் இணைக்கும் நீர்ப்பரப்பில் ஆதிக்கம் பெறுவதற்கு ஹுடைதா துறைமுகத்தைக் கைப்பற்றுவது அவசியம். அதன் மூலம்தான் யேமனுக்கான பெரும்பாலான அவசியத் தேவைகளுக்கான பொருட்கள் கையாளப்படுகின்றன. மத்தியதரைக் கடல், அராபியக் கடல் மூலமாகப் பயணமாகும் கப்பல்களின் மீது ஹுடைதா துறைமுகத்தில் இருந்து கண்காணிப்புச் செலுத்தலாம் என்பதே சவூதி அரேபியாவின் திட்டம்.


ஏற்கனவே போர்களால் உலகில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களாகக் குறிப்பிடப்படும் யேமன் மக்களின் நிலைமை இதனால் மேலும் மோசமடையும் என்று ஐ.நா எச்சரித்தாலும் அதை சவூதி அரேபிய எமிரேட்ஸ் அரசுகள் கண்டுகொள்ளாமலே இத் தாக்குதலில் முன்னேறி ஹூடைதாவின் விமான நிலையத்தையும் கைப்பற்றியிருக்கின்றன.



தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சமீபத்தில் தேர்தலை நடாத்தி இன்னும் அரசாங்கம் ஒன்று அமைக்கும்விடயத்தில்வெற்றியடையாத நாடான ஈராக்கில் நடந்த தேர்தலில் ஊழல்கள் நடாத்தப்படுவதாக சந்தேகம் உண்டாகியிருக்கிறது. அதனால், வாக்குகள் அனைத்தையும் மீண்டும் இயந்திரங்களின் உதவியின்றி எண்ண முடிவு செய்யப்பட்டது. அதையடுத்து பாராளுமன்றத்தின் வளாகத்துக்குள் வாக்குப் பெட்டிகள் பாதுகாக்கப்பட்டு வரும் அறைகள் யாராலோ தீவைக்கப்பட்டன. தக்க சமயத்தில் தீ அணைக்கப்பட்டு வாக்குகளுக்கு எச் சேதமும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.





ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், கனடா, மெக்ஸிகோ ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா நீண்ட காலமாகக் கொண்டிருந்த வரியற்ற வர்த்தக ஒப்பந்தங்களை டிரம்ப் முறித்துக் கொண்ட அதே சமயத்தில் சீனாவின் மீது போடப்போவதாக அறிவித்திருந்த இறக்குமதி வரிகளை ஒத்திப் போட்டிருந்தார். ஆனால், சீனாவுடன் நடாத்தப்பட்ட வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுக்காமல் இருக்கவே, மீண்டும் சில நாட்களுக்கு முன்பு சீனாவின் மீது மேலும் அதிக இறக்குமதி வரிகளை அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

உலக நாடுகளிடையே வர்த்தகம் தாராளமாக வரிகளின்றி நடப்பதைச் சீனா ஆதரிக்கிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக நிலவும் தாராளமயப் பொருளாதார ஒப்பந்தங்களை பாவித்துச் சீனா தனது வெளிநாட்டு வர்த்தகத்தைப் பல மடங்குகளால் பெருக்கியிருக்கிறது.

அதற்கான தயாரிப்புக்கள் பலவற்றில் அரசு முதலீடு செய்திருக்கிறது. ஏற்றுமதிகள் ஒரேயடியாக பாதிக்கப்படுமானால் ஏற்கனவே பலவீனமடைந்து கொண்டிருக்கும் சீனாவின் பொருளாதாரம் பலமான அடியை வாங்கும் என்று சீனாவுக்கும் தெரியும், அமெரிக்காவுக்கும் புரியும். அதனால், அனேகமாக அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிணங்கள் சீனா தனது சந்தையை அமெரிக்க தொழில்நுட்பப் பொருட்கள் இறக்குமதிக்காகத் திறந்துவிடும் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே ஈரானுடன் அமெரிக்கா முறித்திருக்கும் அணு ஆயுத ஆராய்வு ஒப்பந்தத்தை நீடிப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அமெரிக்காவின் மீது பதில் இறக்குமதி வரிகளைப் போடுமானால், அதேசமயம் சீனாவும் அமெரிக்காவுக்கு இறக்குமதி வரிகளால் பதிலடி கொடுக்குமானால் உலகரீதியில் மோசமான விளைவுகளை விளைவிக்கும் ஒரு வர்த்தகப்போர் ஆரம்பிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

## உலக யன்னல்

ஆஸ்திரியா தனது நாட்டுக்குள் இஸ்லாமிய அரசியல்போதித்து முஸ்லீம்களைத் தீவிரவாதத்துக்குத் தூண்டுபவர்கள் என்று கருதும் முல்லாக்கள் மீதும், அவர்களுக்குத் துணைபோகும் பள்ளிவாசல்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது.

சுமார் 60 இஸ்லாமியப் போதகர்களும் [இமாம்] அவர்களுடைய குடும்பங்களையும் நாட்டை விட்டு வெளியேறச் சொல்லப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஆறு பள்ளிவாசல்களை இயக்கும் ஒரு இஸ்லாமிய அமைப்பும் சட்டவிரோதமாக்கப்பட்டிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகளின் பின்னணியில் இருப்பது துருக்கிய அரசு என்று குறிப்பிடப்படுகிறது. அவர்களுக்கான நிதி உதவியைச்செய்யும்துருக்கிஇதனால் கோபமடைந்து ஆஸ்திரியாவைக் கண்டிக்கிறது. சில இஸ்லாமிய அமைப்புக்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன.




ஆனி 24 ம் திகதியன்று தேர்தல் நடக்கவிருக்கும் துருக்கியின் ஜனாதிபதி ஏற்கனவே கைப்பற்றியிருக்கும் அதிகாரங்களைவிட இன்னும் அதிக அதிகாரங்களைக் கைப்பற்றப் போட்டியிடுகிறார். நாட்டில் அவரை எதிர்த்து நிற்கும் கட்சிகளை ஒடுக்கும் அவர் தனக்கெதிராக வெளிநாடுகளில் இயங்கும் அமைப்புக்களின் அங்கத்தவர்களைக் கொலை செய்வதிலும் ஈடுபடுகிறார் என்று குறிப்பிடப்படுகிறது. சமீபத்தில் சுவீடனில் வசிக்கும் சிலரை துருக்கிய அதிபர் எர்டகான் டென்மார்க்கில் இயங்கும் சமூக விரோத அமைப்பின் உதவியுடன்கொல்லத்திட்டமிட்டதைடென்மார்க்கின் உளவு நிறுவனம் வெளிப்படுத்தியிருக்கிறது.





"மேடைல பேசிட்டிருக்கேன். நீ என்னய்யா போன் பேசிட்டிருக்க?"

"செருப்பு வீசறவன் உங்களை ஒரு இடத்துல நின்னு பேசச் சொல்றான்!"



"நான் லஞ்சம் வாங்கறதை விட்டு இன்னையோடு மூணு மாசம் ஆயிடுச்சு."

"திருந்திட்டீங்களா?"

"ரிட்டையர்ட் ஆயிட்டேன்!"

# புலிகள் தயாரித்த ஹைரெக் வெடிகுண்டு... கடைசிவரை வெடிக்கவேயில்லை!

பீஷ்மர்

**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன?**

விடுதலைப்புலிகளின் ஆரம்பகால தாக்குதல்களின் ஒன்றான உமையாள்புர கண்ணிவெடி தாக்குதல் தொடர்பாக கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். புலிகளின் திட்டத்திற்கு குறுக்காக ஆடு ஒன்று புகுந்து, தாக்குதல் தஜட்டத்தையே குழப்பியிருந்தது.

அது புலிகளின் ஆரம்ப நாட்கள். திட்டமிடாத தாக்குதலை எப்படி எதிர்கொள்வதென்பதில் போதிய அனுபவம் இருக்கவல்லை. ஆனாலும் அந்த சூழ்நிலையை சிறப்பாக கையாண்டார்கள். ஆனையிறவு பக்கமிருந்து வந்த இராணுவம், முல்லைத்தீவு பக்கமிருந்து வந்த இராணுவம் என இரண்டு முனைகளில் புலிகள் எதிர்தாக்குதல் நடத்த வேண்டியிருந்தது.

அப்பொழுது புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் வெகு சிலர்தான். பெரிய தாக்குதலில் ஈடுபட்ட அனுபவமற்றவர்கள். ஆனாலும்,திடீர் தாக்குதல் ஒன்றை, எந்த அனுபவமுமில்லாமல் எதிர்கொண்டார்கள். .

இந்த சண்டையில் புலிகளின் அணிகள் மூன்றாக பிரிந்து விட்டார்கள். கிட்டுவுடன் சிலர் ஒரு அணியாக பிரிந்தனர். அப்போதைய மன்னார் தளபதி ராஜேஷ், கணேஸ் உள்ளடங்களாக சிலர் இன்னொரு அணியாகவும்,சந்தோசம்,பஷீர் காக்கா, பொன்னம்மான் உள்ளிட்டவர்கள் இன்னொரு அணியாகவும் பிரிந்தனர்.

கிட்டு ஆட்கள் தட்டுவன்கொட்டியில் ஒரு காரை மடக்கி, அதில் ஏறி சென்று விட்டனர். பொன்னம்மான் ஆட்கள் கொம்படிக்குள்ளால் இயக்கச்சிக்கு போய்ச் சேர்ந்தார்கள். ராஜேஷ் ஆட்கள் மன்னார் போனார்கள். அப்பொழுது நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிடுவதாக கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

கணேஷ் திருகோணமலையை சேர்ந்தவர். அப்போது அமைப்பிற்கு ஆட்சேர்ப்பது மிகச்சிரமமான விசயம். ஆட்களை சேர்ப்பதும் சிரமம். ஆட்கள் போய் சேர்வதும் சிரமம்.

சரியானவர்களை கண்டுபிடித்து, அவர்களை கண்காணித்து, குறிப்பிட்ட காலத்தின் பின்னரே அமைப்பில் இணைக்கலாம். இப்படியான தொடர்பில் இருந்த இரண்டு பேருடைய பெயர் விபரங்கள் கணேசின் பொக்கற்றுக்குள் இருந்தது. அது எப்படியோ உமையாள்புரத்தில் தவறிவிழுந்து விட்டது.

அந்த கண்ணிவெடி தாக்குதலின் பின்னர் அந்த பகுதியில் சோதனை நடத்திய இராணுவம், கணேசின் பொக்கற்றுக்குள்ளிருந்து தவறிவிழுந்த காகித துண்டை எடுத்து விட்டனர்.

அதில் இருவரின் பெயர் விபரங்கள் எழுதப்பட்டிருந்தன. நவரட்ணராஜா, சிவானந்தராஜா என்பவர்களின் பெயர், முகவரி மற்றும் இதர விபரங்கள் அதில் இருந்தன. இருவரும் திருகோணமலையை சேர்ந்தவர்கள். நவரட்ணராஜா அப்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொழில்நுட்ப கல்லூரியில் கற்று வந்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து நவரட்ணராஜா கைதாகினார். குருநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அங்கு விசாரணையில்தாக்கப்பட்டதில்மரணமாகி விட்டார்.

மற்றவர் சினாந்தராஜா. அவர் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 1983 இல் வெலிக்கடையில் நடந்த படுகொலையில் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருடன் உயிரிழந்த 53 பேரில் சிவானந்தராஜாவும் ஒருவர்.

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட முதலிரண்டு கண்ணிவெடி தாக்குதல்களையும் பற்றி கடந்த வாரத்திலும், இந்த வாரத்திலும் விபரமாக குறிப்பிட்டுள்ளோம். எந்த முன் அனுபவமும் இல்லாத நிலையில், இரண்டு முயற்சிகளை செய்தார்கள். அது வெற்றியளிக்காத போதும், அவற்றை அனுபவமாக கொண்டு, திருநெல்வேலியில் கண்ணிவெடி தாக்குதல் நடத்தினார்கள். இந்த தாக்குதல்தான் புலிகள் மேற்கொண்ட முதலாவது பெரிய தாக்குதலாக இடம்பிடித்தது!

புலிகளின் ஆரம்ப நாட்கள் பற்றிய தகவல்களை இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ளதால், இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிடலாம் என நினைக்கிறோம்.

புலிகளின் ஆரம்பகாலகண்ணிவெடி தாக்குதல்களில் அப்பையா அண்ணையின் பங்களிப்பை பற்றி கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமாகி, இணைந்து செயற்பட்டார். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் தேவைகளிற்கான பாறைகளை வெடிமருந்து கொண்டு உடைப்பார்கள். இதில் ஈடுபட்டதால் அப்பையா அண்ணைக்கு வெடிமருந்தை பற்றி ஓரளவுக்கு அறிவுண்டு. வெடிமருந்தை எப்படி வெடிக்கும் நிலைக்கு தயார் செய்வது, அதன் மூலம் பாறைகளை உடைப்பது எப்படி என்பதை அவர் அறிந்திருந்தார்.


ஆனால் இது பொதுப்பயன்பாட்டு திட்டம். இராணுவ பயன்பாடு வேறுவிதமானது. குண்டுகளை தயாரிக்கும் விதமும் வித்தியாசமானது. ஆனால் வெடிமருந்தின் இயல்பு என்னவென்பதை ஓரளவுக்கு அப்பையா அண்ணை மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. வெடிமருந்தின் இயல்பை அறிந்துகொள்ளாமல் கையாள முயன்றால் ஆரம்பத்திலேயே பல உயிரிழப்புக்களை சந்தித்திருக்க வேண்டியதாகியிருக்கும்.

அப்பையா அண்ணையிடமிருந்த வெடிமருந்துகளை பற்றிய அறிமுகத்தை வைத்துக் கொண்டு புலிகள் கண்ணிவெடிகளை உருவாக்க தொடங்கினார்கள். அப்படி உருவாக்கப்பட்டதேபொன்னாலைதாக்குதலுக்கான கண்ணிவெடி. சிறிய பைப் ஒன்றிற்குள் வெடிமருந்தை அடைத்து, ஜெனரேட்டரை இயக்கி கண்ணிவெடியை வெடிக்கவைத்தார்கள். அந்த அனுபவத்தில் இருந்து இரண்டாவது தாக்குதலை உமையாள்புரத்தில் செய்தார்கள். ஆனால் அது பொறிவெடி வகையை சேர்ந்தது.

இதற்கடுத்ததாக திருநெல்வேலி கண்ணிவெடி தாக்குதல். இதற்கான கண்ணிவெடியையும் அப்பையா அண்ணை தலைமையிலேயே செய்யப்பட்டது. இம்முறை பற்றரியில் வெடிக்க வைத்தார்கள். புலிகளின் முதலாவது நவீன கண்ணிவெடியாக திருநெல்வேலியில் புதைத்த கண்ணிவெடியை குறிப்பிடலாம்.

அதன்பின்னர் ஈழப்போரில் எப்படியெல்லாம் வெடிமருந்து தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்தது என்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். கைத்தொலைபேசி ரிங் பண்ணும்போது வெடிக்கும் விதமான ஹைரெக் வெடிகுண்டுகளெல்லாம் ஈழப்போரில் பின்னாளில் இருந்தது. ஆரம்பத்தில் ஜெனரேட்டரை ஸ்ராட் செய்து வெடிக்க வைத்த குண்டில் ஆரம்பித்து, இறுதியில் காந்த குண்டு வரை தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தது. காந்த குண்டென்பது வாகனமோ, கப்பலோ அல்லது வேறு இலக்கொன்றிலோ இரகசியமாக ஒட்டி விடுவது. பின்னர் விரும்பிய சமயத்தில் வெடிக்க வைத்துக் கொள்ளலாம்.

இந்த காந்த குண்டுக்கு ஒரு உதாரணம் சொல்லலாம். ஈழப்போர் முறையை தொடர்ச்சியாக கவனித்து வருபவர்களிற்கு நாம் குறிப்பிடவிருக்கும் சம்பவம் தெரிந்திருக்கும். அது ஓரளவு பகிரங்கமான சம்பவம்தான்.





போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினருடன் சூசை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

இரண்டாயிரத்தின் மத்தியில் காலி கடற்படை தளத்தின் மீது தாக்குதல் நடத்த சென்ற விடுதலைப்புலிகளின் கடற்கரும்புலிகள் சிலர் உயிரோடு கைது செய்யப்பட்டிருந்தனர். கடற்கொந்தளிப்பு காரணமாக அவர்கள் தமது இலக்கை எட்ட முடியாமல் போனதாகவும், கடற் கொந்தளிப்பில் சிக்கி கரையொதுங்கியவர்களை பற்றி பிரதேச மக்கள் தகவல் கொடுக்க, அவர்களை பாதுகாப்பு தரப்பினர் சுற்றிவளைத்து கைது செய்தனர்.

அந்த காலப்பகுதியில் பரபரப்பாக அடிபட்ட செய்தியிது. ஆனால் இதில் வெளியில் வராத சங்கதிகள் நிறைய உண்டு. அதில் முக்கியமானது, தாக்குதலிற்கு போனவர்கள் வைத்திருந்தது காந்த குண்டு என்பது!

காலி துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல்களே புலிகளின் இலக்கு. இப்படியான தாக்குதல்களிற்கு புலிகள் தமது கரும்புலி அணிகளையே பயன்படுத்துவார்கள். இராணுவத்தின் கோட்டைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திவிட்டு திரும்பி வருவதென்பது சாத்தியமில்லாத விசயம். திரும்பி வரமாட்டேன் என்பதை உறுதியாக தெரிந்தவர்கள், அதற்கு தயாராக இருப்பவர்கள்தான் இப்படியான தாக்குதல்களிற்கு செல்லலாம்.

ஆனால் அந்த தாக்குதலிற்கு சென்றவர்கள் கரும்புலிகள் கிடையாது. இந்த இடத்தில்தான் புலிகளின் கடற்புலிகள் சறுக்கினார்கள்.

அந்த தாக்குதலிற்கு தலைமை தாங்கி சென்றவர் கடற்புலிகளின் தளபதி சூசைக்கு நம்பிக்கையான, நெருக்கமானவர். அவர் அவ்வளவாக தாக்குதல்களில் சிறப்பாக செயல்பட்டவரும் கிடையாது. ஆனால், குருவியின் தலையில் பனங்காயை வைத்ததை போல, இந்த தாக்குதல் பொறுப்பை சூசை வழங்கினார்.

அது கரும்புலி தாக்குதல் அல்ல. கடலிற்கு அடியால் சென்று கப்பல்களில் காந்த வெடிகுண்டை ஒட்டி விட்டு வருவதுதான் வேலை. வெடிகுண்டில் உள்ள காந்தம், கப்பலின் இரும்பில் பலமாக ஒட்டிக்கொள்ளும். நேரத்தை கணித்து வைத்து விட்டால் சரி. அது கச்சிதமாக தனது வேலையை செய்யும்.


அவர்களிற்கு சூசை வழங்கிய முக்கிய அறிவுறுத்தல்களில் ஒன்று இயன்றவரை பாதுகாப்பாக திரும்பி வருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்பது. ஏனெனில், கடலிற்கு அடியால், கடற்படைக்கு தெரியாமல் வெடிகுண்டை ஒட்டி விடுவது மட்டும்தான் அவர்களின் வேலை.

தாக்குலிற்கு குறிக்கப்பட்ட தினத்தில் இவர்கள் நீர்கொழும்பிற்கு அருகில் இருந்த இடமொன்றிலிருந்து நீந்த தொடங்கியிருக்கிறார்கள். அன்றைய தினம் வழக்கத்தை விட கடல் அதிக கொந்தளிப்பாக இருந்துள்ளது. அவர்களால் நினைத்த மாதிரி நீந்த முடியவில்லை. கடற்கொந்தளிப்பிற்குள்ளால் நீந்திப்போய் குண்டை பொருத்தி, திரும்பி வருவது சாத்தியமில்லாத விசயம் என்று கருதியதால், பாதி வழியிலேயே திரும்பி வரலாமெனமுடிவெடுத்தார்கள். அவர்கள் திரும்பி வந்து கரையேறியது காலை நேரத்தில். தாக்குதல் திட்டம் சரியாக இருந்திருக்குமெனில் இரவுதான் கரையேறியிருப்பார்கள். பகலில் சந்தேகத்திற்கிடமானவர்கள் கரையேறியது, அங்கிருந்தவர்களிற்கு சந்தேகத்தை ஏற்படுத்த பொலிசாருக்கு அறிவித்தனர். அத்தனை பேரும் கூண்டோடு வளைத்து பிடிக்கப்பட்டனர்.

புலிகளின் குண்டு தயாரிப்பாளர்கள் தயாரித்த ஹை டெக் குண்டு இது. புலிகள் தற்கொலை படையணியை வைத்திருக்கிறார்கள், அதை கலைக்க வேண்டும் என வெளிநாடுகளும், சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புக்களும் அழுத்தம் கொடுத்து வந்தன. உண்மையில் புலிகளிற்குஇது சீரியசான பிரச்சனையாகவும் இருந்தது. கரும்புலி தாக்குதலை தவிர்த்து, அதேவேளை, கரும்புலிகளிற்கு நிகரான வேறொரு தாக்குதல் முறையை புலிகள் கண்டுபிடிக்க விரும்பினார்கள்.

இந்த சமயத்திலேயே காந்த குண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. காந்த குண்டு வெற்றிகரமாக பாவிக்கப்பட்டால், கடற் கரும்புலிகளின் தேவை வெகுவாக குறையுமென புலிகள் எதிர்பார்த்தார்கள். கரும்புலிகளை குறைத்தால், தம் மீதான விமர்சனங்கள் குறையும் என எதிர்பார்த்தனர். ஆனால் இந்த விசயத்தில் புலிகள் எதிர்ப்பார்த்தது நடக்கவில்லை.

**சூசை வழங்கிய முக்கிய அறிவுறுத்தல்களில் ஒன்று இயன்றவரை பாதுகாப்பாக திரும்பி வருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்பது. ஏனெனில், கடலிற்கு அடியால், கடற்படைக்கு தெரியாமல் வெடிகுண்டை ஒட்டி விடுவது மட்டும்தான் அவர்களின் வேலை.**



ஹை ரெக் ஆன வெடிமருந்தை தயாரித்தும், பின்னர் அதை புலிகளால் பயன்படுத்தவே முடியவில்லை!

கொழும்பில் புலிகளின் நெட்வேர்க் முடக்கப்பட்டு, கடற்கரையோரங்களும் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, வலிந்த தாக்குதலிற்கான திட்டங்களிற்கு அவகாசமோ வாய்ப்போ இராணுவத்தால் வழங்கப்படாததையடுத்து புலிகளால் தமது ஹைரெக் வெடிகுண்டுகளை பரீட்சித்து பார்க்கவே முடியாமல் போய்விட்டது.

இப்பொழுது மீண்டும் அப்பையா அண்ணையின் விசயத்திற்கு வருகிறோம். திருநெல்வேலி கண்ணிவெடி தாக்குதல் வெற்றியாக முடிந்தது புலிகளிற்கு பெரிய உற்சாகத்தை கொடுத்தது.

அதன்பின்னர் அப்பையா அண்ணையின் மூலமும், இந்தியாவில் இராணுவ பயிற்சியின் பின் பெற்ற வெடிமருந்து அனுபவத்தின் மூலம் மற்றவர்களும் புதியபுதிய பரீட்சார்த்த முயற்சியில் இறங்கினார்கள்.

புலிகள் அப்பொழுதே சிறியரக மோட்டார்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். பெரிய வெற்றியளிக்கவில்லையென்றாலும், அது முக்கியமான முயற்சி.

ஈழப்போரில் பல ஆயுதங்களை புலிகள்தான் அறிமுகப்படுத்தினார்கள். புலிகளின் சர்வதேச தொடர்புகள் மூலம் எப்படியோ, ஏதாவதொரு நவீனமான ஆயுதத்தை ஒவ்வொரு காலத்திலும் இறக்கிவிடுவார்கள். அந்த சமயத்தில் அது ஈழப்போரிற்கு புதிய ஆயுதமாக மட்டுமிருக்காது, புலிகளின் கையில் மட்டுமேயிருக்கும் ஆயுதமாகவும் இருக்கும். 1984களின் இறுதியில் இப்படித்தான் புலிகளிடம் ஆர்.பி.ஜி வந்து சேர்ந்தது. அதைப்பற்றி இந்த தொடரின் ஆரம்பத்தில் விபரமாக குறிப்பிட்டுள்ளோம். அதனால் அதைப்பற்றி மீண்டும் குறிப்பிடவில்லை.

புலிகளிடம் வந்தவை வெகு சில ஆர்.பி.ஜிக்கள்தான். அவற்றில் ஒன்றை அச்சுவேலியில் புலிகளின் முகாமை சுற்றிவளைத்தபோது இராணுவம் கைப்பற்றி விட்டது. அந்த சம்பவத்தில்தான் புலிகளின் அப்போதைய நிதிப்பொறுப்பாளராக இருந்த பண்டிதர் மரணமாகினார்.

சில ஆர்.பி.ஜிக்கள்தான் இருந்தன. அப்போதைய நிலைமையில் ஈழப்போரில் பயன்படுத்தப்பட்ட அதிசக்தி வாய்ந்த ஆயுதமும் அதுதான். ஆனால் நினைத்தபடி அதை அதிகமாக பெற்றுக்கொள்ளும் வசதியும் புலிகளிடம் இருக்கவில்லை. ஆனால் ஆர்.பி.ஜியை போல நிறைய ஆயுதங்கள் இருந்தால் நல்லதென புலிகள் நினைத்தனர்.

அப்பொழுது நடந்த ஒரு நகைச்சுவை சம்பவத்தை குறிப்பிடுகிறோம். பிரபாகரனின் நகைச்சுவை உணர்விற்கு இது நல்ல உதாரணம். போராளிகளுடன் மனம் திறந்து உற்சாக மனநிலையில் பேசும்போது, இறுதிக்காலம் வரைஇந்த நகைச்சுவை சம்பவத்தை அடிக்கடி குறிப்பிடுவார்.

ஆர்.பி.ஜியை போல ஒரு ஆயுதம் தயாரிக்க வேண்டுமென அப்பையா அண்ணை விரும்பினார். அப்படியொரு ஆயுதத்தை வெற்றிகரமாக தயாரித்து விட்டால், எல்லா பிரச்சனையையும் முடித்து விடலாமென அவர் நினைத்திருக்கலாம்.

இரவுபகலாக முயற்சித்து ஒரு ஆயுதமொன்றை உருவாக்கினார்.

(தொடரும்)

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

# மூன்று கில்லாடிகள்! 3

கதை, படம்: ராஜே

மூன்று கில்லாடிகளில் ஒருவனான மூரே, வேலை தேடி ஒரு பண்ணைக்குச் செல்கிறான். செல்லும் வழியில் குதிரை லாடம் சரியில்லாததால் ஒரு வீட்டில் தங்கி ஓய்வுகொள்ள, அச்சமயம் பனிப்புயல் வீசத் தொடங்கியது. அந்த வீட்டிலுள்ளவர்களை வெளியேறச்செய்து, பனிப்பாறை சரிவிலிருந்து தப்பி, பயணத்தை மேற்கொள்கிறார்கள்.


























# 18 சென்றதும் வென்றதும்!

## அமெரிகோ வெஸ்புகி

"ஒரு வேலையை ஒழுங்காகச் செய்யத் தெரியாதா உனக்கு?"

அமெரிகோ வெஸ்புகியை அறிந்தவர்கள் அனைவரும் இந்தக் கேள்வியை அவரிடம் ஒரு முறையாவது கேட்டிருப்பார்கள். ஒரு வேலையில் அப்போதுதான் சேர்ந்திருப்பார். அடுத்த முறை பார்க்கும்போது, இன்னொரு வேலையில் இருப்பார். "நகைக் கடையில் சேர்ந்திருக்கிறேன்" என்பார். பிறகு, "அது சரியில்லை, இப்போது சொந்த பிஸ்னஸ் செய்கிறேன்" என்பார்.

இப்படி அங்கே இங்கே எனச் சுற்றித் திரிந்தவருக்கு 45 வயதில் கடல் மீது ஆர்வம் வந்தது. இனி கடல்தான் என் வாழ்க்கைஎன்று அவர் அறிவித்தபோது, நண்பர்கள் நம்பவில்லை. இன்னும் சில மாதங்களில் கப்பலை மறந்துவிட்டு வேறு வேலையில் இருப்பார் என்றார்கள். அதைப் பொய்யாக்கினார் அமெரிகோ. கடல் மீதான ஆர்வம் நாளுக்கு நாள் அதிகமானது. வெகு சீக்கிரத்திலேயே முக்கியமான கடல் பயணியாக மக்களிடம் அங்கீகாரம் பெற்றார்.

கரீபியன் தீவுகள் அமெரிகோவைக் கவர்ந்தன. சுற்றிப் பார்க்க வேண்டும் என்று தொடங்கிய ஆர்வம், நாள்பட நாள்பட அதிகரித் தது. கிழக்கிந்தியத் தீவுகள் குறித்தும் இந்தியா குறித்தும் இதுவரை கண்டு பிடிக்கப்படாத பகுதிகள் குறித்தும் கனவு காண ஆரம்பித்தார்.

அமெரிகோ, கடலை நேசிக்க ஆரம்பித்தது 1499ம் ஆண்டு. அதாவது, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தாகச் சொல்லப்படும் 1492 ம் ஆண்டுக்குப் பிறகு. கொலம்பஸ் கண்டுபிடித்தது அமெரிக்காவை அல்ல, பஹாமாஸ் தீவுகளைத்தான். அதையே அமெரிக்கா என்று நினைத்திருந்தார்.

கொலம்பஸின் தவறைச் சுட்டிக் காட்டியவர்களில் முதன்மையானவர், அமெரிகோ. 1501ம் ஆண்டு, தற்போதைய தென் அமெரிக்காவில் உள்ள 'பேடகோனியா' என்னும் பகுதிக்கு அமெரிகோ வந்து சேர்ந்தார். ரியோ டி ஜெனிரோ பகுதியையும் பார்த்தார். இந்தப் பகுதிகள் ஆசியாவில் இருந்து பெரிதும் வேறுபட்டிருந்ததைக் கண்டார். இந்தப் பகுதிகள், ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இதுவரை அறிமுகமாகாதவை என்பதையும் அவர் தெரிந்துகொண்டார்.

'கொலம்பஸ் கண்டடைந்தது இந்த அமெரிக்காவை அல்ல' என்று தன் கண்டுபிடிப்பை அமெரிகோ சொன்னபோது உலகம் திகைத்துப் போனது. 'இப்போதுதான் கப்பலில் காலடி எடுத்து வைத்திருக்கும் ஊர், பேர் தெரியாத ஒரு மாலுமி, கொலம்பஸையே தவறு என்று சொல்கிறாரே? கொலம்பஸைக் காட்டிலும் திறமையானவரா இவர்? அவரையே மறுத்துப் பேசும் அளவுக்கு இவர் வளர்ந்துவிட்டாரா?' என்று நினைத்தார்கள்.

அமெரிகோ உறுதியாக இருந்தார். 'என்னை நம்புங்கள், கொலம்பஸ் புதிதாக எதையும் கண்டுபிடிக்கவில்லை. அவர் கிழக்கிந்தியத்தீவுகளுக்கு மட்டுமல்ல, ஆசியாவுக்கே சென்றது இல்லை' என்று சாதித்தார். 'அமெரிக்கா' என்று இன்று அழைக்கப்படும் பிரதேசம் தனி கண்டமல்ல; அது இரண்டாகப் பிரிந்து கிடக்கிறது என்று அறிவித்தார் அமெரிகோ. வட அமெரிக்கா என்பது தனியொரு பிரதேசம். தென் அமெரிக்கா தனி. இது கொலம்பஸுக்குத் தெரியவில்லை. ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாட்டில் இருப்பவர்களுக்கும் தெரியவில்லை என்பதை அமெரிகோ புரியவைத்தார்.

அமெரிகோ இத்தாலியில் பிறந்தவர். ஆனால், அவருடைய கடல் பயணங்களை ஆதரித்தவர், ஸ்பெயின் அரசரான ஃபெர்டினாண்ட். கொலம்பஸுக்கே சவால்விடும் அமெரிகோவால் நிச்சயம் சாதனைகளைப் படைக்க முடியும் என்று அரசர் நம்பினார். கப்பலைச் செலுத்த கற்றுத்தரும் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தொடங்கி, அமெரிகோவை அதற்கு பொறுப்பாக்கினார். அமெரிகோவின் ஆர்வம் பல மடங்கு அதிகரித்தது. தன்னுடைய கடல் பயணங்கள் மூலம், புதிய விஷயங்களைக் கற்று, மக்களிடம் பகிர்ந்துகொண்டார். அமெரிகோவை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக நம்பவும் மதிக்கவும் தொடங்கினர். ஒரு கட்டத்தில் அமெரிகோவை விட்டால், இந்த உலகைப் புரிந்துகொள்ள வேறு வழியே இல்லை என்னும் அளவுக்கு உயர்வான இடத்தை அளித்து மரியாதை செலுத்தினார்கள். அமெரிகோவும் புதிது புதிதாகப் பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினார். வரைபடங்களைத் திருத்தினார். புதிய வரைபடங்களை உருவாக்கினார். கடல் பயணத்தை மேலும் துல்லியமாக, அறிவியல்பூர்வமாக மாற்றமுடியுமா என்று ஆராய்ந்தார்.

பயணம் மேற்கொள்ளும்போதே, தன்னுடைய ஐரோப்பிய நண்பர்களுக்கு கடிதங்கள் எழுதினார் அமெரிகோ. தான் . கண்ட புதிய பிரதேசங்களை அதில் விவரித்திருந்தார். பழங்குடி மக்களின் நடை, உடை, உணவு வழக்கங்களையும் அவர் பகிர்ந்துகொண்டார். அவர்களுடைய கடவுள் யார், அந்தக் கடவுளை எப்படி வழிபடுகிறார்கள் என்பதையும் எழுதினார். அமெரிகோ எழுதிய கடிதங்களும் கட்டுரைகளும் திரட்டப்பட்டு புத்தகங்களாக வெளிவரத் தொடங்கின. அமெரிகோவின் புகழ் மேலும் பரவியது.

1507ம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று வெளிவந்த வரைபடத்தில்தான் முதல் முறையாக அமெரிக்கா என்னும் பெயர் பயன்படுத்தப்பட்டது. ஆம், கொலம்பஸ் அல்ல அமெரிகோவே புதிய கண்டத்தைக் கண்டுபிடித்தார் என்பதால், அவர் பெயரை அந்தக் கண்டத்துக்குச் சூட்டுவதுதான் சரியானது என்று இந்த வரைபடத்தை உருவாக்கிய ஜெர்மனியர் ஒருவர் நினைத்தார். அதுவரை அந்தப் பிரதேசங்களுக்கு 'புதிய உலகம்' என்னும் பெயர்தான் இருந்தது. சிலர் வெவ்வேறு பெயர்களை வைத்திருந்தார்கள்.

அந்தப் புதிய உலகத்தை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் விவரித்தவர், அமெரிகோ வெஸ்புகி என்பதை உலகம் ஏற்றுக்கொண்டது. அமெரிக்கா என்பது ஒரு கண்டமல்ல, இரண்டு கண்டங்கள் என்பதையும் அவரே கண்டுபிடித்தார். எனவே, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்று இரு பெயர்களில் அந்தப் புதிய உலகம் பிரிக்கப்பட்டது.

கொலம்பஸின் தவறைக் கண்டறிந்தவர், அந்தத் தவறைச் சரிசெய்தவர் என்னும் பெயரும் அமெரிகோவுக்கு வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகும் அமெரிகோ தொடர்ந்து பல பயணங்களை மேற்கொண்டார் என்றாலும், அவை பற்றிய செய்திகள் நமக்கு அதிகம் கிடைக்கவில்லை.

ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். 'ஒரு வேலையை ஒழுங்காகச் செய்யத் தெரியாதா உனக்கு?' என்று அதற்குப் பிறகு ஒருவரும் அமெரிகோவைப் பார்த்து கேட்டிருக்க மாட்டார்கள்.

(பயணம் தொடரும்)

- அமெரிகோ பள்ளிக்கூடம் சென்றதே இல்லை. தனிப்பட்ட முறையில் உறவினர்களிடம் பாடங்கள் படித்துக்கொண்டார்.
- தனது 20-வது வயதில் முதல்முறையாக அவர் பாரிஸ் சென்றார்.
- கிறிஸ்டாபர் கொலம்பஸின் கப்பல்களைத் தயார்செய்யும் பணியில் ஈடுபட்ட பலரில் அமெரிகோவும் ஒருவர். கொலம்பஸின் பயணக் குறிப்புகள் அமெரிகோவைக் கவர்ந்தன.
- அமேசான் ஆறு, அமெரிகோவால் கண்டறியப்பட்டது என்று சிலர். சொல்கிறார்கள்.
- 1931-ம் ஆண்டு, அமெரிகோவின் பெயரால் ஒரு கப்பலை உருவாக்கியது இத்தாலி. 2012-ம் ஆண்டு நாணயங்களில் அவர் உருவம் பொறிக்கப்பட்டது.

19-ம் பக்க தொடர்ச்சி...

அவர்கள் தொடர்ச்சியாக என் மீது தாக்குதல் நடாத்தியிருந்தனர்.

என் உடலில் பல இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களை திருப்பி தாக்கிய துடன் அவர்களது இரும்பு பைப் ஒன்றையும் பறித்தெடுத்திருந்தேன். அச் சமயத்தில் சிலர் என்னை இழுத்து சென்று அருகில் இருந்த வாகனமொன்றோடு இழுத்து வைத்திருந்தனர்.

இதன்போது முச்சக்கரவண்டியில் வந்த பொலிஸார் என்னை நோக்கி துப்பாக்கியை சூடுவதற்காக முயற்சித் தார்கள். இதன்போது எனது சித்தப்பா என்னை கட்டியனைத்துக்கொண்டார். இதனால் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகமானது எனது சித்தப்பாவின் உடலை துளைத்து சென்றது. அப்போது அவர் சிறிது தூரம் ஓடிச் சென்று கீழே வீழ்ந்துள்ளார்.

இதன் பின்னர் நான் என்னை தாக்கியவர்களில் ஒருவரை மடக்கி பிடித்துக்கொண்டு துப்பாக்கி சூட்டினை நடாத்திய பொலிஸாரிடம், ஏன் என்னை சுட்டீர்கள் என கேட்ட போது அப் பொலிஸ் உத்தியோகத்தர் எனது சேட்டை பிடித்துக் கொண்டு நான் பிடித்து வைத்திருந்த நபரை தப்பித்து போகுமாறு கூறி அவரை விடுவித்திருந்தார்.

அச் சமயத்தில் எனது உறவுக்காரர் ஒருவர் அவ்விடத்திற்கு வரவே, அவரிடம் நான் இவர் தான் சுட்டார் என கூறும் போது அதற்கு அந்த பொலிஸ் நான் தான் சுட்டனான் என்று கூறியதோடு அவர் மீது கைத்துப்பாக்கியை காண்பித்து மிரட்டினார் எனத் தெரிவித்தார். இதே போன்றே அங்கிருந்த பலரும் தெரிவித்துள்ளதுடன் தற்போது பொலிஸார் தமக்கு ஏற்றது போல பொய்யான கதையொன்றை திரிவு படுத்தியுள்ளதாகவும் தெரிவித் துள்ளனர். அத்துடன் துப்பாக்கி சூட்டை நடாத்தியது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பண்டார என்ற பொலிஸ் சார்ஜனே எனவும் தெரிவித்துள்ளனர்.

அவ்விடத்தில் தேவாலயத்திற்கு வந்த பொதுமக்கள் ஒன்றுகூடவே உடனடியாக துப்பாக்கி சூட்டை நடாத்திய பொலிஸ் உத்தியோகத்தர் தனது பொலிஸ் இலக்கத்தை உடனேயே கழற்றி வைத்துவிட்டு பிறிதொரு பொலிஸ் அதிகாரியுடன் மோட்டார் சைக்கிளில் சென்றதாகவும் சம்பவத்தை நேரில் கண்ட பொது மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் சம்பவம் இடம்பெற்று சில நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிஸார் துப்பாக்கி குண்டுகளின் வெற்று ரவைகளை எடுத்து செல்ல முற்பட்டதையடுத்து அவற்றை தாம் எடுத்து வைத்துக்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெறுவதற்கு காரண மான குழு மோதல் சம்பவம் தொடர்பாக ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் இம் மோதல் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவரும் மற்றும் மூவருமாக ஐந்து பேர் இம் மோதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வரு கின்றது.

### மனிதவுரிமை குழு விசாரணை


இத் துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட மனித வுரிமை ஆணைக்குழுவின் இணைப் பாளர் ரீ.கனகராஜ் மல்லாகத்திற்கு நேரில் சென்று சம்பவம் தொடர் பான விசாரணைகளை மேற்கொண்டி ருந்தார்.

குறிப்பாக துப்பாக்கி சூடு இடம் பெற்ற பகுதிக்கு முதலில் சென்ற அவர் அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு தகவல்களை பெற்றுக்கொண்டார். இதனையடுத்து இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரது உறவினர் மற்றும் கைது செய்யப்பட்டவர்களது உறவினர்களை சந்தித்து தகவல்களை சேகரித்திருந்தார்.

இதன்போது அவரிடம் அவ் உறவினர்கள், இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களையும் உயிரிழந்த வரையும் வைத்தியசாலைக்கு தூக்கி சென்றஎமது பிள்ளைகளை பொலிஸார் மோதலில் ஈடுபட்டதாக கூறி கைது செய்துவிட்டதாக தெரிவித்தார்கள். இதனை தொடர்ந்து சம்பவத்தில் நேரடியாக தொடர்புபட்டிருந்த உயிரி ழந்தவரின் மருமகனான டெனிஸ்மன் மற்றும் நேரில் சம்பவத்தை கண்ட வர்களிடமும் கணகராஜ் விசா ரணைகளை மேற்கொண்டிருந்தார்.

### மனித உரிமை குழுவிடம் கோரிக்கை

மல்லாகம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை காப்பாற்றிக் கொண்டு அப்பாவிகளையே பொலிஸார் கைது செய்வதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ள அப்பகுதி மக்கள் பறிக்கப்படும்



உரிமைகள் பாதுகாக்கப்பட்டு நீதி கிடைக்க வேண்டுமென்றும் வலியுறுத் தியுள்ளனர்.

அங்கு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காணமடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வர்களையே குற்றச்சாட்டில் பொலி ஸார் கைது செய்துள்ளதாகவும் துப்பாக்கியால் சுட்ட பொலிஸாருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ் சாட்டியிருந்தனர். இவ்வாறு ஒரு உயிரைக் காப்பாற்றச் சென்றவர்களை குற்றவாளிகளாக்குகின்ற பொலிஸார் துப்பாக்கி சூட்டை நடத்திய பொலிஸ் அதிகாரிக்கு எடுத்த நடவடிக்கை தான் என்ன என்றும் கேள்வியெழுப்பினர்.

மேலும் பொது மக்களான எங்க ளுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டிய பொலிஸாரே எங்களை கொலை செய்வதா. இவ்வாறு பாதுகாப்பில்லாத நிலையில் இருக்கின்ற எங்கள் பிள்ளைகள் உறவுகள் மீது பொலிஸார் திட்டமிட்ட கட்டுக் கதைகளை கூறி கைது செய்கின்றனர். ஆகவே பறிக்கப்பட்டதும் பறிக்கப்படுகின்றது மான எங்களது உரிமைகள் பாது காக்கப்பட்டு எமக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் கண்ணீர் மல்க கேட்டக் கொண்டனர்.

### மனித உரிமை குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக தொடர்புபட்ட தரப் பினர்களிடம் அறிக்கைகள் மற்றும் தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் இதற்கு முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ச் சியாக அவதானம் செத்தி வருவதாகவும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.,

இத் துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக நேரில் சென்று சகல விடயங்களையும் அவதானித்து தேவை யான தகவல்களை சேகரித்துள்ளோம். குறிப்பாக கொல்லப்பட்ட நபரது உறவினர்கள் நேரடியாக பாதிக்கப் பட்டவர்கள் ஆகியோரிடம் தகவல் களை பெற்றிருக்கின்றோம்.மேலும் இச் சம்பவத்துடன் தொடர்புபட்டதான குழுக்களிற்கு இடையிலான மோதல் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வர்களிடமும் தகவல்களை பெற்றுள் ளோம்.

அதேபோன்று இச் சம்பவம் தொடர் பில் நேரில் கண்ட பொது மக்களது சாட்சியங்களை தெல்லிப்பழை பொலிஸார் பதிவு செய்திருக்கவில்லை. எனவே நேரில் கண்ட பொது மக்களது சாட்சியங்களையும் பதிவு செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத் தியிருந்தோம்.இவை தவிர சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் தான் வெளியே சென்றமை, துப்பாக்கிகளை எடுத்து சென்றமை தொடர்பான விடயங்களை தகவல் புத்தகத்தில் பதிவு செய்துள்ளாரா என்பது தொடர் பாகவும் தகவல்களை பெற்றுள்ளோம்.

### துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவரிடம் விசாரணை

இதேவேளை இத் துப்பாக்கி பிரயோகத்தை மேற் கொண்டிருந்த சுன்னாகம் பொலிஸ் சார்ஜனிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அவரிடம் சம்பவம் தொடர்பான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் மூத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### காயப்பட்டவரின் வாக்குமூலம்

நான் எனது சகோதரரனைப் பார்ப் பதற்காகச் சென்றிருந்தேன். அங்கு நின்றவர்கள் என்னைத் தாக்கினார்கள். அவ்வாறு என்னை வீதியில் வைத்து தாக்குகின்ற போதே அந்த வீதியால் வந்த பொலிஸார் என்னைக் காப்பாற்றி னார்கள். ஏன் எனில் அவர்கள் வராவிட்டால் அங்கு நின்றவர்கள் என்னை அடித்தே கொன்றிருப்பார்கள். ஆகவே பொலிஸ் வந்ததால் நான் காப்பாற்றப்பட்டிருக்கிறேன் என அவர் தன்னுடைய வாக்குமூலத்தை பொலிஸாருக்கு வழங்கியிருக்கின்றார்.

### தொடரும் கைதுகள்?

இச்சம்பவத்துடன் தொடர்புடைய தாக இரண்டு தரப்பிலும் 60 பேர் காணப்படுவதாகவும் அவர்களில் 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளைத் தொடர இருப்ப தாகவும் கூறிப்படுகிறது. உயிரிழந்தவரின் மரணச் சடங்குகள் முடிவடைந்த பின்னர் இந்தக் கைதுகள் ஆரம்பிக் கப்படுமென பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மரணத்திற்கான காரணம்

உயிரிழந்தவரது பின் கீழ் பகுதியில் இடது பக்கமாக துளைத்து சென்ற துப்பாக்கி குண்டானது அவரது இடது முன்பக்கமாக சுவாசப்பையை துளைத்து சென்றுள்ளது. இதனால் சுவாசப் பையானது முற்றாக சேதமடைந்தமையால் அதனூடாக ஏற்பட்ட இரத்த பெருக்கே மரணம் நிகழ்வதற்கான காரணமாகியுள்ளது.

மேலும் குறித்த நபரது உடலில் மோதல் இடம்பெற்றதுக்கான சான்றுகள் இருப்பதாகவும் குறிப்பாக அவரது நெற்றிப் பகுதியில் அடி காயம் காணப்படுவதுடன் கண்ணின் கீழ் பகுதியிலும் காயமொன்று காணப்படுகின்றது.

இவை தவிர உடலின் தோள் மூட்டு பகுதியில் கண்டல் காயங்களும், இடது பக்க கையில் துப்பாக்கி குண்டானது உராய்ந்து சென்ற காயமும் காணப் பட்டுள்ளது. அத்துடன் அவர் அணிந்திருந்த ரீ.சேட்டானது கிழிந்த நிலையில் காணப்பட்டிருந்ததாகவும் சட்ட வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இறுதிச் சடங்கு

உயிரிழந்தவரின் சடலம் 24 மணி நேரத்தின் பின்னராக வைத்திய சாலையிலிருந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த இறுதிச் சடங்கில் குழப்பங்கள் வன் முறைகள் ஏற்படலாமென்ற பதற்றமான தொரு சூழ் நிலையிலும் மிக அமைதி யான முறையில் பெருந்திரளான மக்கள் கண்ணீருடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தொடரும் சர்ச்சை

இதே வேளை 2016..10. .20 கொக்கு விலில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸ் சுட்டுக்கொலை. (போதையில் இருந்ததால் மறிக்க ஓடினார்கள்) சம்பவத்தின் போது அங்கு கடமையில் இருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது. 2017.07.09 துன்னாலையில் (கள்ள மணல்) கொண்டு போனது போது நெல்லியடி பொலிஸ் சுட்டு ஒருவர் கொலை. கடமைக்கு சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது. 2017.10.22 மணியம்தோட்டத்தில் பொலிஸ் விசேட அதிரடி படையினர் சுட்டு ஒருவர் கொலை (கஞ்சா வாங்கி வந்த போது) கடமைக்கு சென்ற இரு பொலிஸ் அதிரடி படையினர் கைது.

2018.06.17 மல்லாகத்தில் இரு குழுக்கள் மோதல்பொலிஸ்சுட்டுஒருவர்கொலை (மரணவிசாரணையில் இரண்டு வெடி காயம். போதையில் இருந்துள்ளார். முகத்தில் பொல்லுகளால் அடிபட்ட தழும்புகள். ஆடைகள் இழுபட்ட கிழிவுகள்) எல்லா சம்பவங்களிலும் குற்றம் ஒன்று நடந்ததுதான் இருக்கிறது என்பதை மறுக்க முடியாதுதான்.


வாள்வெட்டு கும்பல் அடக்கப்பட வேண்டியதுதான். ஆனால் உயிர்ப்பலி எடுத்தல்ல.


சஹானா சிற்பாலயம்
அன் விஷ்வ பிரமா கட்டடக்கலைக் கூடம்
சிறந்த முறையில் சிற்ப வேலையை செய்து
தருபவர்களும் கட்டிட ஒப்பந்தகாரர்களும்
பிரம்மஸ்ரீ K.பாண்டியன்
தொலைபேசி எண்: 0758512734
அரச சிற்ப கலைக் கல்லூரி
தென்காசி, தமிழ்நாடு, இந்தியா
கிளை விலாசம்
சஹானா சிற்பாலயம்
V H லேன், இருபாலை கிழக்கு
கோப்பாய்
கற்பக பிள்ளையார் கோவில் அருகாமை,
பருத்தித்துறை வீதி, இருபாலை
N.பாபு தொலைபேசி எண்: 0779581730, 0778200829


குடும்பத்துடன் குதூகலமாக சுவைத்து மகிழ்ந்திட...
வேலருவி குளிரகம்
வேலருவி ஐஸ்கிறீம்
Velaruvi Icecream
இத்துடன் கப் யூஸ்கள் தயாரிக்கப்பட்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்கப்படுகின்றது
உரிமையாளர்: வே.சந்திரன் இல,199 ஆனந்தநகர், கிளிநொச்சி.
தொலைபேசி: 0770783296, 0215681964, 0773915224


அனைத்து வகையான உணவுகளை Self Service
மூலம் உண்டு மகிழ்ந்திட முல்லைத்தீவில் நீங்கள்
நாட வேண்டிய ஒரே உணவகம் கோல்டன் கபே
கோல்டன் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையம்
உங்களுக்குத்
தேவையான
அனைத்து
நிகழ்வுகளுக்கும்
ஐஸ்கட்டிகள் மற்றும்
ஐஸ்கிறீம் வகைகள்
போன்றவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்: ஆ.ஞானசீலன்
பிரதான வீதி, முல்லைத்தீவு.
0765342368


S.N.R காமாட்சி ரெஜிபோம்
கட்டிங் வேக்ஸ் சொப்
அன் போட்டோ வீடியோ
அனைத்து
வடிவமைப்புக்களில்
திருமணவைபவம்,
பூப்புனித நீராட்டு விழா
வைபவம், புதுவீடு
இத்தியடி பிள்ளையார் கோவில் வீதி
சங்கத்தானை, சாவகச்சேரி
T.P : 077-3188659



# KIRUBAA LEARNERS

KIRUBA A LEARNERS

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## நல்ல சாரதி நாட்டுக்கு தேவை.

இன்றே கிருபா லேணர்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள்.

**யாழ்ப்பாணம்**

முதலாம் கட்டைச் சந்தி
பருத்தித்துறை
021 4923201
071 4546961

இல 227/6 கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் (மதவாடி அண்மையில்)
021 224 2022
071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550
071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

யாழ்.கச்சேரியடி,
யாழ்ப்பாணம்
39, நல்லூர் வீதி
021 222 6699
076 722 5292

ஓம் பிளாசா
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688
077 242 2622

**கிளிநொச்சி**

ஏ9 கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியச்சந்தி
பூநகரி
021 320 1818
070 333 7171

புளியடிச்சந்தி
முல்லைவீதி, விசுவமடு
021 320 1515
071 454 6955

**வவுனியா**

நாச்சிகுடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்
021 300 6544
070 333 6161

216, ஏ9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777
077 710 0444

**மன்னார்**

இல 94, பிரதான வீதி
மன்னார்
023 225 1656
077 847 2732

பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்

தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292

## பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து)

**சேவைகள்:**

- ✓ அங்கத்தவர் விபத்து நல, ஓய்வு திட்டம்
- ✓ மரண சகாய உதவ திட்டம்
- ✓ பணியாளர் நல திட்டம்
- ✓ பாலர் முன்கல்விச் சேவை
- ✓ உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையம்





தலைமைப் பணிமனை
கண்டி வீதி, பளை

தலைவர் பணிப்பாளர், அங்கத்தவர்கள்
பொதுமுகாமையாளர், பணியாளர்கள்

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது...
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை...
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை...

# அருள்

## குளோபல் எக்ஸ்பிறஸ்

அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்



சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக்கட்டடம்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி .
0764431576

கிளிநொச்சி
இல 10 கரடிப்போக்கு,
கிளிநொச்சி,
0764431576

நெல்லியடி
இல 01 பெற்றோல் செற் லேன்,
நெல்லியடி
0764431576


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 24.06.2018 அன்று வெளியிடப்பட்டது.